பசும்படம்

ன் '53.. 12 அணா

ஸீ. ஸீ. புரொடக்ஷன்ஸ்

முயற்சி

...ரிப்பு & டை...: ஜோசப் பள்ளிப்பாட்

திரையிடத் தயார்!
சினிமா உலகிலேயே
புதுமைப் புரட்சி
முற்றிலும் மாறுபட்ட கதைப்போக்கு
ஸ்டூடியோ:
வாஹினி
மின்மினி
MINMINI
தமிழ்ப்படம்
தயாரிப்பு:
R.A.L. டென்னகூன்
புரொடக்ஷன்ஸ்
யோகமங்களம்
மேனகா. விஜயகும
எஸ். கிருஷ்ண சா
கிருஷ்ண சர்மா
மற்றும் பலர்
MUTHU
R. A. L. டென்னகூன் புரொடக்ஷன்ஸ், 1
க்தாள் தெரு-சென்னை

49
3-53

படம் 41
காட்சி 10

பேசும் படம்

ஜூன் 1953

பொருளடக்கம்

1.	கார்ட்டூன்	... 2
2.	'பேசும் படம்' பேசுகிறது	... 3
3.	ஸ்டூடியோ விஜயம்	... 4
4.	இம்மாத நக்ஷத்திரம்	... 15
5.	மாதுரிதேவி – மூவர்ணப் படம்	... 18
6.	கிருஷ்ணகுமாரி – மூவர்ணப் படம்	... 19
7.	குமாரி கிருஷ்ணா–வாழ்க்கைச் சித்திரம்	... 20
8	பெற்ற தாய் – திரைக்கதை, வசனம்	... 28
9.	'ஔவையார்' தயாராகிறாள்	... 32
10	படக்காட்சிகள்	... 38
11.	பெற்றதாய்–இரு வர்ணப்பட அநுபந்தம்	... 45
12.	ஜெனோவா–இரு வர்ணப்பட அநுபந்தம்	... 49
13.	செய்திச் சுருள்	... 53
14.	கேள்வி–பதில்	... 57
15.	நான் ரஸித்த காட்சி	... 62
16.	தபால் பெட்டி	... 67
17.	ஜெனோவா – திரைக்கதை, வசனம்	... 72

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at RAMANATH PRESS, 188, Royapettah High Road, Madras - 14. (Phone: 86001) Proprietors: RAMANATH PUBLICATIONS. Managing Editor: T. V. Ramanath. Sole Agents for Ceylon: Mohan & Co., Ltd., 66, First Cross Street, Colombo. Sole Agent for Malaya: P. Sivaguru, 27, Scott Road, Kuala Lumpur and 8, China Street, Penang.

Editorial & Publication Offices:

188, Royapettah High Road, Madras - 14

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD

97675
சென்னை-600 008.

நடிகையின் கணவன்: *சீச் சீ!* எப்போ பார்த்தாலும் வீட்டிலேயே அடைஞ்சு கிடந்து, வரவங்களுக்கெல்லாம் பதில் சொல்லி சலிச்சுப் போயிட்டுது. இன்னிக்காவது கொஞ்சம் காத்தாட பீச்சுக்குப் போயிட்டுவரேன்.

JL
M211,N42,P
N53.11.10

'பேசும் படம்' பேசுகிறது

சிந்தியுங்கள்

சமீபத்தில் ஜப்பான் முதலிய கீழ் நாடுகள் சென்று திரும்பிய ஸ்ரீ. ஏவி. மெய்யப்ப செட்டியார் தமக்களிக்கப்பட்ட வரவேற்பில் பேசிய போது, 'ஜப்பானில் ஐம்பது, அல்லது அறுபது ஆயிரம் ரூபாய்களில் படம் பிடித்து விடுகிறார்கள்' என்றார்.

ஜப்பானின் இந்த முறையைப் பலரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இன்று நமது தென்னிந்திய சினிமாத் தொழில் கவலைக்கிடமான நிலையில் இருக்கிறது. ஒன்றுக்குப்பின் ஒன்றாக முட்டி மோதி அவசரப்பட்டு வெளியே வரும் படங்கள், வந்த அவசரத்திலேயே திரும்பி விடுகின்றன.

இந்த நிலையை மாற்ற உடனே ஏதாவது அதிர்ச்சி வைத்தியம் செய்ய வேண்டும். அப்படியானால் என்ன செய்ய வேண்டும்?

(1) படப்பிடிப்புச் செலவைக் குறைக்க வேண்டும்.

(2) தியேட்டர் கட்டணங்களைக் குறைக்க வேண்டும்.

(3) பட முதலாளிகள் ஒற்றுமையாக ஒத்துழைக்க வேண்டும்.

(4) இத்தொழில் சம்பந்தப்பட்ட அனைவர் உள்ளத்திலும் தர்மசிந்தனையும், நியாய புத்தியும் இருக்க வேண்டும்.

இந்த நான்கு திட்டங்களையும் கடைப்பிடித்து நிறைவேற்றினால் நிச்சயமாக நமது சினிமாத் தொழிலுக்குக் குறைவேற்படாது.

(1) படப்பிடிப்புச் செலவைக் குறைப்பதெப்படி? ஸ்டுடியோ வாடகையும், நக்ஷத்திர சம்பளமும் குறைய வேண்டும். அனாவசியக் காட்சிகளையும், ஆடம்பரக் காட்சிகளையும் நீக்க வேண்டும். படாடோபச் செலவுகளைப் போக்க வேண்டும்.

(2) தியேட்டர் கட்டணங்கள் சரிபாதி குறைய வேண்டும். ஏனெனில் முன்போல ஜனங்களிடம் பணப்புழக்கம் கிடையாது.

(3) பட முதலாளிகளின் ஒத்துழைப்பும், ஒற்றுமையும் தான் இத்தொழில் உயிரோடிருக்க மகா அவசியம். போட்டா போட்டியின்றி, ஒவ்வொருவராக, இடைவெளி கொடுத்து, ஒவ்வொரு படமாக வெளியிட வேண்டும்.

(4) சினிமாத் தொழில் சம்பந்தப்பட்டவர்களுக்கு தர்ம சிந்தனையும், நியாய புத்தியும் வேண்டும் என்று கூறும்போது யாருக்காவது கோபம் வரலாம். 'பரவாயில்லை!' என்ற தைரியத்திலேயே இதை எழுதுகிறோம். பட முதலாளிகளுககுப் பேராசை கூடாது. "அடுத்தவன் ஐம்பது லக்ஷம் போட்டு எடுத்தபடம் பப்படமாம்" என்று கூறிச் சிரித்துக் கொண்டு, தன் சகோதரத் தயாரிப்பாளரையே கேலி செய்தும், 'அந்தப் படம் எப்போ வருது? நாளைக்கா? சரி, நம்ம படத்தையும் நாளைக்கே, அவன் தியேட்டருக்கு எதிர்த் தியேட்டரிலேயே ரிலீஸ் பண்ணு" என்று எக்களிப்பதும் தற்கொலைக் கொப்பாகும்.

இவையெல்லாம் புரட்சிகரமான சீர்திருத்தமாகப் படுகிறதல்லவா? ஆனால் இத்தகைய மாபெரும் மாறுதல்கள் ஏற்பட்டாலன்றி தென்னிந்திய சினிமாத் தொழிலின் மந்தநிலை மறைய வழியில்லை.

ஐந்து வருஷங்களாகி விட்டன. வரப்போகும் ஆகஸ்ட் மாதத்தில் ஆருவது ஆண்டை நாம் கொண்டாடப் போகிருேம்.

ஆனுல் வழக்கத்தை விட இந்த வருஷம் ஆகஸ்ட் மாதம் பட ரஸிகர்களுக்கும், பட வுலகுக்கும் விசேஷமானது.

இந்தியா இன்றும் நாளேயும் சண்டையை வெறுக்கிறது; சமாதானத்தை விரும்பி வரவேற்கிறது.

கும்பினியார்கள் நம்மை அடிமைப் படுத்தும் முன்பே, தமிழகத்தை ஆண்டு வந்த முப்பெரும் வேந்தர்களின் காலத்திற்கும் அதற்கும் முன்புமிருந்தே தனிப்பெரும் இயக்கமாக இது வளர்ந்து வந்திருக்கிறது.

சமாதானத்தையே தன வாழ்க்கையின் லட்சியமாக, பரமனின் பக்தியே தன் மூச்சாகக் கொண்ட பூவரசி "ஔவையார்". சுதந்திரத் திருநாளில் ஜெமினியின் இப்படம் திரையிடப்படுவதற்காக ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

சென்ற மாதத்தில் ஒரு நாள் நான் ஜெமினிக்கு சென்றபோது 'ஔவையார்' ஏக தடபுடல்கள் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

அயல் நாட்டுக்குக் கிளம்பத் தயாராக நிற்கும் கப்பல் ஒன்றில் கடைசி நிமிஷத்தில் காணும் பரபரப்பு அங்கு தோன்றியது.

'ஔவையார்' வெளிக்கிளம்பத் தயாராகி விட்டாள் என்றதுமே விளம்பர இலாக்கா முழு மூச்சுடன் வேலையில் இறங்கியது. எடுக்கப்பட வேண்டிய ஒன்றிரண்டு காட்சிகளுக்கான ஜோடனைகளும் அபார வேகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வந்தன.

இந்த வகையிலே ஜெமினியின் பிரதான காரியாலயத்திற்கு நேரெதிராக உள்ள திறந்த வெளியில் பிரம்மாண்டமான ராஜவீதி ஒன்று நிர்மாணிக்கப் பட்டிருந்தது

இதன் ஒரு கோடியில் தொடு வானமும் அதை முட்டி இடித்து விடும் போன்ற கோயிலும் சித்தரிக்கப்பட்டிருந்தன.

நான் சென்றது இடைவேளை சமயம். அப்பொழுது காமிரா கோணம் நிர்ணயிக்கப்பட்டு வந்தது ஒரு குட்டியானை அந்த ராஜ வீதியின் மத்தியில் ஓட்டிக்கொண்டு வரப்பட்டது. அது பயங்கரமாகப் பிளிறிக் கொண்டு துதிக்கையை அப்படியும் இப்படியுமாக மாற்றி மாற்றி சுழற்றிக் கொண்டு வந்தது.

பாவம்! பசிநேரம் அதற்கும் வந்து விட்டது. அவ்வளவுதான் அது சாப்பாட்டைப் பார்க்க ஓடிய வேகத்தை நினைத்தால்தான் எனக்கு இன்னும் சிரிப்பு வருகிறது!

ஜோடனையின் குளோஸ்-அப்



மனைவியின் மகனுக்கான மாபெரும் நடனக்காட்சி ஜோடனை.

ஸ்டுடியோ விஜயம்

நமது விசேஷ காமிரா நிபுணர் ஸ்டுடியோக்களைச் சுற்றி வருகிறார்

ஆங்கிலேயனின் அடக்குமுறை ஆட்சியில் ஆண்டு ஆண்டாக அடிமைகளாகக் கிடந்து அல்லலுற்று வந்த நமக்கு 1947 – ஆகஸ்ட் மாதம் ஒரு அதிருஷ்ட மாதமாக அமைந்தது. அடிமைகளாக இருந்து வந்த நாம் சுதந்திர மக்களாகி ஆனந்தம் பொங்க நின்றோம்.

இன்றைய தினம் நாம் ஆட்சி நடத்த ஆரம்பித்து

ஔவையாருக்கென ஒரு பெரிய நடனமும் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்கான காட்சி ஜோடனையும் விரைவில் நிர்மாணிக்கப்பட்டு விடுமாம். இது முடிந்தால் 'ஔவை' முடிந்தமாதிரி தானும்.

'ஔவையார்' தடபுடலுக்கிடையே ஜெமினியின் தமிழ், தெலுங்கு தயாரிப்பான 'புரொடக்ஷன்ஸ்-9' படமும் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியின் படமும் இங்கு தயாராகி வருகின்றன.

* * *

ஆகஸ்ட் திருநாளைப் பற்றிக் குறிப்பிடும் போது ''மகாத்மா வாழ்க! நேருஜிக்கு ஜே!'' போன்ற வாழ்த்துக்களை மேற்படி தினத்தில் நிச்சயம் கேட்க முடியும் என்பதை நான் சொல்லித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது அவசியமில்லை.

ஆகவே ஆகஸ்ட் சிந்தனையிலே சென்று கொண்டிருந்த நான் திடுதிப்பென்று ரேவதி ஸ்டூடியோவில் நுழைந்த போது வானைப் பிளக்கும் வாழ்த்துக் கோஷம் என் காதைப் பிளந்தது.

...அக்கறையோடு சரி பார்க்கிறார் தயாரிப்பு நிர்வாகி செல்லப்பா.

இந்த 'அழகி'களை ..

''பூபதிக்கு ஜே! பூபதிக்கு ஜே!!'' என்ற கோஷம் ஸ்டூடியோவின் எட்டு திக்குகளிலும முட்டி மோதி எதிரொலித்தது.

அடேயப்பா! இந்த பூபதி இவ்வளவு புகழுக்குப் பாத்திரமானவரா? அப்படியானால் அந்த மனிதரை அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்கு எழுந்தது. அடுத்த நிமிஷம் அந்தப் 'பெரிய மனித'ரைப் பார்ப்பதற்காக நான் ரேவதியின் 'ஸெட்'டுக்குள் நுழைந்தேன்.

அங்கு நடுக்கூடத்திலே ஒரு சிறுத்தைக் குட்டி நிமிர்ந்து நின்று கொண்டிருந்தது. பயப்படாதீர்கள்! வைக்கோலால் நிரப்பப்பட்ட 'சிரஞ்சீவி'க் கன்றுகளைப் போலவே தோல்மட்டும் கொண்ட ஒரு சாதாரண பொம்மை அது. இந்த பொம்மைக்கு இருபுறமும் போடப்பட்டிருந்த சோபாக்கள் ஒன்றில் வெள்ளிப் பூண் போட்ட கைத்தடியுடன் ஒரு வயோதிகர்—சுமார் நாற்பது பிராயம் மதிக்கலாம்—உட்கார்ந்திருந்தார். அவருக்கு பக்-



அசோகா புரொடக்ஷன்ஸ் 'பத்மினி' வெளிப்புறக்காட்சியிலும்...

கத்தில் மற்றும் சிலர் உட்கார்ந்திருந் தார்கள்.

மற்ெறுரு சோபாவில் சில இளைஞர் கள் நெருக்கமாக சேர்ந்தாற் போல் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

இந்த இரண்டு சோபாக்களுக்கும் நேரெதிராக ஒரு மாடிவழி இருந்தது.

சுவர்களில் மான் தோல்களும், புலித் தோல்களும் ஆங்காங்கு மாட் டப்பட்டிருந்தன.

மாடிப் படியிலிருந்து ஒரு வாலி பன-அவன் பெயர் பேபி - இறங்கி வந்தான். 'ஓட்டைக் கப்பலில் வந்து இறங்கிய 'துரை மகன்' மாதிரி அந்த வாலிபன் இருந்தான.

இன்றைய தினம் 'பாஷன்' முறை களிலே தலை சிறந்ததாகக் காணப் படும் பூக்கள் போடப்பட்ட (பூக்கள் மட்டுமல்ல! மிருகஙகள், மரங்கள் இத்யாதி வகைகளும் துணியில அச் சடிக்கப்பட்டிருக்கும)சட்டையையும், தலையில் ஒரு அமெரிக்கன் குல்லா லவயும் மாட்டிக் கொண்டிருந்தான் அவன்.

பூபதியைப் பார்த்து, அவர் இவ் வளவு பெரிய மனிதர் என்பதை

...உட்புறக்காட்சியிலும் இவர்கள் கலந்து கொண்டார்கள்.





பானுமதி 'தமிழ்' படிப்பதை..

தெரிந்து கொள்ளும் ஆவலில் ரேவதியின செட்டுக்குள் முட்டி மோதிக் கொணடு சென்ற நான அங்கு சந்தடி எதுவுமின்றி எல்லோரும அடித்து வைதத சிலைகளைப் போல் நிற்பதைக் கண்டு திகைத்துப் போய் விட்டேன்.

நான் தேடிக் கொண்டு வந்த பெரிய மனிதர் யார்? என்பதை இநத பேசாத 'உயிர் சிற்பங்க'ளிலிருந்து எப்படி கண்டு கொள்ள முடியும்?

இந்த நிலைமை நீடித்து — எனக்கு அதனால் பிரதம் பிடித்து விடுமோ என்று பயந்தேன். நல்லவேளை! அந்த நிலைமை சில வினாடிக்குள் மாறி விட்டது.

இருந்தாற் போலிருந்து 'தடதட'வென்ற சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன்.

மாடிப் படியிலிருந்து வேகமாக இறங்கி வந்து கொண்டிருந்தான் பேபி அவன் இறங்கி வந்து சோபாவின் அருகில் நின்ருன்.

அவன் வருவதைப் பொருட்படுத்தாமல் அவர்கள் மெல்லிய குரலில் எதையோ பேசிக் கொண்டிருந்தனர்.

பேபி அவர்களுக்கருகில் வந்ததும் தனக்கு எதிரில் உள்ள சோபாவில் அமர்ந்திருக்கும் இளைஞர்களைப் பார்த்து, சற்று ஆத்திரமான குரலில் "பழைய பட்டப் பெயர்களை நினைவுபடுத்தி எங்கப்பாவை ஏன் பாழ்படுத்திறீங்க. அவருக்கு இநத 'பட்டம்' பதவி எலலாம் ஒன்றும் வேண்டாம் அவர் வெறும் பூபதிதான்" என்று சரமாரியாகப் பேசிவிட்டு "சொல்லுங்கள்! வெறும் பூபதிக்கு ஜே!!" என்று கையைத்தூக்கி தன் முழுப் பலத்துடன் கத்தினுன்.

அந்த இளைஞர்களும் "ஜே! ஜே!!" என்று கோஷமிடடார்கள்.

சற்றுமுன் அமைதி நிலவிய அதே இடத்தில் அணுகுண்டு வெடித்ததைப் போன்ற சப்தம் இப்பொழுது கிளம்பியது!

என் தலை கிறுகிறுத்து விட்டது காதைப் பொத்திக் கொண்டு பேசாமல் 'ஸெட்'டின் மறு மூலைக்கு மெள்ள நகர்ந்தேன் அந்த

'நண்பன்' சம்பந்தப் பட்டவர்கள்.

...ராமகிருஷ்ண 'சுட்'டார்

சில நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. எனக்கு நன்கு பரிச்சயமான முகங்கள் அங்கு தென்பட்டன.

கதாசிரியர் எஸ். டி. சுந்தரம், ஹாஸ்ய நடிகர் சிவதாணு மற்றும் பலரும் அங்கிருந்தனர்.

''என்ன ஸார்! காதைப் பொத்திக்கொண்டு வருகிறீர்கள்? என்ன விசேஷம்?'' என்று கேட்டார் ஒருவர்.

''இந்த 'ஜே' கோஷம்தான் காதை 'அவுட்'டாக்கிவிடும் போலிருக்கிறதே!'' என்றேன் நான்.

''என்ன ஸார்! இதையெல்லாம் விட பெரிய 'அவுட்டுச் சிரிப்பு' கட்டங்கள் இதில் வரப்போகிறது அப்பொழுது இந்தச் சிரிப்பானது இந்த அணுகுண்டுச் சப்தத்தைவிட தூக்கிஅடிக்கும்படி அமைந்துவிடும்!'' என்றார் எஸ் டி. சுந்தரம்.

பின்னர் அவர் எழுதிய நாடகமான மனிதனும் மிருகமும் படத்தில்தான் இந்தக் கட்டம் வருகிறதென்பதைத் தெரிந்து கொண்டேன்.

பேபி ஒரு அரைப் பைத்தியம். அவனது தகப்பனார் தேவேந்திர பூபதி ஒரு பெரிய பணக்காரர்; பெரிய வேட்டைக்காரரும் கூட தான் சுட்டுக் கொன்ற புலி சிறுத்தை ஆகியவற்றின் தோல்களைப் பதனிட்டு சுவற்றில தன் வீட்டில் தொங்க விடுவதிலும பஞ்சடைத்து பொம்மையாகச் செய்து நிறுத்துவதிலும் அவர் பெரு மகிழ்ச்சி கொண்டிருந்தார். அவருக்கு வேலைக்காரனுக அமருகிறான். 'டைகர்' 'வேலைக்காரப் புலி'யின் பெயர்கூட புலி என்பதிலிருந்து தேவேந்திர பூபதியின் 'மிருகப்பற்றை' நீங்களே தெரிந்து கொள்ளலாம்!

தேவேந்திர பூபதிக்கு கட்சிப் பற்று அதிகமாகி விடுகிறது. அறிவுக் கட்சி, காகா கட்சி என்ற இரு மாபெரும் கட்சிகள் ஒன்றில சேர்ந்துவிட முனைகிறார் பூபதி.

பட்டம் பதவிக்கு ஆசைப்பட்டு கட்சி கட்சி என்று தன் தந்தை



சரஸ்வதிக்கு ஹீராலால் நடனம் பயிலுவிப்பதை டைரக்டர் ஸ்ரீநிவாஸராவ் கவனிக்கிறார்.



சண்டிராணியில் வெளிப்புறக் காட்சி

உயிரை விடுவதை பேபி விரும்புவதில்லை. அதைத் தடுத்து நிறுத்துவதில் முனைகிறாள். இதற்காக அவரை வளையமிட்டு வருபவர்களை ஏசுகிறான் அவன்.

பூபதிக்கு பேபி எச்சரிக்கை செய்யும் இந்தக் காட்சிதான் அன்றைய தினம் படமாக்கப்பட்டது.

'மனிதனும் மிருகமும்' ரேவதியின் சொந்தத் தயாரிப்பு. கே. வேம்புவுடன், நாடகாசிரியரான எஸ். டி. சுந்தரமும் இப்படத்தை டைரக்ட் செய்து வருகிறார்.

மாதுரிதேவி, சிவாஜி கணேசன், கே. சாரங்கபாணி முதலியோர் இந்தப் படத்தில் நடித்து வருகின்றனர்.

* * *

சென்ற சில மாதங்களாக எனக்கும் ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டூடியோவுக்கும் 'ராசிப் பொருத்தம்' அவ்வளவாக அமைவதில்லை.

அதாவது நான் கோடம்பாக்கம் செல்லும் சமயங்களில் இந்த ஸ்டூடியோவில் படப்பிடிப்பு இருக்காது ஆகவே ஸ்டார் கம்பைன்ஸைக் காணும் போதெல்லாம் பெருமூச்சு விடுவேன்! அங்கு 'ஷூட்டிங்' எதுவும் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டதும் ஏமாற்ற உணர்ச்சி என்னை அறியாமலேயே பற்றிக் கொண்டு விடும்.

ஸ்டார் கம்பைன்ஸில் ஏற்படக் கூடிய வழக்கமான அம்சமாக இது மாறிவிட்ட பின்பு நானும் என்னை ஒருவாறு தேற்றிக் கொண்டேன். படப்பிடிப்பு இல்லை என்று தெரிந்து கொண்டதும் முகத்தில் ஏமாற்ற உணர்ச்சியைக்கொண்டு வருவதற்குப் பதில், கேட்கும் போதே அதை என் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டு கேட்க ஆரம்பித்தேன்! 'அட்வான்ஸா'க ஒரு படிதான்!!

சென்றமுறை நான் அங்கு சென்றிருந்தபோது எனக்கு ஏமாற்றம் ஏற்பட்டுவிட்டது! படப்பிடிப்பு இருக்காது என்று நினைத்துச் சென்ற நான் அங்கு படப் பிடிப்பு நடைபெற்று வருவதாக கேள்விப் பட்டபோது பெரிதும் ஆச்சர்யமடைந்



ஜூபிடர் சோமுவுடன் 'அழகி' கிருஷ்ணகுமாரி

சரஸ்வதிக்கு
மேக்–அப் நடக்கிறது.

தேன்! அதுவும் இதுவரை நான் பார்க்காத ஒரு புதுப் படத்தின் படப்பிடிப்பு! ஆனால் இந்தப் புது படத்தின் தயாரிப்பாளர்கள் படவுலகிற்கு நன்கு பழக்கப்பட்ட பழைய ஆசாமிகள்தான்!

'பூலோக ரம்பை' படத்தைத் தயாரித்து வெளியிட்ட விஜய மாருதி பிக்சர்ஸை சேர்ந்த விஸ்வநாதம் செட்டியார்தான் 'எம். டி. வி. புரொடக்ஷன்ஸ' என்ற பெயரில் 'நண்பன்' என்ற இந்தப் படத்தைத் தயாரித்து வருகிருர்.

சேகர், மணி இருவரும் கல்லூரி நண்பர்கள். மணியின சகோதரி பானு.

பானுவின் தகப்பனுரான கருணு கரம்பிள்ளை ஒரு பெரிய பணக்காரர்.

மணியை சந்திக்க வரும் சேகர் பானுவுக்கு நன்கு அறிமுகமாகிருன். வியாதியால் பீடிக்கப்பட்ட மணி இறந்துவிடுகிருன். ஆனல் சேகர் பானுவிடம் சகோதர பாவத்தில் தான பழகி வருகிருன்.

பானு வீட்டில் நாட்டிய மாடிக் கொண்டிருக்கிருள். சுபத்ரா கல்யாணத்தைப் பற்றிய பாட்டிற்கு அவள் அபிநயம் பிடித்து வருகிருள்.

அந்தச் சமயமாக சேகர் அவள் வீட்டுக்கு வருகிருன். பானுவின் நடனம் அவனை வெகுவாகக் கவர்ந்து விடுகிறது.

சேகரும் பானுவும் ஒன்ருகப் பழகுவதைக் கண்ட ஊர் ஜனங்கள் அவர்களைப் பற்றி தாறுமாருக கட்டுக்கதைகளை கட்டிவிடுகின்றனர்.

இப்படியாக 'நண்பன்' கதை செல்கிறது. 'குடும்ப நண்பனுன' சேகரின் லக்ஷியங்கள் ஈடேறுகின்றன.

சேகர் பானு வீட்டுக்கு வந்து, நடனத்தை ரஸிப்பதான இந்தக் காட்சி தான் நான் சென்ற சமயம் படமாக்கப்பட்டு வந்தது.

'அழகி'யை நடக்ர்ணி
டைரக்ட் செய்கிருர்

பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு மாதங்களிலேயே படம் திரையிடப் பட்டுவிடும்

ஸ்டார் கம்பைன்ஸில் நண்பன் ஸெட்டுக்கு நேரெதிராக பிரம் மாண்டமான குகைக் காட்சி ஒன்று போடப்பட்டு வருகிறது.

கந்தன் கம்பெனியார் தயாரித்து வரும் ஜீவக சிந்தாமணிக்காக இந்த குகைகள் நிர்மாணிக்கப்பட்டு வரு கின்றன.

* * *

இம்முறை நான் ரோஹிணிக்கு சென்றபோது ஒரு பெரிய காட்சி ஜோடனை நிர்மாணிக்கப்பட்டு வரு வதைக் கண்டேன்.

சுமார் இருபதாயிரம் ரூபாய் செல வில் இந்தக் காட்சி ஜோடனை தயா ரிக்கப்பட்டு வருகிறது.

ரோஹிணி தயாரித்து வரும் வஞ்சம் படத்தில இது வருகிறது. இந்த ஸெட் டில் நடைபெறும் சம்பவங்கள்தான் படத்தின் 'கிளைமாக்ஸ் ஸீன்களாம்'. இவை சுடப்பட்டு விட்டால் படமும் முடிந்தமாதிரிதானும்.

வஞ்சம் தவிர ஏழையின் ஆஸ்தி, புரொடக்ஷன்–9 என்ற இரு படங் களும் ரோஹிணியின் சொந்தத் தயாரிப்புகளாக இங்கு வளர்ந்து வரு கின்றன. இம்மூன்று படங்களுமே தமிழ், தெலுங்கு இரு பாஷைகளி லும் தயாரிக்கப்பட்டு வருகினறன.

'நண்பன்' படத்தை பழைய நடி கரும டைரக்டருமான பி. எஸ். ஸ்ரீநிவாஸராவ் பி. ஏ., டைரக்ட் செய்து வருகிறார்.

• சேகராக மனோஹரும், 'உத்தமி' எம். லக்ஷ்மண்ன மணியாகவும் இதில் நடித்து வருகிறார்கள். பானு வின் தகப்பனாராக வி. நாகய்யாவும, பானுவாக பி. கே. சரஸ்வதியும் தோன்றுகிறார்கள்.

'நண்பன்' என்ற இப்படம் ஆரம் பிக்கப்பட்டு இரண்டு மாதங்களே ஆகினறனவாம. அதற்குள்ளாக ஆறாயிரம் அடிகள்வரை படம் சுடப்



ஒய். ஆர். ஸ்வாமி எம். ஏ. வஞ்சம், புரொ டக்ஷன்–9 படங்களை யும், டி. எல். ராமச் சந்தர் 'ஏழையின் ஆஸ்தி' படத்தையும் டைரக்ட் செய்து வரு கிறார்கள்.

நிர்மலமான நீல நிற ஆகாயத்தில், நக்ஷத் திரக் கூட்டங்களுக் கிடையே வெண்ணிலா

படம் பிடிக்கிறார்கள் இவர்கள்



மனிதனும மிருகமும் சுடபபடும்போது .

பவனி வந்து கொண்டிருந்தது.

குளிர்ந்த தென்றல் அலை அலையாக தொடர்ந்து வீசிக் கொண்டிருந்தது.

தென்றல் காற்று, பால்போல் பொழியும் நிலவு—மனிதனின் இன்ப உணர்ச்சிகளை தூண்டிவிட இவற்றோடு இனிமையான கானம்.

இந்த சங்கீதம் வாஹினியிலிருந்து வந்து கொண்டிருந்தது. குரலின் வசீகரத் தன்மையிலிருந்து அது யாருடைய தென்பதையும் உடனே தெரிந்து கொண்டேன்.

''மறவேன் இனி ஒரு போதும்
நானுமே
மனதில் நிறை நாதனே—
உன் பதம்''

என்ற இந்தப் பாட்டை வாஹினியிலிருந்து வெளிக் கிளப்ப காரணமாக இருநதது அங்கு நடந்துவந்த அசோசியேடட் புரொட்யூஸர்ஸாரின் படம் தான்.

சேகர், சாந்தா இருவரும் தம்பதிகள். கல்யாணமான சில நாட்கள் கழிந்து ஒரு நாள் இருவரும் மாடியிலுள்ள தனி அறையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர்.

நிலவு பாலெனக் காய்கிறது. கணவனும் மனைவியும் வெகு சந்தோஷமாக உரையாடிக் கொண்டிருக்கின்றனர்.

பேச்சில் தன் கணவனை கைக்குள் போட்டுக் கொண்ட சாந்தா பாட ஆரம்பித்து, 'மகுடி முன் நாகம்' போன்ற நிலைக்கு அவனைக் கொண்டு வந்து விடுகிருள். சாந்தாவின் பாட்டு சேகரின மனம் செவி இரண்டையுமே அதில் லயிக்கச் செய்து விடுகிறது.

அசோசியேடட் புரொட்யூஸர்ஸாரின இந்தப் படத்தில் கணேஷ் (ஜெமினி), பி. எஸ் சரோஜா இருவரும் இந்த ஆனந்த தமபதிகளாக வருகிருர்கள்.

பி. எஸ். சரோஜாவுக்கு பின்னணியில் வஸந்தகுமாரி இநதப பாட்டைப் பாடியிருக்கிருர். 'கரஹரப்ரியா'வில் அமைந்திருக்கும் இந்தப் பாட்டு கேட்பதறகு வெகு இனிமையாக இருக்கிறது.

இந்த 'ஸெட்'டுக்கு நேரெதிராக சிறு மண்டபம் ஒனறு நிர்மாணிக்கப் படடு வருகிறது. நாராயணன் கம்பெனியார் தயாரித்து வரும் மனம் போல மாஙகலயம் படத்திற்கான காட்சி ஜோடனையாம் இது. சாவித்

காட்சியிலே பேபியும். பூபதியும்.

திரி கணேஷ் முதலியோர் நடித்து வரும் இந்தப் படத்தை பி. புல்லய்யா டைரக்ட் செய்து வருகிறார்.

இது தவிர பிரம்மாண்டமான அளவில் ஒரு குகைக் காட்சியும் வாஹினியில் போடப்பட்டு வருகிறது. விஜயாவின் சந்திரஹாரத்திற்கான இதில் ஸ்ரீரஞ்சனியைக் கொல்ல முயற்சிக்கும் காட்சி படமாக்கப்பட விருக்கிறதாம்.

அதாவது சந்திரராஜாவின் உயிரைப் பறித்து விட்டதாக அவள் மீது பழி சுமத்தப்படுகிறது. ஆனால் சந்திரராஜாவின கனவுக் கன்னியான அவர் அவனைக் கொல்ல முயற்சி எடுத்துக் கொண்டதே கிடையாது. தவிர ராஜா அணிந்திருக்கும் சந்திரஹாரம் அவனை விட்டுப் பிரிந்து விட்டால் அவன் மறைந்து விடுவான் என்ற தத்துவமும் அவளுக்குத் தெரிதெரியாது முடிவில் உண்மை தெரிந்து அவள் விடுவிக்கப்படுகிறாள்.

விஜயாவின் சத்திரஹாரம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. கே. காமேஸ்வரராவ் இந்தப் படத்தை டைரக்ட் செய்து வருகிறார்.

தற்போது படவுலகிலும் சரி, வெளியிடங்களிலும் சரி 'பண நெருக்கடி' என்ற சொல்பிரதான்யத்தை பெற்றிருக்கிறது.

யாரைப் பார்த்தாலும் எவரைப் பார்த்தாலும் "ஒரே மந்தம்! பண நெருக்கடி ஸார்!" என்று சொல்லாம விருப்பதில்லை. 'கடவுளே! எங்கிருக்கிறாயோ?' என்று பக்தன் ஒருவன் மனமுருகிக் கேட்பதைப் போல "ஏ, பணமே! எங்கு சென்று பதுங்கிக் கொண்டாயோ!" என்று அவர்கள் பெருமூச்செறிந்த போது பரிதாப உணர்ச்சிதான் எனக்கு ஏற்பட்டது. இதனால் எனக்கு பண நெருக்கடி இல்லை என்று நினைத்து விடாதீர்கள்! நீங்கள் சற்று உதவினால்...

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நான் ரேவதியில் நுழைந்ததும் மூர்ச்சித்தே விழுந்து விட்டேன்! நல்ல வேளை என் காமிரா உடையவில்லை!!

அங்கு விளையாட்டாக நாம் சொல்லும் காட்சியை மெய்பிக்கும் வண்ணம் ஒரு மரத்தில் பணம் காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்தது. இது மட்டுமல்ல அந்த பணமரத்தின் பக்கத்திலிருந்த மண்டபத்தில் பணம் சரம் சரமாகத் தொங்கிக் கொண்டிருந்தது! அந்த மண்டபத்திலே ஒரு மாதரசி இருந்தாள் அவளைப் பல கட்டழகிகள் கைகூப்பி வணங்கிக் கொண்டிருந்தனர்.

அடேயப்பா! பணம் எங்கு சென்று விட்டது? எங்கு ஒளிந்துவிட்டது என்றெல்லாம் நம்மவர்களைக் கதறித் தவிக்க விட்டுவிட்டு இங்கு சரம் சரயாகக் காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்த முழு ரூபாய்களைக் கண்டதும் பொங்கி வந்த ஆவலை அடக்க முடியாமல் கையை நீட்டி ஒரு சரத்தைப் பறிக்கப் போனேன்.

"கட்!"

"ஐயோ! கையை 'கட்' பண்ணி விடுவார்களோ?" என்று பயந்து குரல் வந்த திசையில் பார்த்தேன்.

டைரக்டர் ராமன் அங்கிருந்தார். அவர் அங்கிருந்ததைப் பார்த்ததும் எனது எண்ணக் கோட்டையில இடி விழுந்து விட்டது. அவை படப்பிடிப்புக்கான முழு ரூபாய்கள்; செல்லாத நாணயங்கள் என்ற விஷயம் எனக்குத் தெரிந்து விட்டது!

ஜம்பு புரொடக்ஷன்ஸ் தயாரித்து வரும் மனைவியின் மகன் தமிழ். ஹிந்திப் படங்களில் வரும் ஒரு நூதன நடனக் காட்சி இது.

அதாவது பண தேவதையைக் குறித்து சில கன்னிகைகள் பிரார்த்திக்கிறார்கள். தங்களுக்கு அருள் புரியுமபடிக் கேட்கிறார்கள்.

பணத் தெய்வமும அவர்கள் கோட்பாட்டுக்குச் செவி சாய்த்து 'என்னால் எல்லோருக்கும் இன்பம் உண்டாகும்" என்று பாடிக் கொண்டே இறங்கி வருகிறாள்.

மனைவியின் மகன் படத்தில் இந்த நடனக்காட்சிக்கான ஜோடனை வெகு நேர்த்தியாக அமைந்திருக்கிறது.

பண தேவதையாக ஹேமமாலினி வருகிறார்.

எம். வி. ராஜம்மா, கண்ணப்பன் முதலியோருடன் வைஜயந்திமாலாவும் நடித்து வருகிறார்.

ஜி. வரலக்ஷ்மி

சாதாரணமாக இந்தப் பகுதிக்கு ஒரு குறிப்பிட்ட நக்ஷத்திரத்தை, அதாவது அந்த மாதத்தில் வெளியான படங்களில் மிகச் சிறப்பாக நடித்தவரைத் தேர்ந்தெடுப்பதில் சிரமம் ஏற்படுவதுண்டு. இரண்டு மூன்று படங்கள் வெளியாகியிருக்கும். அவைகளில் இரண்டு மூன்று பேர் சிறப்பாக நடித்துவிட்டிருப்பார்கள். அப்போது, பழக்கமில்லாத பாத்திரத்தில் திறம்பட நடித்தவர் யார் என்பதை ஆராய்ந்து 'இம்மாத நக்ஷத்திர'த்தைத் தேர்ந்தெடுக்க நேரும். ஆனால் ஜி. வரலக்ஷ்மியைத் தேர்ந்தெடுப்பதற்கு மட்டும் போட்டி ஏற்படுவதில்லை.

ஜி. வரலக்ஷ்மி நடித்துச் சமீபமாக வெளியான படம் பிரகாஷ் புரொடக்ஷன்ஸின் 'பெற்ற தாய்'. சாந்தாவாக வந்து ஒரு ஆதர்ஸ தாயின் லக்ஷியங்களைச் சிறப்பாகப் பிரதிபலித்திருக்கிறார் வரலக்ஷ்மி.

ஆசை அத்தானையே மணந்து ஆனந்த வாழ்வு வாழ நினைத்த சாந்தா, கல்யாணமான பின் காதல் வாழ்க்கையை நீண்ட காலம் அனுபவிக்க முடியாமல் புருஷனைப் பிரிந்துவிடுகிறாள். பெற்றவன் தன் வழியைப் பார்த்துக் கொண்டு 'ஓடி'ப் போய் விட்டாலும் பெற்றவளும் அப்படிச் செய்ய முடியுமா? இன்பத்தின் உச்சிக்குச் சென்ற அவள் துன்பத்தின் கோடிக்கும் சென்று, மக்களின் நல் வாழ்வுக்குப் பாடுபடுகிறாள். இலை விற்கிறாள்; கேட்கப் பொறுக்காத ஏசலை ஏற்றுச் சகித்துக்கொள்ளுகிறாள்; மக்கள் தவறு செய்யும்போது தண்டிக்கிறாள்; வீட்டில் வாழாமல மாட்டுக் கொட்டகையில் வசிக்கிறாள்; இன்னும் கொலைக் குற்றத்தையும் ஏற்றுச் சிறை செல்கிறாள் ஏன்? மக்களின் நல்வாழ்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டதால்தான்.

கணவன் அவளைக் கைவிட்டுவிட்டான். ஆனால் அவன் பிரதிநிதியாக மக்களின் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறாள். அவனிடம் சுகம் காணவில்லை அவள்; மக்களிடமும் சுகம் காணவில்லை. ஆனால் பெற்ற தாயின் கடமையைச் செய்வதிலே சுகம் கண்டாள்.

முற்றிலும் மாறுபட்ட இந்தக் கதாபாத்திரத்தில் பிரமாதமாக நடித்திருக்கிறார் ஜி. வரலக்ஷ்மி.



சென்னை ஏவி, எம். ஸ்டுடியோவின் உரிமையாளரான ஏவி. மெய்யப்பன் ஜப்பான் முதலிய தூரக்கிழக்கு நாடுகளுக்கு விஜயம் செய்துவிட்டு சென்றமாத இறுதியில் சென்னை வந்து சேர்ந்தார். விமான நிலையதித்ல் ஏராளமான நண்பர்கள் அவரை வரவேற்றனர்.

அன்று மாலை ஏவி, எம். மில் ஸ்டுடியோ சிப்பந்திகள அவருக்கு ஒரு தேநீர் விருந்தளித்து கௌரவித்தனர்.

'அவள்' எஸ். - வரலக்ஷமி

மாதுரிதேவி

மறுபடியும் ஒரு ஸீஸன் ஆரம்பித்து விட்டது மாதுரிதேவிக்கு

கிருஷ்ணகுமாரி

'மனித'னில் மனமுருக நடித்திருக்கிறார். தமிழுக்குப் புதுமுகம்.

குமாரி கிருஷ்ணா

"ஸார்! போஸ்ட்!" என்று ஒரு தபாலை விட்டெறிந்து விட்டுப் போனான் தபால்காரன். அவனுக்கு நான் புது வருஷ இனாம் இன்னும் தரவில்லை என்ற கோபம்!

"என்ன தபால்? யாரிடமிருந்து வந்தது?" என்று கேட்டுக் கொண்டே கை வேலையைப் போட்டுவிட்டு அவசரமாக வந்தாள் என் மனைவி.

"அதைத்தானே பார்க்கிறேன், அதற்குள் அவசரமா?"

"அந்தக் கவரைப் பார்க்க இத்தனை நாழியா? இப்படிக் கொடுங்கோ!" என்று வெடுக்கென்று என் கையிலிருந்த கவரைப் பிடுங்கிக்கொண்டு, அந்த புக்போஸ்டை உடைத்தாள்.

தமிழ்ப் புது வருஷ வாழ்த்துச் செய்தியொன்று அதிலிருந்தது.

"பூ! இவ்வளவுதானா?" என்று அலுத்துக் கொண்டாள் என் மனைவி.

"போடி பைத்தியமே! இந்த மாதிரியான வாழ்த்துச் செய்திகளும் பாராட்டுக் கடிதங்களும்தான் நமது செல்வாக்கை எடைபோடும் தராசு! போகட்டும், யாரிடமிருந்து வந்திருக்கிறது பார்!"

"யாரோ கிருஷ்ணகுமாரியாம்? யார் இவள்?"

"எனக்கும் தெரியாதே! யாராவது நடிகையாக இருக்கலாம். அல்லது நடனம், சங்கீதம் சம்பந்தப்பட்டவளாக இருக்கலாம்!" "எதுக்கு இப்படிப் புளுகணும்? நான் என்ன சொல்லிவிடப் போகிறேன், உங்க தொழில்லே எல்லாரையும்தான் தெரிஞ்சிருக்கணும்... முன்பின் தெரியாதவளா புது வருஷ வாழ்த்து அனுப்புவா?" என்று முகத்தைத் தோள் பட்டையில் இடித்துக் கொண்டாள் என் சகதர்மிணி.

நான் சொன்னதில் கடுகத்தனையும் பொய்யில்லை. உண்மையிலேயே கிருஷ்ணகுமாரி என்ற பெயரில் எனக்கு யாரையும் தெரியாது. ஆனால் என் பெயர் விலாசம் எல்லாவற்றையும் சரியாக எழுதி "அன்புள்ள இன்னாருக்கு" என்றும் ஆரம்பமாகியிருந்தது அந்த வாழ்த்து!

வாழ்க்கைச் சித்திரம்

என் வார்த்தையை என் மனைவி நம்பாததில் வியப்பு என்ன? நீங்களா

யிருந்தாலும் இப்படித் தான் கேட்பீர்கள்.

இன்று ஜூபிடர்–லாவண்யா கூட்டுத் தயாரிப்பான மனிதன் என்ற திரைப் படத்திலே பிரதம கதாநாயகி சாவித்ரியாகத் தோன்றி உள்ள முருக உணர்ச்சியுடன் நடித்துப் பிரபல நக்ஷத்திரமாகி விட்ட கிருஷ்ணகுமாரியின் தனிப்பட்ட சாமர்த்தியங்களில நான் முதலில் குறிப்பிட்ட 'வாழ்த்துச் செய்தி விளம்பர'மும் ஒன்று.

தெலுங்கு வருஷப் பிறப்பிற்குத் தெலுங்குப் பத்திரிகாசிரியர். பிரமுகர். பட உலகம் சம்பந்தப்பட்டவர்களுக்கும். இதே போலத் தம்ழ் வருஷப் பிறப்பிற்குத் தமிழர்களுக்கும் வாழ்த்துச் செய்தி எழுதி தன் கையொப்பமிட்டு அனுப்பி விடுவார் கிருஷ்ணு. அதிலே அவரது புகைப்படம் கூட இருக்கும்.

முன்னேறுவதில் அவருக்குள்ள ஆர்வத்தையும் திறமையையும்தான் நிரூபிக்கிறது இது. இதே திறமையும் ஆர்வமும்தான் அவரை இன்று ஓர் உன்னத நக்ஷத்திரமாகவும் ஆக்கி விட்டன.

1935–ம் வருஷம மார்ச் மாதம் 6–ம் தேதியன்று வெங்காஜி–சசிதேவிஎன்ற தம்பதிகளுக்கு மூன்ருவது குழந்தையாகப் பிறந்தார் கிருஷ்ணு. அப்போது கிருஷ்ணுவின் பெற்ருேர்கள் நைஹாட்டி (மேல் வங்கம்) என்ற இடத்திலே இருந்தார்கள்.

ராஜமஹேந்திரபுரத்துத் தெலுங்கரான வெங்காஜி ஒரு 'காகிதப்புலி! ஏன் திகைக்கிறீர்கள்? மண் குதிரை. சித்திரச் சிங்கம் என்பனவற்றைப் போல அல்ல; நிஜமாகவே அவர் காகிதம் தயாரிப்பு நுணுக்கங்களை நன்கு கற்றறிந்தவர். சில காலம் சர்க்கார் உத்தியோகஸ்தராகவும்,

சில காலம் தனிப்பட்ட காகித மில் கம்பெனிகளிலும் 'காகிதத் தயாரிப்புத் தொழில் நுணுக்க அதிகாரியாக வேலை செய்திருக்கிறார், கிருஷ்ணா பிறந்த பிறகு இந்த காகிதப் புலியை பீஹாருக்கு மாற்றி விட்டார்கள். ஆகவே குடும்பம் ராஜமஹேந்திரபுரத்துக்கு வந்துவிட்டது கிருஷ்ணா அங்கே ஆரம்ப பாடசாலையில் ஐந்தாவது வரை படித்து விட்டு, பீஹாருக்குச் சென்று அங்கே ஒரு வருஷ காலம் தகப்பனாருடன் இருந்தார். கிருஷ்ணா அங்கே போன முகூர்த்தத்தின் பலனாக ஒரே வருஷத்தில் வெங்காஜி சென்னைக்கு வந்து விட்டார். சென்னை சர்க்காரில் பேப்பர் புலியாக வேலை பெற்றார் அவர். அவரது குடும்பம் சென்னை வந்து கூடிற்று.

சென்னை ஆந்திர மஹிள சபாவிலே சேர்ந்து கல்வி பயின்ற கிருஷ்ணா, காசி சர்வ கலாசாலை பரீட்சைக்காக, கௌஹாத்தி சென்று பரீட்சை எழுதி மெட்ரிக் தேறினார்.

மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த நைஹாட்டியிலே பிறந்து, ஆந்திராவிலே ராஜ மஹேந்திரபுரியில் வளர்ந்து, பீஹாரிலே இருந்து, சென்னையில் படித்து அஸ்ஸாமிலே பரீட்சை எழுதினார் கிருஷ்ணா. சிறிய வயதிலேயே இந்தியாவின் பல பாகங்களிலும் சுற்றியதால் அவரது அனுபவமும் அறிவும் விசாலமாக இருப்பதில் ஆச்சர்யமில்லையே!

அஸ்ஸாமிலிருந்து வந்த பிறகு மீண்டும் மேல் படிப்பைத் தொடர்ந்தார் கிருஷ்ண குமாரி. ஆனால் சினிமா வாணி சும்மாவிடுவாளா? அவளுடைய அனுக்ரக பார்வை கிருஷ்ணா மீது விழுந்தது.

தமிழ் நாடு டாக்கீஸ் உரிமையாளர் சௌந்திர ராஜனின் மகளான பூமாவின வடிவிலே வந்து கிருஷ்ணாவை ஆட்கொண்டாள் சினிமாக் கலைதேவி.

ஒருநாள் தியாகராய நகர் ராஜக்குமாரி டாக்கீஸிலே படம் பார்த்துக் கொண்டிருந்தார் கிருஷ்ணா. டாக்கீஸின் பெயரைப்பற்றி அவர் யோசிக்கவேயில்லை. யோசித்திருந்தால் என்னவெல்லாமோ ஆசைகள் பிறந்திருக்கும்?

"இது தான் ராஜகுமாரி டாககிஸ். ஆமாம். பிரபல நடிகை டி. ஆர். ராஜகுமாரியின் சொந்த சினிமாக் கொட்டகை இது. சினிமாத் தொழிலிலே பிரவேசித்து, அதை ஆக்ரமித்துக் கொண்டு அகில இந்திய நக்ஷத்திரமாகத் தன் புகழை நிரந்தரமாக்கிக் கொண்ட சிரஞ்சீவி நடிகை ராஜகுமாரி, தியாகராய நகர் உள்ள வரையில் தன் பெயர் நிலைக்கும்படியாகவும், ஒரு நாளுக்கு ஓராயிரம் பேராவது "ராஜகுமாரி" என்று உச்சரிக்கும் படியாகவும் ஓர் ஸ்திரமான ஏற்பாட்டைச் செய்து கொண்டு விட்டார்!—நானும் ஏன் இந்தச் சினிமாவிலே சேர்ந்து நடிக்கக் கூடாது? ராஜகுமாரியைப் போல என்பெயரில் ஒரு தியேட்டர், ஒரு புரொடக்ஷன் கம்பெனி, இன்னும் மேலே போனால் ஒரு ஸ்டுடியோ என்று ஏன் ஆரம்பிக்கக் கூடாது? எனக்கென்ன அழகில்லையா? திறமையில்லையா? நடிக்கத் தெரியாதா? வயதுதான் இல்லையா?" இப்படியெல்லாம் கிருஷ்ணா நினைக்கவிலலை!

ஆனால் வேறொருவர்-அவர்

தான் பூமா—நினைத்திருக்க வேண்டும்!

''இதோ, இந்தப் பெண் யார் தெரியுமா? சௌகார் ஜானகியின் தங்கை. நல்ல முகவெட்டு இருக்கிறது. நடனமும் தெரியுமாம். படித்திருக்கிருள்! இவளை நம்ப படத்திலே நடிக்க வைக்கலாம்!'' என்று அவர் தன் மனதோடு நினைத்துக் கொண்டார். உடனே எழுந்து கிருஷ்ணுவுக்கு அருகே வந்து அமர்ந்து, ''உங்களுக்கு சினிமாவில் நடிக்க விருப்பமா?'' என்று கேட்டார் பூமா.

''யோசித்து பதில் சொல்லவேண்டிய கேள்வி இது'' என்று சுருக்கமாக பதிலளித்தார் கிருஷ்ண குமாரி.

மறுநாள் அவர் வீட்டு வாசலில் தமிழ்நாடு டாக்கீஸ் கார் வந்து நின்றது! கிருஷ்ணகுமாரி வெறும் பள்ளிப் படிப்புடன் நின்று விடவில்லை. படிக்கும்போதே நடனமும் பயின்ருர். குச்சிபுடி, பரதம் முதலிய நாட்டியங்களிலே அவர் தேர்ந்தவர். வீணை மீட்டவும் பழகி யிருக்கிருர். கல்கத்தா, பீஹார், ஷில்லாங், பெங்களூர் முதலிய பல இடங்களில் பல பிரமுகர்களின் முன்னிலையில் அவர் நடனம் ஆடியிருக்கிருர். பெங்களூரில் அகில இந்திய காங்கிரஸ் கண்காட்சியின் போதுகூட அவரது நடனம் இடம் பெற்றது. சென்னை செயிண்ட் மேரீஸ் ஹாலிலும் அவரது சதங்கைகள் ஒலித்திருக்கின்றன.

நடனம் மட்டும் அல்லாமல் நாடக மேடைகளிலும் தோன்றி யிருக்கிருர் கிருஷ்ணு. சென்னை ஆந்திர மஹிள சபையில் கல்வி பயிலும் போதே அவர் சபா நாடகங்களிலே



பாத்திரமேற்றுப் பலர் முன்னிலையில் நடித்து பாராட்டுதலையும் பெற்றிருக்கிறார். இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேனென்றால் கிருஷ்ண குமாரிக்கு நான்கு பேர் முன்னிலையில் மேக்கப் போட்டுக் கொண்டு நடிப்பதில் சங்கோஜமோ பயமோ விட்டுப் போயிருந்தது. அதனால் அவர் எடுத்த எடுப்பிலேயே பிரதான பாத்திரங்களில் தோன்றி அனாயாசமாகவும், காமிராக் கூச்சமின்றியும் நடிக்க முடிந்தது.

தமிழ்நாடு டாக்கீஸாரின் 'நவ்விதே நவரதனாலு' என்ற தெலுங்குப் படத்தில் நடிக்கும்போதே அவருக்கு வேறு பல இடங்களிலிருந்தும் நடிக்க அழைப்பு வந்தது. ஒப்பந்தங்களும் ஏற்பட்டன.

அடுத்து ஞானாம்பிகா பிக்சர்ஸாரின் மந்த்ர தண்டம் என்ற படத்தில் நாகேஸ்வரராவ், சிவராவ், ஸ்ரீரஞ்சனி ஆகியோருடன் நடித்தார். பாரதலக்ஷ்மியின் பிரியுராலு, ஏ. என். புரொடக்ஷனஸ ஆடப்ரதுகு, முக்காமலாவின் மரதலுபெள்ளி, பிரதிபாவின் சின்ன கோடலு, ஜெய்மணியின் சின்னம்ம கதா ஆகிய பல படங்களில் சேர்ந்தாற் போலத் தோன்றினார். இந்தப் படங்களுக்குள்ளாகவே கிருஷ்ணாவுக்கு அநேகமாக எல்லா பிரபல தெலுங்கு நக்ஷத்திரங்களும் சகநடிகர்களாகி விட்டனர். பல தயாரிப்பாளர்களும் பரிச்சயமாகி விடடனர்.

இதற்குள் இதர மொழிப் படத்தயாரிப்பாளர்களிடையேயும கிருஷ்ண குமாரியின் பெயர் அடிபட ஆரம்பித்தது.

ஏவி. எம். ஸ்டூடியோவில் குப்பி கர்னாடகா புரொடக்ஷன்ஸார் தயாரித்த கன்னடம், தமிழ் இரு மொழிப் படமான குணசாகரியில் கிருஷ்ணா நடித்தார். சமீபத்தில் அவர் பிரதம பாகத்தில் நடித்து வெளிவந்த படம்தான் மனிதன்.

காதலித்து மணந்து கணவனைக் கலியாணத்துக்கு மறு நாளே பிரிந்து விட்டாள் சாவித்ரி. "இன்னும் நாலே நாளில் வருகிறேன்!" என்று கூறிச் சென்றான் காதலன். நாலு நாளல்ல ஒரு வாரம்; ஒரு மாதம்; ஒரு வருஷம் ஆகியும் அவன் வரவில்லை. அதுமட்டுமல்ல, சாவித்ரியை விட்டுத் தொலைவிலே, தொலைவிலே போய்க் கொண்டேயிருந்தான் அவன். தான் இருக்குமிடத்தின் பெயரைக் கூடத் தன் அருமை மனைவிக்குத் தெரிவிக்க முடியாதபடி ராணுவத்திலே டாக்டர் வேலை செய்து வந்தான் அந்தக் கணவன்—சுகுமார். வருஷங்கள் பறந்தன! அவன் வரும் வழிமீது விழி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்த வனிதையின் விழிகளிலே விரக்திதான் வெளிப்பட்டது. பசலை படர்ந்த மேனிமீது பாசத்தின் ரேகைகள் மறைந்து உணர்ச்சிகள் கூட மரத்துப் போயின. "எப்போது வருவாரோ, வரட்டும். நான் உயிரோடிருந்தால்

சந்திப்போம்!'' என்ற நிராசையான நிலையிலேதான் அவள் இருந்தாள்.

உணர்ச்சிகளை அழித்துப் புதைத்து விட்ட அவநம்பிக்கையின் உருவமான அந்த உத்தம பத்தினியின் உள்ளத்திலே புயலைக் கிளப்பினான் ராஜன். அவன் ஒரு நாடோடி சைத்ரீகன். இளமை எண்ணங்களைச் சிதற விடாமல் சீரிய பாதையிலே செலுத்திய சிறந்த கலைஞன் தான் அவனும். ஆனால் அவனிடமிருந்தது ஒரே குறை. எதையுமே சிந்திக்க மறுக்கும் அளவுக்கு வாலிப போதை அவனிடம் சோம்பரை உண்டாக்கி விட்டது! கலையின் ஆர்வத்திலே, வறுமையின் வேதனையிலே தேய்ந்து போயிருந்த அவனது பருவ உணர்ச்சிகளுக்குப் புத்துயிரூட்டித் தூண்டி விட்டது சாவித்ரியின் லய சௌந்தர்யம்! வண்டு மொய்க்காத அம்மலரின் வாடை பட்டுப் போதை தலைக்கேறி விட்டது கலைஞனான ராஜனுக்கு. தன்னை மறந்தான்; அவளையும் மறக்கச் செய்தான். இமைப் பொழுது இன்பத்திற்காகத் தன்னையும் அவளையும் உயிரோடு பலி கொடுத்து விட்டான்!

அவள் அலறினாள், துடித்தாள். வெஞ்சினத்துடன் சீறினாள். வெகுண்டாள். வேதனைப்பட்டாள்; என்ன பயன்? ''என்னாகும் மண் கலம் உடைந்தக்கால்?'' என எண்ணி வாடினாள். 'நாயுண்ட சோறானேமே' என நைந்து வதங்கினாள். புனிதத் தன்மையைப் பறிகொடுத்து விட்டேனே என வெட்கிப் புழுங்கினாள்!

போதாக்குறைக்குப் பாவத்தின் சின்னம்—பழியின் பரிணாமம் உருப்பெற ஆரம்பித்து விட்டது. என்ன செய்வாள் அபலை?

''கவலைப்படாதே! நான் காப்பாற்றுகிறேன்! உன் பாவத்தை மறைக்கிறேன். பழியைத் தடுக்கிறேன்'' என்று அபயமளித்தது சண்டாள சமூகம்.

அவள் இதையா விரும்பினாள்? பாவத்தை மறைக்கவும், பழியைத் துடைக்கவுமா அவள் எண்ணினாள்? இல்லையே! பாவத்தைப் போக்கிக் கொள்ள, பழியை அழித்துக்கொள்ள முடியுமா என அவள் ஏங்கினாள்! அது முடிகிற காரியமா?

கணவன் வந்தான்! மனைவியின் மாசற்ற பண்பை அவன் அறிவான். அவளை மன்னித்து ஏற்றுக் கொள்வதாகவும் அவன் கூறினான்!

அவனது மன்னிப்பை அவள் அங்கீகரிக்கவில்லை ''எச்சிற்பாண்டத்திலே நீர் உண்ணுவதை நான் அனுமதிக்க மாட்டேன்!'' என்றாள் அவள்.

இங்கே புராண அகலிகையை நினைவு படுத்திக்கொள்வோம்.

(69-ம் பக்கம் பார்க்க)

பிரகாஷ் புரொடக்ஷன்ஸ்

பெற்ற தாய்

திரைக்கதை

காட்சி 1

சாந்தா ஒரு பருவ யுவதி. சலபதி அவளது அன்பைக் கவர்ந்த ஆசை அத்தான். ஒரு நாள் காய் கறிகளைக் கொண்டு வந்து ஒரு பெரிய கூடையில் கொட்டி விட்டு அதைத் தூக்க முடியாமல் அங்குமிங்கும் பார்த்து விட்டு, நாகய்யாவுடன் இருக்கும் அத்தானை உதவிக்கு அழைக்கிறாள் அவள்.

சாந்: *அத்தான்! அத்தான்!!*

நாக: ஏய், சலபதி! சாந்தா எதுக்கோ உன்னைக் கூப்பிடறாப் போலே இருக்கு. உம், போ.

சல: (வந்து பார்த்து விட்டு) ரொம்ப பாரமா யிருக்கும் போலிருக்கே!

சாந்: ஒரு கை குடு அத்தான்!

சலபதி அதைத் தானே தூக்கிக் கொண்டு நடக்கிறான்.

சாந்: ஏய், அதென்ன அத்தான்! அத்தான் ...இதைப் போல சுமையை நாங்களும் தூக்க முடியுமல்ல. குடு அத்தான். குடு!

நாக: போகட்டும் விடம்மா! இப்ப இல்லாமெ போனாலும் நாளைக்காவது அவன் தானே தூக்கி ஆகணும் உன் சுமையை!

சாந்: போ, நாகய்யாண்ணா! நீ ஒண்ணு!

சாந்தா முன்னால் போகிறாள். கிராம எல்லையை அடைந்ததும் பின்னாலிருந்து கூப்பிடுகிறான் சலபதி.

சல: சாந்தா! இனிமே உன் வழி உனது, என் வழி எனது!

கூடையை அவளிடமே கொடுத்து விடுகிறான்.

சாந்: பார்த்தியா அண்ணா, அத்தானுடைய டம்பத்தை! நடு வழியிலே சுமையை என் தலை மேலே எறக்கிட்டுப் போறாரு.

சாந்தா வீட்டுக்குள் நுழையும்

பாத்திரங்கள்:

நாகேஸ்வரராவ்	ராமு
நம்பியார்	சங்கர்
ஜி. வரலக்ஷ்மி	சாந்தா
வஸந்தா	கௌரி
செல்லம்	காந்தம்மா

வசனம்:
சுப்பராமன்

டைரக்ஷன்:
பிரகாஷ்ராவ்

போது அவள் அண்ணி நான்கு முறுக்குகள் விதம் இரண்டு தட்டுக்களில் வைத்து சீதம்மாவுக்கும் காந்தம்மாவுக்கும் கொடுக்கச் சொல்லுகிருள்.

பார்: இதோ இந்த நாலு காந்தம்மா அண்ணிக்கும் இந்த நாலு சீதம்மா அத்தைக்கும் குடுத்துட்டு வா!

சாந்: (தவருகக் காட்டி) இந்த நாலு காந்தம்மா அண்ணிக்கி, இந்த நாலு சீதம்மா அத்தைக்கி... ..(சிரித்து) ஓஹோ! இந்த நாலு காந்தம்மா அண்ணிக்கி. இந்த நாலு சீதமமா அத்தைக்கி!

வேணு வீட்டுக்குள் வரும் போது சாந்தா உருப்போட்டுக் கொண்டே போகிருள்.

சாந்: இந்த நாலு காந்தம்மா அண்ணிக்கு, இந்த நாலு சீதம்மா அத்தைக்கு.

வேணு: என்னம்மா இது?

சாந்: இது காந்தம்மா அண்ணிக்கு, இது சீதம்மா அத்தைக்கி!

வேணு: யாருக்கு எதுவாயிருந்தா என்னம்மா?

சாந்: ஊஹூம் அண்ணி சொன்னுங்களே! இந்த நாலு காந்தம்மா அண்ணிக்கி. இந்த நாலு சீதம்மா அத்தைக்கி என்னு.

பார்: அடி காளியாயி, உன்னைக் காப்பாத்த எனக்கென்ன தெரியும். அவுங்க வீட்டுக்கு ஒண்ணும் இவுங்க வீட்டுக்கு ஒண்ணும் என்கிறதுக்கு அப்பிடிச் சொனனோனே என்னவோ!

வேணு: இன்னும் என்ன! இதிலேயிருந்து தெரியுதே உன் சாமர்த்தியம். நட...நட...

சாந்தா நாகப்பா வீட்டில் ஒரு தட்டைக் கொடுத்துவிட்டு சீதம்மா வீட்டுக்குப் போகிருள்.

சாந்: அத்தே, சீதம்மா அத்தே!

சீத: என்னம்மா இந்த நேரத்திலே வந்தே?

சாந்: உனக்கு ஒண்ணு கொண்டாந்தேன்.

சீத: அதென்னடி அது ஒண்ணு!

சாந்: இதோ பாரு, முறுக்கு..!

சீத: முறுக்கா ..? எனக்கென்ன, பல்லா கில்லா?

சாந்: உனக்கில்லாமெ போனு என்ன? உன் புள்ளைக்கிருக்கிலலே!

சீத: அவனுக்கும் இருக்கு, உனக்குந்தான இருக்கு...கொஞசம் விளக்கேத்தி வையமமா.. இருட்டாய் வருது ..ஆமா' அவன் எங்கே?

சாந்: இன்னும் அளந்து முடிக்கல்லையோ என்னவோ?

சீத: என்னடி இது? இன்னும் ஏரே உழல்லே! இப்ப என்னடி அளந்து கொட்றான்?

சாந்: நெல்லா அளந்துகிட்டிருப் பாருண்ணேன்? அவரு வம்பல்ல அளந்து கிட்டிருப்பாரு!

அப்போது சலபதி பின்புறம் வந்து அவள் கண்களைப் பொத்து கிறான். அதை விலக்கிய அவள் கத்துகிறாள்.

சாந்: ஏய், போ...! பார், அத்தே!

சீத: முகத்திலே என்ன களையா யிருக்கு பாத்தியா? அத்தே என் னுட்டு என்ன அழகா வாய் நெறைய கூப்பிடறா...

சல: இன்னும் என்ன? சரியான மருமகளைத தேடிப்பிடிச்சியேய்யா.

சீத: எதுக்கும் அதிருஷ்டம் வேணுண்டா. இல்லாட்டிப்போனா இவளைப் போல ஒரு லக்ஷ்மி கெடைப் பாளா சொலலு... பைத்தியக்காரப் புள்ளே.. இந்தப் பௌர்ணமிக்கப் புறம் முகூர்த்த நாளே ஒண்ணுகூட இல்லியாம்.

சல: இப்ப என்னம்மா முகூர்த் தத்துக்கு அவசரம்? கையிலே செப் பாலடிச்ச காசில்லே! அறுவடை முடியட்டும், பார்த்துக்கலாம.

நாகய்யாவும் காந்தம்மாவும் வரு கின்றனர்.

நாக: இந்தக் காரியத்துக்கு அறு வடை ஆகணுமா? பெரிய மேள தாளம வச்சி டாம்டும்னுசெய்தாதான் கல்யாணமா?

சல: இல்லாமே பிச்சைக்காரக் கல்யாணம் செய்துக்கவா?

காந்: அப்பிடிச் சொல்லு தம்பி! பிபிபி என்று ஒரு ஒத்து மட்டும் வச்சி கிட்டு இவரும் செய்துகிட்டாரே கல்யாணம், அந்த மாதிரி செய்துக் கச் சொல்றாரா. கேளு ..!

சல: கடனோ ஒடனோ ஜாம் ஜாம்னு ஜமாய்ச்சிடுவேன், ஆமா!

சீத: அப்பிடியே ஆகட்டுமே! யாரு வேண்டாமென்னாங்க?

அவர்கள் யாவரது விருப்பப்படி ஒரு நல்ல முகூர்த்தத்தில் சலபதி சாந்தாவை மணந்து கொள்ளு கிறான்.

காட்சி 2

சாந்தா முறத்தில் அரிசி பொறுக் கிக் கொண்டிருக்கிறாள். கர்ப்ப முற்ற அவளைக் கண்டு சீதம்மாள் மகிழ்கிறாள்.

சீத: என்னம்மா ஒரு மாதிரி இருக்கே?

சாந்: ஒண்ணுமில்லே அத்தே!

சீத: அப்பிடிதாம்மா இருக்கும் இப்போ. வாயிலே கொஞ்சம் புளி யைப் போடடுக்கோ... எலலாம சரியா போயிடும்!

காந்: கொடுத்து வச்ச மகராசி! குடித்தனம் புகுநது வருவம் ஒண்ணு முடியலே இனனிக்கிப் போரு ஆத்தாவுட்டுக்கு குளிகுளிக்க! அதி ருஷ்டம் இன்னு இது அதிருஷ்டம்! என் தலையிலேயும் எழுதி வச்சி ருக்கே தலைகிழா!

நாக. அத்தனே கெழடு தட்டிப் போச்சா என்ன, புள்ளெ குட்டி இல்லேன்னு அழறதுக்கு?

காந்: ஆமா! இந்த வூட்டிலே காலடி வச்சி வருஷம் நாலாச்சு. போட்ட கோலத்தை அழிக்க கொழந்தை உண்டா. குட்டி உண்டா? உம்..... இனிமேதான் எங்கே யிருந்தோ பொறக்கப் போவுதாம்!

நாக: ஆடத் தெரியாத சிறுக்கி கூடம் கோணலுன்னு சொலலி, அதைக் கட்டினவன் தலை மேலே இடிவிழ என்று வசை வச்சாளாம். அந்த மாதிரி...

காந்: அடிப்புண்ணு துடுப்பு என் கிறதை தவிர வேறே என்ன தெரி யும் இந்த ஆம்புள்ளைங்களுக்கு? கஷ்டமோ சுகமோ, எதை யோசிக் கிறது உண்டு இந்த வூட்டிலே? ஏதோ ஒரு ஆலமரத்தைச் சுத்தலாம். சனிக்கிழமை ஒருபொழுது ஆரம் பிக்கலாம் இன்னு என்ன இருககு இங்கே? குடித்தனமாம். குடித் தனம்; பாழுங் குடித்தனம். அம் மம்ம... நம்மாலே முடியாதும்மா.

நாக: இப்ப நான் போயி அந்த கடையெப் பெரட்டிக்கிட்டு வரணும் போலிருக்கு.

காந்: பெரட்டிக்கிட்டு வந்தா எனக்கென்ன, உருட்டிகிட்டு வந்தா எனக்கென்ன? நானு திங்கப் போறேன்? சனிக்கிழமை ஒருபொழு துன்னு ஒரு பொங்கலாவது செய்யாமே இருக்க முடியுமா? அப் படித்தான் பொங்கல் பொங்கிப் படைக்கலாம்னு, ஒரு பருப்பு உண்டா, ஒரு வெலலம உண்டா, ஒருமூடி தேங்காதான் உண்டா? எல்லாத்துக்கும் தலை ஆட்டிகிட்டுப் போய்கிட்டே இருந்தா என்ன அர்த் லம்? ... 'உண்டா'யிருக்கிரு சாந் தான்னு ஊரெல்லாம் பண்டு பலகா ரம்செய்துகிட்டுப்போயிகுடுக்கிருங்க. நம்ம வீட்டிலேருந்து ஏதாச்சியும் கொண்டு போயி கொடுக்கலாம்னு முடியுமா இந்த வூட்டிலே?

காட்சி 3

வருஷங்கள் உருளுகின்றன. சாந் தாவுக்கு இப்போது இரண்டு ஆண் குழந்தைகள் இருக்கின்றனர். சலபதிக்கு வருமானமில்லாத கார ணத்தால் வாழ்விலே தென்பில்லை. வெட்டியான் கிஸ்தி கேட்கிருன். கட்டவழியில்லை.

வெட்: என்னுங்க, எத்தினி தட வெத் திரியறதுங்க? இது வரைக்கும் கிஸ்தி பணமே கட்டலலியே.

சல: கட்றேன், ஆவட்டும்.

வெட்: இன்னும் எப்பங்க கட் டப் போறீங்க? பணம் கஜானுவுக் குப் போயிகிட்டே இருக்கு...

சல: எல்லாம் தெரியும் போ!

ராமய்யா பெருமாள் முதலியோர் பேசிக் கொண்டிருக்கும் போது நாராயணன் வருகிருன்.

நாரா; தெரியுமா சமாசாரம்? சலபதி கிஸ்தி கூடக் கட்டல்லே போலிருக்கு. அந்த வெட்டியான் பய நடுவழியிலேயே மடக்கிட்டான் அவனே.

பெரு: போங்கடா! நம்ம சாமய்ய புள்ளே இருக்கிற வரைக்கும் அவ னுக்கென்னடா கொறைவு?...சாமய்ய புள்ளே! நமம பையன வந்திருக் கானே.

சாம: எதுக்காம்?

பெரு: அதுக்குத்தான்...

எல்லோரும் சிரிக்கிருர்கள்.

(85-ம் பக்கம் பார்க்க)

"ஔவையார்" தயாராகிறாள்

சுதந்திரத் திருநாளான ஆகஸ்ட் 15-ம் தேதியன்று ஜெமினியின் மாபெரும் தயாரிப்பான 'ஔவையார்' திரைப்பட மும்முரமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. 'ஔவையார்' தயாரிப்பு சம்பந்தப்பட்ட காட்சிகளை அடுத்துவரும் பக்கங்களில் காணலாம்.



ஔவையார் தயாரிப்பில் வாஸன் பூரா கவனமும் செலுத்தி வருகிறார். மலைபோல் நிற்கும் யானைகளை கொண்ட பிரம்மாண்டமான காட்சியைச்சுட அவர் தீவிரமாக ஆலோசிக்கிறார்.





வெயிலிலே வாஸன் வேக வைத்த ஔவையை அரண்மனைக்கு அழைத்து வருகிறார் சுப்பு. வெளிப்புறக் காட்சிகள், உட்புறக் காட்சிகள் இப்படியாக மாறி மாறி நாளோரு காட்சியாக 'ஔவையார்' வளர்கிறாள்.



குதிரைப் படைக் காட்சியைச் சுட ஒரு ஆழ்ந்த பள்ளத்தாக்கு தேர்ந்தெடுக்கப் பட்டது. ஆ! என்ன பயங்கரமான பள்ளத்தாக்கு! ஆனால் இத்தகைய பயங் கரங்களைக் கடக்கவும் 'ஔவை' தயங்கவில்லை







பிரசித்திபெற்ற நம் தமிழ்நாட்டு கோயில்களிலும் மலைப் பள்ளத்தாக்குகளிலும் பசுஞ் சோலைகளிலும் காடுகளிலும் 'ஔவையார்' சம்பந்தப்பட்ட காட்சிகள் சுடப்பட்டன. ஔவை ஒரு தேச சஞ்சாரி அல்லவா?

யானைக் கூட்டங்கள் கொண்ட செலவு மிகுந்த அபிட்டங்களோடு 'ஔவை' திருப்திப் படவில்லை. மலிவான வைக்கோல் வண்டியையும் விரும்பினள்.





வெளிவரவிருக்கும் படங்களிலிருந்து காட்சிகள்

ஸ்ரீ சாயிகானாம்ருதா
புதுயுகம்

சங்கீதா பிக்சர்ஸ்
நால்வர்

ரேவதி
மனிதனும்
மிருகமும்

மெட்ராஸ் ஆர்ட்
ரோஹிணி

பரணி
சண்டி ராணி

ஷோபா பிலிம்ஸ்
பரோபகாரம்

பிரகாஷ் புரொடக்ஷன்ஸ்
பெற்ற தாய்
காட்சிகள்
PSR





பெற்ற தாயின், பெருமையை விளக்கும் பிரகாஷ் புரொடக்ஷன்ஸாரின் 'பெ ற தாய்' சென்னையிலும், தமிழ் நாட்டிலும் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. ஜி. வரலக்ஷ்மி நாகேஸ்வரராவ், நம்பியார், வஸந்தா, செல்லம் முதலியோர் நடித்த இப்படம் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாரிக்கப்பட்டிருக்கிறது.





ஸி.ஸி.புரொடக்ஷன்ஸ்
முயற்சி!
காட்சிகள்

...ஸ். ஸி. புரொடக்
ஷன்ஸார் மைசூரில்
தயாரித்திருக்கும்
'புரட்சி' ஒரு நல்ல
புரட்சி என்று சொல்
கிறார்கள். ஜோஸப்
பல்லிபாட் டைரக்ஷ
னில் நரசிப்பபாரதி.



ரேவதி, வி. கே. ராம சாமி, லக்ஷ்மிபிரபா ஆகியோர் நடித்த இப்படம் நாளைய 5-ம் தேதி சென்னையி லும் தமிழ் நாட் டிலும் வெளி யாகிறது.

"...'முயற்சி'தன்
மெய்வருத்தக்
கூலி தரும்"

செய்திச் சுருள்

முயற்சி

இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஜெர்மானியர்கள் அபார சக்திகளைக் கொண்டு எதிரிகளை கதிகலங்க அடித்தார்கள் என்றாலும் அவர்கள் மந்திரத்தை உச்சாடனம் செய்வது போல் ஒரு வார்த்தையை தொட்டதுக்கெல்லாம் உபயோகித்து வந்தார்கள். இந்தச் சொல ஜர்மானியப் படைகளுக்கு புதிய உற்சாகத்தைக் கொடுத்தது. 'முயற்சி' என்ற அந்த அபூாவ சக்தி வாய்ந்த சொல்லைத் தான் ஸி. ஸி புரொடக்ஷன்ஸார் தங்கள் தமிழ் படத்திற்கு வைத்திருக்கின்றனர். ஸி. ஸி புரொடக்ஷன்ஸ் மைசூர் நவஜோதியில் தயாரித்திருக்கும் இந்தப் படத்தில் நரசிம்மபாரதி, வி. கே. ராமசாமி, லக்ஷ்மி பிரபா, ரேவதி முதலியோர் நடித்திருக்கிறார்கள். ஜோஸப பள்ளிபாட் இந்தப் படத்தை டைரக்ட செய்திருக்கிறார். ஸி ஸி. புரொடக்ஷன்ஸ் முதல் முழு முயற்சியில் தோன்றி யிருக்கும் இப்படம் ரஸிக ரஞ்சகமாகவே அமைக்கப்பட்டிருக்கும என்று எதிர்பார்க்கலாம்.

திரும்பிப் பார்

'திரும்பிப் பார்' என்றதுமே என்னை நீங்கள் திரும்பிப் பார்க்க வேண்டாம்; அல்லது உங்கள் பின்புறமாகவும் திரும்பிப் பார்த்துக் கொள்ள வேண்டாம். இம்மாதம் வெளிவர விருக்கும் மாடர்ன் தியேட்டர்ஸ் படத்தை நீங்கள் 'திரும்பிப் பார்'த்தால் விஷயம் தெரிந்துவிடும். 'திரும்பிப் பார்' என்ற பெயரையே இப்படத்திற்கும் தலைப்பாக வைத்திருக்கிறார்கள் மாடர்ன் தியேட்டர்ஸார். இதனால் தனக்குத் தானே படமும் சுய விளம்பரம செய்து கொள்ளுகிறதல்லவா? படத் தலைப்பின புதுமைககேற்ப கதை யமைப்பும் நூதனமானதாம். கருணாநிதி இதற்கு வசனம் எழுதி யிருக்கிறார். அழகும் ஆர்வமும் கொண்ட கிருஷ்ணகுமாரி, கிரிஜா, பண்டரிபாய், 'சிவாஜி' கணேசன் முதலியோர் இதன் நடிகர் படடியலில் இடம் பெறறிருக்கின்றனர் 'திரும்பிப் பார்' படததை ரஸிகர்கள் 'விரும்பிப் பார்'க்கும் படமாக உருவாக்கி யிருக்கிறாராம டைரக்டர் டி. ஆர். சுந்தரம்.

பொன்னி

தமிழ் நாட்டின் தனிப்பெரும் வற்றாத நதியான காவிரிக்கு பொன்னைக் கொழித்துத் தரும 'பொன்னி' என்பதாக ஒரு 'காரணப் பெயர்' உண்டு 'பொன்னி' என்பது நம் தமிழ் நாட்டு மங்கைகள் ஆசையோடு சூட்டிக் கொள்ளும் 'பெயராபரணம. 'பொன்னி' என்ற பெயருக்குள்ள மதிப்பையும் மகத்துவத்தையும் எணணிப் பார்க்கும் போது பக்ஷிராஜாவின் 'பொன்னி' கதையின் தரமும் அமைப்பும் எப்படி யிருக்கும் என்பதை நாம யூகித்துக் கொள்ளலாம். தமிழ் நாட்டின் சூழ்நிலைகளோடு, தமிழர் பண்புகளின் மாணபு மிளிர மெருகிடப்பட்டு இந்த 'பொன்னி' வெள்ளித் திரையில் வெற்றி முழக்கம் கொட்டுவாள் என்று நாம் நம்பலாம். 'பொன்னி'யை ஒரு புதுமைப் பெண்ணாக திரைக்கு

உருவாக்கிய கைங்கர்யம் டைரக்டர் ஸ்ரீராமுலு நாயுடுவைச் சேர்ந்தது. அதன் நக்ஷத்திர மதிப்பை உயர்த்த லலிதா, பத்மினி, ஸ்ரீராம், துரைராஜ், டி. பாலசுப்ரமணியம் முதலியோர் இருக்கவே இருக்கிறார்கள்!

இன்ஸ்பெக்டர்

அஞ்சலிதேவி, பி. கே. சரஸ்வதி, எம். எஸ். திரௌபதி, டி. கே. ஷண்முகம், டி. கே. பகவதி, எஸ். பாலசுந்தர் முதலிய நடிகர்களைக் கொண்ட ஜூபிடரின் 'இன்ஸ்பெக்டர்' விரைவிலேயே தமிழ் நாட்டின் தியேட்டர்களை ரோந்து சுற்ற ஆரம்பித்து விடுவார். ஆர். எஸ். மணியை டைரக்டராகக் கொண்ட இப்படம் தமிழ், தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாரிக்கப்படுகிறது. தெலுங்குப் பதிப்பு சென்ற மாதம் திரையிடப்பட்டு விட்டது. நெப்டியூனில் சுடப்பட்டிருக்கும் இப்படக்கதை நாடக மேடையில் நல்ல வரவேற்பையும் ஆதரவையும் பெற்றதாகும்.

மனைவியின் மகன்

நமது காரியாலயத்திற்கு வரும் நூற்றுக்கணக்கான கடிதங்களில் "ஏவி. எம். பெண் தவிர வேறு எந்தத் தமிழ்ப் படத்தில் வைஜயந்திமாலா நடித்து வருகிறார்?" என்ற கேள்வியுடன் வரும் கடிதங்கள் அனேகம். ஜம்பு புரொடக்ஷன்ஸார் தங்களது 'மனைவியின் மகன்' படத்திற்கு அவரை ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதன் மூலம் இந்தக் கேள்விக்கு, எங்களுக்கும் முன்னதாகவே உங்களுக்கு பதிலளித்திருக்கிறார்கள். மனைவியின் மகன் படம் தமிழ், ஹிந்தி இரு பாஷைகளில் ரேவதியில் தயாரிக்கப்பட்டு வருகிறது. அகில இந்திய டைரக்டராக மாறிவிட்ட எம். வி. ராமன் இந்தப் படத்தை டைரக்ட் செய்து வருகிறார்.

எம். ஜி. ஆர். புரொடக்ஷன்ஸ்

நடிகர் எம். ஜி. ராம்சந்தர் சொந்தத்தில் ஸ்தாபித்திருக்கும் படக்கம்பெனியைப் பற்றிய விவரங்களை சென்ற இதழில் கொடுத்திருந்தோம். இது பற்றி மேல் விவரங்கள் கிடைத்திருக்கின்றன. நடிகர் எம். ஜி. ராம்சந்தரே இந்தப் படத்தை டைரக்ட் செய்யப் போகிறாராம். இன்னும் இரண்டொரு மாதங்களில் படப்பிடிப்பு ஆரம்பிக்கப் பட்டு விடும் என்று தெரிய வருகிறது.

உலகம்

கடந்த மூன்று ஆண்டுகளாக ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டூடியோவில் தயாரிக்கப்பட்டு வந்த 'உலகம்' திரையிடத் தயாராக இருக்கிறது. சுமார் 25 லக்ஷ ரூபாய்கள் இந்தப் படத்திற்காகச் செலவிடப்பட்டிருக்கிறதாம். நாகய்யா, டி. கே. பகவதி, டி. ஈ. வரதன், வீரப்பா, ராஜம்மா, பி. கே. சரஸ்வதி, எம். எஸ். திரௌபதி போன்ற பல நக்ஷத்திர நடிகர்கள் இதில் நடித்திருக்கின்றனர். லலிதா பத்மினி சகோதரிகள் நடனம் தவிர குமாரி கமலாவும் இப்படத்தில் நடனமாடியிருக்கிறார். உலகப் புகழ் பெற்ற மல்யுத்த வீரர்களான தாராசிங், அலிரஸாபே, டைகர் ஹோல்டன் போன்றவர்களின் மயிர்க்கூச்செரியும் மல்யுத்தமும், சிறுத்தைச் சண்டையொன்றும் 'உலகம்' படத்தில் 'ஹைலைட்'டுகளாக இருக்குமாம். இலங்கை வாசியான மூனஸ் தயாரித்திருக்கும் இப்படம் எல். எஸ். ராமச்சந்திரனால் டைரக்ட் செய்யப் பட்டுள்ளது. 'உலகம்' ரஸிக உலகம் போற்றும்படியாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

பரோபகாரம்

வாஹினி ஸ்டூடியாவில் முடிவடையும் தறுவாயிலிருக்கும் 'பரோபகார'த்தை விரைவிலேயே வெளிவரவிருக்கும் படங்களின் வரிசையில் சேர்த்துக்கொள்ளலாம். ராமசர்மா, ஜி. வரலக்ஷ்மி, சாவித்திரி, முக்காமலா முதலியோர் நடிக்கும் இப்படம் ஷோபர் பில்ம்ஸாரால் தயாரிக்கப் பட்டு வருகிறது. பரோபகாரச் சிந்தனையின் உயர்வை எடுத்துக் காட்டும் இந்தப் படம் பிரபல காமிராக்காரர் கமால்கோஷ் டைரக்ஷனில் வளர்ந்து வருகிறது.

தேவதாஸ்

வங்க நாட்டின் தலைசிறந்த நாவலாசிரியர்களில் சரத்சந்திர சட்டர்ஜி ஒருவர். தேவதாஸ் அவர் எழுதிய

சிறந்த நாவல்களில் ஒன்று. விஜேதா புரொடக்ஷன்ஸாரின் மூன்ருவது தயாரிப்பான 'தேவதாஸ்' இதே கதைதான். லலிதா, சாவித்திரி, நாகேஸ்வரராவ், நம்பியார் முதலிய நக்ஷத்திர நடிகர்கள் தேவதாஸில் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றனர். வேதாந்தம் ராகவய்யா உணர்ச்சி குன்ருத வகையில் இதை டைரக்ட் செய்திருக்கிருராம். நரசு ஸ்டூடியோ வில் தயாராகி யிருக்கிறது இந்தப் படம். தமிழ், தெலுங்கு இருமொழி களிலும் இப்படம் உருவாகி யிருக் கிறது.

ஸினி டெக்னீஷியன்கள் கூட்டம்

தென்னிந்திய சினிமா டெக்னீஷி யன்கள் சங்கத்தின் பத்தாவது ஆண்டு நிர்வாகிகள் தேர்தல் சென்ற மாதம் 3-ம் தேதியன்று நடை பெற் றது. கீழ்க் கண்டவர்கள் புது வருஷ நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட டிருக்கின்றனர்:

ஏ. கிருஷ்ணன் – தலைவர்; என். கிருஷ்ணஸ்வாமி, கே. ஜே. மகா தேவன். – உப தலைவர்கள்; ரஜனி காந்த், எம். ஈ. நாகராஜன் – காரிய தரிசிகள; ஹரிபாத சந்திரா–பொக் கிஷதார்.

டைரக்டர் ராம்நாத், ஏ. கே. சேகர், டாக்டர் பி. வி. பதி, அப்துல் மஜீத் காசி, பிரஸாத், ஆர். ராம மூர்த்தி. கே. ஆர். ராமசாமி. எம் நடராஜன், எம். ஏ. பார்த்தசாரதி ஆகியோரைக் கொண்ட மத்திய கமிட்டி ஒன்றும் அமைக்கப் பட்டிருக் கிறது.

பாராட்டு விழா

சென்ற மாதம் 2-ம் தேதி யன்று டி. கே எஸ். சகோதரர்கள் டைரக் டர் ராம்நாத்துக்கு ஒரு தேநீர் விருந் தளித்து வாழ்த்துரை ஒன்றை வாசித் தளித்தனர். 'மனிதன்' திரைப்படத் தயாரிப்பில் ராம்நாத் எடுத்துக் கொண்ட அக்கறையையும், படத்தை உயர்தரச் சித்திரமாக வெளிக் கொணர்ந்தது பற்றியும் பாராட்ட இவ்விழா நடைபெற்றது. சென்னை சர்க்கார்போக்கு வரத்து மந்திரி டாக் டர் யு கிருஷ்ணராவ் இந்த விழா வுக்குத் தலைமை வகித்தார்.

நண்பன்

மனிதனுகப் பிறந்த ஒவ்வொரு வருக்கும் கடமை என்பதுஒன்றுண்டு. அந்த வகையிலே நண்பன் என்று உறவு முறை கொண்டவனுக்கும் சில தனிக் கடமைகள் உள. கூடுமான வரை தனது உயிரைத் துச்சமாக மதித்து பிறருக்கு உதவும் தன்மை படைத்தவனுக அவன் இருக்க வேண்டும். இந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு நண்பன் என்ருெரு தமிழ்ப் படம் ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டூடியோவில் தயாராகி வருகிறது. எம் டி வி. புரொடக் ஷன்ஸ் இதன் தயாரிப்பாளர்கள். நாகய்யா, மனேஹர், பி. கே. சரஸ் வதி முதலியோர் நண்பன் படத்தின் நடிகர் பட்டியலில் இடம் பெற்றிருக்கின்றனர். பாலய்யா, குமாரி கமலா முதலியோர் இதில் நடிக்கவும் கூடுமாம். முன்னுள் நடிகரும் அனுபவ டைரக்டருமான பி. எஸ் ஸ்ரீநிவாஸராவ் நண்பனின் டைரக்டராக அமர்ந்திருக்கிருர். கடந்த இரண்டு மாதங்களாக நடை பெற்று வரும் இதன் படப்பிடிப்பு இன்னும் இரண்டு மாதங்களுக்குள் முடிவடைந்து விடுமாம்.

ஏவி. எம். திரும்பினுர்

சென்னை ஏவி. எம். ஸ்டுடியோ அதிபரான டைரக்டர் ஏவி. மெய்யப்ப செட்டியார் மலேயா, சிங் கப்பூர், ஜப்பான் முதலிய நாடுகளுக் குச் சென்றுவிட்டு சென்ற மாதம் 16–ம் தேதியன்று சென்னை திரும்பி னுர். அன்றைய தினம் மாலை ஏவி. எம்.மில் ஸ்டுடியோ தொழிலாளி களால் அவருக்கு ஒரு தேநீர் விருந் தளிக்கப்பட்டது.

ஏவி. எம். தனது தொழிலாளி களின் நன்றிக்குப் பாராட்டி தனது வெளிநாட்டு அனுபவங்களைப் பற்றி எடுத்துரைத்தார். ஜப்பானில் ஐம்பது முதல் அறுபதாயிரம் ரூபாய்களுக்குள் ஒரு படம் எடுக்கப்பட்டு விடுகிறது என்ற தகவலை அவர் கொடுத்த போது பலரும் ஆச்சர்யமடைந் தார்கள்.

ஸ்டூடியோ சிப்பந்திகள் சார்பாக வந்தனேபசாரம் கூறப்பட்டது.

ஏராளமான பத்திரிகைப் பிரதிநிதிகளும், படவுலகப் பிரமுகர்களும் இந்தப் பாராட்டு விழாவில் கலந்து கொண்டனர்.

சென்ற மாதம் 24-ம் தேதியன்று சினி டெக்னீஷியன்கள் சங்கத்தின் சார்பில் ஏவி. எம். தனது வெளிநாட்டு அனுபவங்களைப் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினர். சங்கத் தலைவரான ஏ. கிருஷ்ணன் இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். 'சன்' தியேட்டரில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது.

ஔவையார்

பல ஆயிரக் கணக்கான ரஸிகர்கள் வெகு ஆவலுடன் எதிர்பார்த்துவரும் ஜெமினியின் ஔவையார் வரப்போகும் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி, சுதந்திரத் திருநாளன்று திரையிடப்பட்டுவிடும் என்பதாகத் தெரிகிறது. ஔவையார் ஜெமினியின் நீண்டகாள் தயாரிப்பாகும். இதற்காக பல லக்ஷக் கணக்கில் ஜெமினி பணம் செலவிட்டிருக்கிறது. பிரம்மாண்டமான அரண்மனைகள், ராஜவீதிகள், கோட்டைகள் எல்லாவற்றுக்கும் சிகரமாக கைலயங்கிரிக் காட்சி ஜோடனைகள் முதலியவை ஔவையாரின் தனிச் சிறப்புகளாகும். கே. பி. சுந்தராம்பாளின் இனிய கானமுதமும், கண்கவர் நடனங்களும் ஔவையாரின் சிறப்பை மேலும் உயர்த்துகின்றன. பல நூற்றுக்கணக்கான யானைகளும், ஆயிரக் கணக்கான நடிகர்களும் நடித்திருக்கும் 'ஔவையார்' தமிழர் பண்பாட்டையும், கலாசார மேன்மையையும் விளக்கும் காவியமாகத் திகழும் என்பதில் சந்தேகமில்லை.

ஜீவக சிந்தாமணி

கந்தன் கம்பெனியார் தயாரித்து வந்த 'ஜீவகன்' ஜீவகசிந்தாமணி என்ற புதுப் பெயருடன் சென்னையில் வளர ஆரம்பித்திருக்கிறது. சமீபதில் இந்தப் படத்திற்கென ஒரு பெரிய குகைக் காட்சி ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டூடியோவில் சுடப்பட்டது. ஹொன்னப்ப பாகவதர், மாதுரி தேவீ முதலியோர் இதில் நடித்து வருகின்றனர்.

பழிக்குப்பழி

பிரபல ஆங்கிலப் படத் தயாரிப்பாளர்களான ஜே. ஆர்தர் ராங்க் ஸ்தாபனத்தார் பழிக்குப்பழி என்றொரு தமிழ்ப் படத்தை இம்மாதம் 5-ம் தேதியன்று திரையிடப் போகிறார்கள். அவர்களது வெற்றிப்படமான 'காரவன்' என்ற ஆங்கிலப் படத்தின் தமிழ்ப்பதிப்புத்தான் இந்தப் படம். டி. எம். யு. பதி இந்தப் படத்திற்கான வசனத்தை எழுதியிருக்கிறார். வஸந்தகுமாரி, ஜிக்கி, ராஜா முதலியோர் இதன் பின்னணியில் பாடியிருக்கிறார்கள். சவுக்கடிக் காட்சி போன்ற ஜன ரஞ்சகமான அம்சங்களும் இதில் இருக்கின்றனவாம்.

பெற்றதாய்

சென்ற மாதம் 15-ம் தேதியன்று பிரகாஷ் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பான பெற்றதாய் தமிழ் நாடெங்கும் திரையிடப்பட்டிருக்கிறது. 'அண்ணி' என்ற கற்பனை அழகும், கருத்துயர்வும் கொண்ட 'சிந்தனை' யொன்றை திரைப்படமாக வடித்துக் கொடுத்த பிரகாஷ் புரொடக்ஷன்ஸார் அந்தப் பாதையிலேயே பெற்ற தாயையும் உருவாக்கி யிருக்கிறார்கள். ஜி. வரலக்ஷ்மி தாயாராக இதில் வருகிறார். டி. டி. வசந்தா, நாகேஸ்வரராவ், நம்பியார் முதலியோர் அவருடன் தோன்றுகிறார்கள். 'கன்ன தல்லி' என்ற பெயரில் இதன் தெலுங்குப் பதிப்பு வெளியிடப் பட்டிருக்கிறது. இவ்விரு படங்களும் பிரகாஷ் ஸ்டூடியோவில் பிரகாஷ் ராவ் டைரக்ஷனில் தயாராகி இருக்கின்றன.

மனிதனும் மிருகமும்

எஸ். டி. சுந்தரம் எழுதிய இந்த நூதனமான நாடகம் ரேவதியின் தயாரிப்பாக வளர்ந்து வருகிறது. கே. வேம்புவுடன் எஸ். டி. சுந்தரமும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு இப்படத்தை டைரக்ட் செய்து வருகிறார். சிவாஜி கணேசன், கே. சாரங்கபாணி, டி. ஆர். ராமச்சந்திரன், சிவதாணு, மாதுரிதேவி, குமாரி ராஜம் முதலியோர் இப்படத்தின் பிரதான நடிகர்களாக அமர்ந்திருக்கின்றனர்.

பிருந்தாவனம், திருநெல்வேலி

உங்கள் 'பேசும் படம்' முதல் இதழில் யாருடைய படத்தைத் அட்டையில் பிரசுரித்திருந்தீர்கள்?

பிரபல வட இந்திய நடி தேவிகா ராணியின் புகைப்படத்தைப் பிரசுரித்திருந்தோம்.

து. பிச்சை, காட்டுமன்னார்குடி

சென்னையில் 'கோடக்' காமிரா எங்கு கிடைக்கும்? நடுத்தரமான காமிராவின் விலை என்ன?

சென்னையிலுள்ள எல்லா பெரிய போட்டோ ஸ்டோர்களிலும் இக் காமிரா கிடைக்கிறது. நீர் கேட்பது சினி காமிராவா? அல்லது சாதாரணக் காமிராவா என்பது தெரியாமல் நான் விலையை எப்படிக் குறிப்பிடமுடியும்?

விளம்பரப் போஸ்டர்கள் எழுதுவதற்கு தனிப் படிப்பு வேண்டுமா?

சென்னை சர்க்கார் ஒரு கலைக் கல்லூரியை ஏற்படுத்தி இதற்கென பாடம் போதித்து வருகிறது. நன்ருக, அழகாக எழுதும் திறமையும் வர்ணச் சேர்க்கையைப்பற்றிய அனுபவமும் ஓரளவு இருந்தால் இதற்குப் போதுமானது.

நான் சென்னைக்கு வந்தால் உங்கள் காமிரா நிபுணர் ஸ்டுடியோக்களுக்கு என்னை அழைத்துச் செல்வாரா?

நிச்சயம் செய்வார்! குறைந்த பக்ஷம் அவர் காமிரா பெட்டியைத் தூக்கிக் கொண்டு வருவதற்காவது ஒரு துணை கிடைக்குமே!

எஸ். ஏ. இஸ்மாயில், கோட்டக்குப்பம்

மு. கருணாநிதியின் விலாசமென்ன? தற்போது எந்தப் படத்திற்குக் கதை எழுதுகிருர்?

கோபாலபுரம் 3-வது தெரு' சென்னை-14 என்பது அவர் விலாசம். எம். ஜி. ராமசந்தர் தயாரிக்கப் போகும் படத்திற்கு அவர் கதை எழுதிக் கொண்டிருக்கிருர்.

ரா. ம. கா. தங்கவேலு, வவுனியா

பம்பாயில் தமிழ் பேசும் மனிதர்கள் கிடையாது என்று எனது நண்பர் கூறுகிருர். இது உண்மை தானு?

இருபதாம் நூற்ருண்டின் மிகப் பெரிய பொய் இது! ஒரு நல்ல தமிழ் பத்திரிகை அங்கிருந்து வரும் அளவுக்கு தமிழ்ஆதிக்கம் அங்கு உள்ளது.

கே. முருகய்யா, இலங்கை

குமாரி வனஜாவுக்கு உண்மையிலேயே கார் ஓட்டத் தெரியுமா?

ஆமாம்! பாதசாரிகள் பயமின்றித் தெருவில் போகலாம்.

ஞா. சௌந்திரன், இலங்கை

அறிஞர் அண்ணுத்துரை, மு. கருணாநிதி போனறவர்கள் சினிமாவுக்கு வசனமெழுதுவது மக்களுக்காகவா, அல்லது சினிமாவிற்காகவா?

சொந்த வாழ்க்கைக்காக!

'பேசும் பட' நேயன் சுல்தான்பேட்டை

கலைஞர்கள் எந்தக் கட்சியிலும் சேரககூடாது என்று மதுரையில் பேசிய அதே சிவாஜி கணேசன கோவையில் 'பரப்பிரம்மம்' நாடகத்தில் பேசியபோது 'அண்ணு ஆணையிட்டால், கருணாநிதி கட்டளை யிட்டால்எனது நடிப்புத்தொழிலையும் விட்டுவிட்டு நாடு விடுதலை

அடையப் பணிபுரிய தயார் என்று கூறியிருப்பதன் மர்ம மென்ன ?

நாடகத்தில்தானே பேசியிருக்கிறார் என்று சொல்கிறீர்! அப்பொழுது அது ஒரு 'வழக்கமான' வசனத்தில் சேர்க்கப்பட வேண்டியதுதான்.

ஜி. எஸ். பாண்டியன், இலங்கை

வாழ்க்கையில் மனமுடைந்த் ஒருவன் உயிர் பெரிதென்று மானத்தை இழப்பதா, அல்லது மானம் பெரிதென்று உயிலர இழப்பதா ?

தமிழனுக்கு தன்மானம் தான் பெரிதென்றாலும், வாழ்க்கையில் தனக்கு ஏற்பட்ட தோல்விக்கு மரணம் தான் முடிவு என்று நினைத்தானானால் அவனது வீரத்தன்மைக்கு மாசு வந்து விடக்கூடுமல்லவா ?

எஸ். எஸ். செல்லையா, சிலோன்

நான் பிரதிமாதமும் 'பேசும் படம்' வாங்குவதைப் பார்த்த ஒரு பெண் 'இதை வாங்குவனால் பலன் என்ன் கிடைக்கிறது?' என்று கேட்கிறாள். உங்களுடைய அபிப்பிராயம் ?

'உங்களுக்குப் பலன் இல்லா விட்டாலும் எங்களுக்கு இருக்கிறது' என்ற சுயநல பாவத்தில் கேட்டிருக்கலாம். அப்பொழுது தானே 'பேசும் படம்' படிக்க அவர்களுக்குப் பிரதான்யம் கிடைக்கும்!

விமலன், கோவில்பட்டி

நாடக மனன்ன் டி. கே. பகவதி எந்தெந்தப் படங்களில் நடித்திருக்கிறார் ?

மேனகா, பில்ஹணன், மனிதன், இன்ஸ்பெக்டர், உலகம் முதலிய படங்களில் நடித்திருக்கிறார்.

எம். வி. ரத்னகுமார், இலங்கை

பகவதி, ஷண்முகம் இருவரில் மூத்தவர் யார் ?

ஷண்முகம்.

ஞா. சு. தியாகராசன், மதுரை

பராசக்தியில் வரும் பாடல்களை முறையே யார் யார் எதை எழுதியிருக்கிறார்கள் ?

அதைப்பற்றிய வாதப் பிரதிவாதம் தான் ஓய்ந்து போன விஷயமாயிற்றே!

மு. மலர்மன்னன், குருநாகலை

சினிமா நடிகைகளுக்கு மண்டை வலி எப்போது ஏற்படும் ?

அவர்களது வயதையும், வருமானத்தையும் பிறர் கேட்கும்போது!

சந்திரா, திருக்கோகர்ணம்

மயக்கிவிடும் என் உருவம், மாயை காட்டும் என் பருவம், எனக்கு காரைக்குடி விஸ்வநாதன் பிக்சர்ஸ் மல்லிகாவில் நடிக்க சந்தர்ப்பம் கிடைக்குமா ?

உம்மைப்பற்றி நீர் செய்து கொண்டிருக்கும் விமர்சனம் உண்மையாக இருக்கும் பட்சத்தில் உமது முயற்சி வெற்றியைக் கொடுக்கலாம்.

வி. திருப்பதி, திருக்கோவிலூர்

தமிழ் நடிகைகள் தெலுங்கு நடிகைகள் இவர்களில் யார் யாருக்கு குதிரைப் பந்தய ஆசை இருக்கிறது ?

தங்கள் அதிருஷ்டத்தில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு!

ப. விஸ்வநாதன், சென்னை-3

ஜெமினி கணேசன் தற்போது எந்தெந்தப் படங்களில் நடித்து வருகிறார்.

ஜெமினியின் ஔவையார், ஏவி. எம் பெண், நாராயணன் கம்பெனியாரின் மனம் போல் மாங்கல்யம் முதலிய படங்களில் அவர் நடித்து வருகிறார்.

எஸ். செல்வராஜ், பழனி

பின்னணியில் பாடும் தலத் மொஹமது ஆணா அல்லது பெண்ணா ?

நல்ல சந்தேகமய்யா! தலத் மொஹமது ஒரு ஆண்தான்!

எம். எஸ். சூசைமாணிக்கம், சுண்ணுகம்

'பாதாள பைரவி' புகழ் கே. மாலதி எந்தப்படத்தில் நடிக்கிறுர் ?

தற்போது அவர் எந்தப் படத்திலும் நடிப்பதாகத் தேரியவில்லை.

வி. ஏ. முகமது இப்ராஹிம், நெல்லிக்குப்பம்

புளிமூட்டையை ஸாம்ஸனுகவும் அங்கமுத்துவை டிலைலாவாகவும் நடிக்க வைத்து ஓர் படம் தயாரித்தால் அது எப்படி இருக்கும் ?

குறைந்த பட்சம் உமது ஆதரவைப் பெறும் வகையில் இருக்கும்!

எஸ். வி. எஸ். சங்கப் பிள்ளை, மாநெலு

நான் சென்னை வந்தால் ஸ்டுடியோக்களைப் பார்க்க முடியுமா ?

தாராளமாக! ஆனல் உள்ளே தான் போய்ப் பார்க்க முடியாது!

க. சதாசிவம், இலங்கை

ஸ்ரீரஞ்சனியை ஜூனியர் என்று அழைப்பதேன் ?

ஸ்ரீரஞ்சனிக்கு முன்பாக தமக்கை ஸ்ரீரஞ்சனி படத்தில் நடித்து வந்தார், அவர் ஸீனியர். இவர் ஜூனியர் அவ்வளவுதான்! ஸீனியர் ஸ்ரீரஞ்சனி காலமாகிவிட்டதால் ஜூனியர் என்ற பதம் இப்போது ஸ்ரீரஞ்சனிக்கு அதிகமாகத் தேவைப்படுவதில்லை.

எம். எச். சுபெர், யாழ்ப்பாணம்

'பேசும் பட'த்தில் நக்ஷத்திரம் பிறந்த நாள் என்று ஒரு பகுதி ஆரம்பியுங்களேன்?

'புதிய' விஷயமாகச் சொல்லுங்கள்! செய்ய முயற்சிக்கிறோம்.

மாரியப்பன், தர்மபுரி

நான் நன்ருகப் பாடுவேன். சினிமாவில் நடிக்க முடியுமா ?

குரலினிமையைக் கொண்டு அழகை மதிப்பிட முடியாதபடி நமது பின்னணிப் பாடகர்கள் செய்து விட்டார்களே! சினிமாவில் நடிக்க முக வெட்டு முக்கிய தேவை.

மாரியப்பன், தர்மபுரி

படிக்கும் மாணவர்கள் விரும்பும் புத்தகம் எது ?

ஆசிரியர்களும் போட்டிக்கு வரும் சினிமா சஞ்சிகைகள்தான்

எழுத்துப்பித்தன், பம்பாய்

தற்காலத்திய பட உலகத்தின் தன்மை, 'மலர்ந்த மணமற்ற மலர்' என்கிருர் என் நண்பர். இது உண்மைதானு ?

ஓரளவுக்கு உண்மைதான்.

படவுலக முன்னேற்றப் பாதையில் அடி எடுத்து வைக்க ஆவலோடு காத்திருக்கும் எக்ஸ்ட்ரா நடிக நடிகைகளின் முற்போக்குப் பாதைச் செப்பனிடப் பட்டுள்ளதா ?

இல்லை. முள்வேலி போட்டுத்தடுக்கப்பட்டுள்ளது.

பத்திரிகை ஆசிரியர், தேர்தலுக்கு நிற்பவர் இவர்களில் நல்லெலண்ணம் படைத்தவர் யார் ?

இருவருக்கும் மக்களின் ஆதரவு தேவை! ஆகவே நல்லெண்ணம் படைத்தவருக்குத்தான் ஆதரவு கிட்டும் என்று நான் சொல்லத் தேவையில்லையே!

அ. எல்லமுத்து, டிக்கோயா

'கல்யாணம் பண்ணிப் பார்'என்ற கதையை எழுதியவர் எம். ஜி. சக்ரபாணியா அல்லது வேறு யாரும் இருக்கிருர்களா ?

இல்லை! அதன் தயாரிப்பாளர்களான விஜயா புரொடக்ஷன்ஸ் பாகஸ்தர்களுள் ஒருவரான சக்கரபாணி இதை எழுதியுள்ளார்.

ஜுபிடர் பிரியன், மதுரை

'பெண்'கள் செவ்வாய்கிழமை விரதம் இருக்கிருர்களே, அதுபோல நடிகைகள் அனுஷ்டிப்பார்களா ?

'பெண்'ணுக்கும் 'நடிகை'க்கும் என்ன தாராதம்யம் கொண்டு இக் கேள்வியைக் கேட்கிறீர்? நடிகைகள் பெண்களாக உமக்குத் தென்படவில்லையா ?

கன்னியின் காதலி, வளையாபதி இவ்விரு படங்களில் வசனத்தில் சிறந்த படம் எது?

கன்னியின் காதலி அடைந்த செல்வாக்கை வளையாபதி பெறவில்லை.

சேவியர், திருச்சி

சினிமா நடிகைகள் சொந்தப் படம் எடுப்பது எதற்குச் சமான மானது?

பரீட்சைக்கு உட்காரும் மாணவனது நிலையைப் போன்றது!

இப்ராஹிம், திருச்சி

பானுமதி சண்டிராணி தவிர வேறு படங்களில் நடிக்கிறாரா?

இல்லை.

எம். சுப்ரமணியம், பெருந்துறை

பானுமதி, பத்மினி, வனஜா, வைஜயந்திமாலா இவர்களில் அழகில் சிறந்தவர் யார்?

பத்மினி என்பதாக என்னுடைய அபிப்பிராயம்.

டி. எஸ். பத்மினி, சென்னை–4

டி. கே. எஸ். சகோதரர்களின் வீட்டு விலாசத்தைத் தெரிவிக்க முடியுமா?

'அவ்வையகம்', லாயிட்ஸ் ரோடு, சென்னை–14 என்பது அவர்கள் விலாசமாகும்.

ரிஸா, காலி

இந்தியத் தயாரிப்பாளர்கள் இவ்வருடத்துக்குள்ளே கனபரிமாண (சினிரமா) பிலிம்கள் தயாரித்து வெளியிடுவார்களா?

சாந்தாராம் இது விஷயத்தில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார். ஆனாலும் வருஷ முடிவுக்குள் வெளிவருமா என்பது சந்தேகம்தான்.

பி. எஸ். பூலோகம், இலங்கை

சினிமா நடிகையின் அழகு இயற்கையிலேயே அப்படி உள்ளதா, செயற்கையா?

இயற்கையை விட செயற்கை அழகில்தான் அவர்கள் அதிகம் மின்னுகிறார்கள்!

என். ஆர். ராமச்சந்திரன், பூனா.

நான் மிகவும் புதிய படங்களைப் பார்க்க விரும்புகிறேன் இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

சொந்தத்தில் ஒரு விமானம் வாங்கிக்கொண்டு, அதை ஓட்டப் பழகிக் கொள்ளுங்கள் எந்தெந்த ஊரில் புதிதாக படம் ரிலீஸாகிறதோ அங்கு பறந்துபோய் பார்த்துவிட்டு வந்து விடுங்கள்.

தமிழ்வாணன், திருச்சி

பாகவதர் நடிப்பதாக இருந்த மோகினித் தீவு என்னவாகியது?

அந்தத் தீவு கடலில் மூழ்கி விட்டது!

எம். எஸ். பெருந்துறை

திரைப்பட வசனங்களில் அடுக்கு மொழி அவசியமா?

அப்படியொன்றுமில்லை. வசனம் கருத்தழகுடன் காதுக்குக் கேட்பதற்கு இனிமையாக இருந்தால் போதும்.

லலிதா பத்மினி சகோதரிகள் தற்போது எந்தப் படங்களில் நடித்து வருகின்றனர்?

'பொன்னி', 'அன்பு' படங்களில் சகோதரிகள் இருவரும் நடித்து வருகின்றனர். லலிதா தேவதாஸியிலும், பத்மினி சொர்க்கவாசலிலும் நடித்து வருகிறார். ராஜ்கபூரின் 'அஜந்தா' வர்ணப படத்தில் பத்மினி நடிக்கக்கூடும்.

ரத்னகுமார், இலங்கை

'உன்னருளில் அன்பு வைத்தேன் கண்ண பரமாத்மா' என்ற பாடலை பி. யூ. சின்னப்பாவே பாடினாரா அல்லது பின்னணியில் ஜி. ராமனாதன் பாடினாரா?

பி. யூ. சின்னப்பாவுக்குப் பின்னணி தேவையில்லையே!

வி. க, கனக செல்வராஜா, வவுனியா

நடிகர் டி. ஆர். மகாலிங்கம் புல்லாங்குழல் வாசிப்பாரா ?

ஓ, நடிப்புக்காக !!

சி. து. மணி, சித்தூர்

பண்டரிபாய வாழ்க்கை வர்ணனையில் அவரது வயதை ஏன் குறிப்பிடவில்லை !

பிறந்த தேதியை குறிப்பிட்டிருக்கும் போது நீங்களாகவே இதைத்தெரிந்து கொண்டு விடலாமே என்று தான் !

ஆ. கமலா, சென்னை

வாழப்பிறந்தவள் படத்தில் பி. எஸ். சரோஜாவின் தகப்பனுராக நடிப்பவர் டி. பாலசுப்ரமணியமா அல்லது ஆர். பாலசுப்ரமணியமா?

ஆர். பாலசுப்ரமணியம்.

பி. ராமகிருஷ்ணன், உதகை

தென்னிந்தியாவில் நாடகம் எந்த நிலையில் உள்ளது ?

'பனறி குட்டி போட்ட' கதையின் தரத்தில் உள்ளது !

இந்தக் காலத்து சினிமா. கலையா அல்லது கட்சிகளின் கூடாரமா ?

இரண்டுமில்லை. பொறுமைக்கு ஒரு சோதனை !!

எஸ், தங்கவேலு, நாகூர்

மந்திரிகுமாரியில் நம்பியார் மொட்டைத தலையுடன் காட்சியளிக்கிருரே அது 'மேக்-அப்'பா, அல்லது உண்மையா ?

பாவம் ! மந்திரிகுமாரி அவர் தலையை மொட்டை அடித்து விட்டாள் !

ஜி. எஸ். பாண்டியன், அவிசாவெல்ல

பிறருக்கு நலல மனிதனுகவும் ஒழுககமுள்ளவனுகவும் வாழும் ஒருவன் தனககுள இந்த உலகத்தில் வாழ முடியாது என்று நினைத்துக் கொண்டிருப்பானுனல் அவன் எப்படிப் பட்டவனுக இருபபான் ?

தன் வாழ்கையின் மீது நம்பிக்கையற்ற அப்பாவி குணம் படைத்த கோழையாக இருப்பான் !

கே. சாருபதீன், கொழும்பு

எம். எல். வசந்தகுமாரியின் விலாச மென்ன ?

எட்வர்ட் எலியட்ஸ் ரோடு. சென்னை-4 என்று அவர் பெயருடன் போட்டால் கடிதம் போய் சேர்ந்து விடும்.

து. பிச்சை, காட்டுமன்னார்குடி

ஔவையாருக்கு அடுத்த ஜெமினியின் படம எது ?

தயாராகி வரும் புரொடக்ஷன்-19 தான்.

எம். ஏ. இஸ்மாயில், வவுனியா

அகில இந்திய புகழ் ரஞ்சனுக்கு கத்திச் சண்டை கற்றுக கொடுத்தது யார் ?

ஸடண்ட் சோமுவிடம் அவர் ஓரளவு பயிற்சி பெற்றிருக்கிருர்.

வி. பி. ரங்கன், சென்னை-12

பாட்டுக்களையும், வசனங்களையும் முதலில ஒலிப்பதிவு செய்து கொண்டு விட்டுப் பினனர்தான் படத்தை சுடுகிருர்களா ?

பாட்டுக்கள் சிலவற்றை முதலில் பதிவு செய்து கொள்வார்கள். வசனம் படப்பிடிப்பின்போதே ஒலிப்பதிவு செய்யப்படுகிறது. ஒரு சில காட்சிகளின் போதுதான வசனங்கள் பின்னதாகப் பதிவு செய்யப் படுகின்றன. இது டப்பிங் முறை.

தமிழ்ப்பட நடிகர்களில் அதிகப் பணம வாங்கியிருப்பவர் யார் ?

ஒருவருடைய வயது, வருமானம், குடும்ப விஷயம் ஆகிய விபரங்களைப் பற்றி விசாரிப்பது அநாகரிகம்.

டி. பி. தியாகராஜ சர்மா, திரிகோணமலை

மனிதனில் நடிக்கும் சாவித்திரி இதற்கு முன வேறு படங்களில் நடித்திருக்கிருரா ?

அவர் சாவித்திரி அல்ல; கிருஷ்ண குமாரி. வாழ்க்கைச் சித்திரத்லதப் படியும்.

("சினிமா பார்க்கும் போது ஜனங்கள் ஆபாசத்தைத்தான் விரும்புகிறார்கள். மாயாஜாலப் படங்களும், ஸ்டண்டுகளும்தான் ஓடுகின்றன. அரை நிர்வாண நடனம் இல்லாத படங்கள் தோல்வியடைகின்றன" என்றெல்லாம் கூறும் படமுதலாளிகளை இந்தப் பகுதியைக் கவனமாகப் படிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். ஜனங்கள் எதை ரஸிக்கிறார்கள்; எதைப் பாராட்டுகிறார்கள் என்று தெரிந்து கொள்ள இப்பகுதி மிகவும் உபயோகமாக அமைந்திருக்கிறது-ஆசிரியர்.)

*பணக்காரி

பிரேமா ஒரு உத்தமி. ஆனால் கொண்ட கணவனாலேயே விபசாரி என்று வீட்டை விட்டுத் துரத்தப்பட்ட அவள் மனம் வெறுத்து வாழ்வின் எல்லைக் கோட்டைத் தாண்டுவதற்காக ரயில் தண்டவாளத்தில் ஓடுகிறாள். அவளைத் தேடிக்கொண்டு அவள் குமாரனும், அவனைப் பின்பற்றி அவன் அப்பாவும் ஓடி வருகின்றனர். இடையே குழந்தை ஓடுவதைக் கண்டு விட்ட சுந்தர் அதைத் தொடர்ந்து ஓடி, பிரேமாவைக் கண்டு அவளைத் தடுக்க முயலுகிறான். ஆனால் சாகத் துணிந்து விட்ட அவள், அவனைத் திமிறி வண்டியில் விழ முயலும் போது, அவளை வெளியே தள்ளிவிட்டு ரயிலில் அறை பட்டு விழுகிறான் சுந்தர். மரணத் தறுவாயில் அவன் பிரேமாவின் கணவனிடம் உண்மையைக் கூறும் போது, அவளுக்காக அவன் செய்யும் தியாகம் நம்மைப் பிரமிக்கச் செய்கிறது.

குமார்,
சென்னை.

*பணத்தைப் பெரிதாகக் கருதாத பணக்காரன் பூபதி கிராம சேவையில் ஈடுபடுகிறான். புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவசமாகத் தானியம் கொடுக்கிறான். அப்போது ஒருவனுக்கு அதிகமாகக் கொடுக்கவே, பக்கத்திலிருந்த பணியாள் அதைச் சுட்டிக் காட்டுகிறான். அப்போது அந்தத் தர்மவான், 'உடம்பில் வயிறு என்ற உறுப்பு இருக்கும் வரை ஏழையானாலும் பணக்காரனானாலும் பெரிய லட்சாதிபதியானாலும் அதிமேதையானாலும் அவர்கள் ஜீவித்திருப்பது, ஏர்பிடித்து நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடும் இந்த விவசாயிகளினால்தான். ஆகையால் அவர்களுக்கு அதிகமாகக் கொடுத்து விட்டால் ஒன்றும் பாதகமில்லை' என்கிறான். மனமுருக்கும்—மனதை மகிழச் செய்யும் அரிய காட்சி.

வி. ஜயராமன்,
கோயமுத்தூர்.

*பெற்ற தாய்

சங்கர் செய்த குற்றத்தை ஏற்று சிறை செல்கிறாள் சாந்தா. இதையறிந்த ராமுவும் சங்கரும் சிறைக்கு ஓடோடியும் வந்து தாயின் கால்களிலே விழுந்து கதறுகிறார்கள். 'நான் மகா பாவி. என்னை மன்னித்து விடு' என்று கூறித் துடிக்கிறான் சங்கர். 'நான் குற்றத்தை ஒப்புக் கொண்டு உன்னை விடுதலை செய்கிறேன்' என்று காலைப் பிடித்துக் கொண்டு கெஞ்சுகிறான் அவன். அப்போதும் பெற்ற பாசம் சாந்தாவை விடவில்லை. 'நீ நூறு ஆயுசு வாழ வேண்டும். உனக்காகத்தானே நான் இவ்வளவு பாடு படுகிறேன்' என்று கூறும்போது

*இக்குறியிடப்பட்ட மூன்று கடிதங்களுக்கும் தலைக்கு ஐந்து ரூபாய் வீதம் பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு தாயின் பெருமையைப் பற்றியும் உணர முடிகிறது.

பி. எஸ். மணி,
தச்சநல்லூர்.

பணக்காரி

சுந்தர் கிளப்பில் தன்னிடம் காதல் கொண்டதை அறிந்தும் அவனை வெறுக்காது, களங்கமற்ற பிரேமா, அவனிடமிருந்து சகஜமாகவே பிரிந்து வரும்போது கணவன் பாலு கோபிக்கிறார். அவள் பதட்டப்படாமல் உண்மையை விளக்கும்போது ஒரு அடக்கமான குடும்பப் பெண்ணின் தன்மையைப் பிரதிபலிக்கிறார்.

எஸ். வத்ஸலா,
சென்னை.

சுந்தரின் நட்பால் சந்தேகிக்கப்பட்ட பிரேமா கணவன் பாலுவால் வீட்டை விட்டு விரட்டப்படுகிறாள். குழந்தை மனோஹர் தாய்ப் பாசம் தாங்காது 'அம்மாதான் வேண்டும்' என்று கதறும்போது நம் கண்களிலே நீர்த்திரையிடுகிறது.

கேசவன்,
திண்டுக்கல்.

மாயாண்டிக்கு நிறைய சொத்திருப்பதாகச் சொல்லி ஏமாற்றி ஒரு படித்த பெண்ணை அவனுக்கு மணமுடித்த சிவசூரியனிடம் அந்தப் பெண்ணின் தந்தை கோபிக்கும்போது, 'மில்களும் பங்களாக்களும் ஊரில் இருப்பதாகச் சொன்னேனே ஒழிய இவருக்கு இருப்பதாகச் சொல்லவில்லையே' என்கிறான். அதைப் பார்க்கும்போது கொல்லென்று சிரிப்பு வருகிறது. தமாஷான காட்சி இது.

ஆர். வி. ஜெயராஜ்,
கோயமுத்தூர்.

சமூகமும் கணவனும் விபசாரி என்று தூற்றி வீட்டைவிட்டு விரட்டியும்கூட புத்திரபாசம் தாங்காது ஓடிவந்த பிரேமா, கணவனுக்குப் பயந்து வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். ஆனால் விழித்துக்கொண்டுவிட்ட சிறுவன் மனோஹர், 'அம்மா அம்மா' என்று கதறிக் கொண்டே வீதியில் ஓடும் காட்சி கல்மனதையும் கலங்கச் செய்வதாயிருக்கிறது.

ஜி. அமிர்தலிங்கம்,
கும்பகோணம்

பணக்காரி பிரேமா, அடிக்கடி அழைக்கும் தன் அண்ணன் வீடு செல்ல விழைந்து, கணவனையும் கூப்பிடுகிறாள். ஆனால் அவன் 'இந்த ஒரு வாரம் பஞ்சு வியாபாரத்தில் பத்து லக்ஷம் ரூபாய் சம்பாதிக்கலாம். நான் வரவில்லை. நீ போய் வா' என்கிறான். பணக்காரர்களின் பேராசையை சுட்டிக் காட்டும் இந்தக் காட்சி நம்மைக் கவரத் தவறவில்லை.

கே. எஸ். ரங்காச்சாரி,
பெங்களூர்

பெற்ற தாய்

அண்ணன் சரியாகப் பணம் அனுப்புவதில்லை என்பதற்காக வீட்டுக்கு வந்து 'பணம் கொடு; இல்லாவிடில் பாகம் கொடு' என்று சண்டை போட்டு அண்ணனை அடிக்கவும் கையை ஓங்குகிறான் சங்கர்.

டைரக்டர்: (வீட்டில்) நாளைக்கு நம்ம டிரைவர்கிட்டே, ஸ்டுடியோ செட்டிலிருந்து நல்ல சோபாவா தூக்கிட்டு வரச்சொல்லு.

மூக்குக் கண்ணாடிக்காரர்: எங்கே சார்! இப்பல்லாம் சினிமாப் படத்தைப் பார்க்கவே முடியலே!

தலைப்பாக்காரர்: ஐயோ, பாவம்! மூக்குக்கண்ணாடியை மாத்திக்கிட்டாவது பாக்கறது தானே?

அவன் கன்னத்திலே 'பளீர்' என்று அறை விழுகிறது. 'மடையா! இதற்காகவா படிக்கப் போனாய்? நிற்காதே, போய் விடு' என்கிறாள் தாய். மனதைக் கலக்கும் காட்சி.

ஜி. வி. பாண்டியன்,
கோயமுத்தூர்.

சாந்தா தன் கணவனுக்காகப் பரிந்து கொண்டு, சாமய்யாவிடம் தன் நகைகளைக் கழட்டிக் கொடுத்து விடுகிறாள். இதையறிந்த சலபதி கண்டபடி அவளைப்பேசி அடித்து விடுகிறான். அவளை அவன் அடிப்பதைக் கண்ட சீதம்மா, மனம் பொறுக்காது கீழே விழுந்து விடுகிறாள். அப்போதும் சந்தா கணவனைக் கோபிக்காது டாக்டரை அழைத்துவரச் சொல்லும்போது நம் ரத்தம் உறைகிறது.

கோமளம்,
சென்னை.

வீட்டுக்கு வந்த சங்கரை அடித்து விரட்டுகிறாள் தாயார். ஆனால் தன்னை அடிக்க தம்பி கை ஓங்கியதையும் மறந்து வீட்டை விட்டு வெளியேறிய அவனை வீட்டிற்குள் கூட்டிப் போகிறான் அண்ணன். இதைக் கண்ட தாய் ஆனந்தக் கண்ணீர் உகுக்கிறாள், கல் நெஞ்சையும் கரையச் செய்யும் காட்சி இது.

எஸ். ஜே. இக்னேஷியஸ்,
தூத்துக்குடி.

சங்கரை விரும்பும் கௌரிக்கு வேறு ஒருவருடன் மணமாகப் போவதறிந்து கிணற்றில் விழ ஓடுகிறாள். அவளைக் காணாத அவள் தாய், சாந்தாவிடம் ஓடிவந்து, சங்கரால்தான் கௌரி கெட்டுவிட்டாள் என்று கூவுகிறாள். சாந்தா ஓடிப் போய் கௌரியைத் தடுத்து, "என் மகன் சங்கர் கெட்டுவிட்டான், ஆகவே, நீ அவனை இனி விரும்புதல் கூடாது" என்கிறாள். சங்கரின் தாய், 'அத்தான் கெட்டுவிட்டார் எனச் சொல்கிறீர்களே தவிர அவரை நல்வழிப்படுத்த யாராவது முயற்சி செய்தீர்களா?' என்று கேட்கிறாள்.

தன் தவறை உணர்ந்த, பெற்ற தாய் உடனே சென்னைக்கு புறப்படுகிறாள். அவன் திருத்தப் படாமலா இருக்கமுடியும்? அவள் பட்டணம் கிளம்பும் காட்சி மனதை உருக்குவதாக இருக்கிறது.

எம். பி. மூர்த்தி,
பாளையங்கோட்டை.

பருவத்தின் பூரிப்பிலிருக்கும் ஒரு பெண் தன் காதல் அத்தானின் தயவை, காய்கறி கூடையைச் சுமக்க, நாடுகிறாள். அவன் சிறிது தூரம் தானே தூக்கிக்கொண்டு வந்துவிட்டு நடுவில் அவளிடமே கொடுத்து விடுகிறான். 'பார்த்தீங்களா! பாரத்தை நடுவழியில் என் தலையில் சுமத்தி விட்டுச் செல்கிறீர்களே!' என்று, வரப்போகும் சம்பவங்களை முன் கூட்டியறிவிப்பது போல சொல்கிறாள் சாந்தா. சிந்தனைக்குரிய சீரிய காட்சி.

வி. கல்யாண கிருஷ்ணன்,
திருவொற்றியூர்.

சிறையிலே நிற்கும் தாயிடம் சங்கர் கெஞ்சுகிறான். பெற்ற பாசத்தை விளக்க அவள் தானே சிறையிலிருப்பதாகவும் மகன் வாழ வேண்டும் என்றும் கூறுகிறாள். அத்துடன், 'உன்னைக் கௌரியிடம் சேர்ப்பதற்கே வந்தேன். அவளையே மணம் செய்து கொண்டு நீ நல் வாழ்வு வாழத்தான் வேண்டும்' என்று கூறும்போது நம் உள்ளம் வெடித்து விடும் போலிருக்கிறது.

''கலைஞானன்''

கடலூர்.

சங்கரின் மேல் படிப்புக்குக் கடன் வாங்கியாவது படிக்க வைக்கப் போவதாகக் கூறுகிறான் அவன் அண்ணன் ராமு. கடன் வாங்கினால் குடி முழுகிப்போய்விடும் என்கிறார் ராமுவின் மாமா. அதற்கு ராமு, 'கடன் கொடுத்தால் மாத்திரம் குடி முழுகிப்போய் விடாதா?' என்று கேட்கிறான். பண வசதியுள்ளோர் ஏழைகளிடத்தில் அதிக ரூபாய்கள் கொடுத்து அவர்கள் வாழ்வை சீர் கேடாக்குவதை இது எடுத்துக் காட்டுகிறது.

ப. ராமானுஜம்,

சிதம்பரம்.

சங்கரைப் பார்த்துவரச் சென்னைக்கு ஓடிவரும் ராமு, தம்பி சீட்டாடிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, 'சங்கர்' என்று கூவுகிறான். 'நீ ஏன் இங்கு வந்தாய்?' என்று கேட்கும் சங்கரிடம், 'உன்னுடைய செய்கைகளைப் பார்த்துப் போகத்தான் வந்தேன்' என்று கூறுகிறான் ராமு. உடனே கோபத்தோடு ராமுவைப் பளீரென்று அறைகிறான் சங்கர். ஆனால் தன் கோபத்தை அடக்கிக் கொண்டு பிரமை பிடித்த நிலையில் வீடு திரும்புகிறான் ராமு. மனமுருக்கும் காட்சி.

ஸி. கருப்பய்யா,

மதுரை.

மணமான சலபதியும் சாந்தாவும் படுக்கையறையிலிருக்கிறார்கள். அசம்பாவிதமான சம்பாஷணைகளில்லை. காதல் 'டூயட்' கீதமும் இல்லை. விரசமான காட்சிகளும் இல்லை. அடுத்த காட்சியில் சாந்தா முறத்திலிருந்து அரிசியை எடுத்து மெல்லும்போது அவள் மாமி ஒரு புளி உருண்டையையும் சாப்பிடச் சொல்லுகிறாள். சாந்தா கர்ப்பமுற்றதை உயர்தரமாக விளக்கும் இக்காட்சி சீரியது, பின்பற்றத்தக்கது.

ஆர். கோபால்,

சென்னை.

டாக்டர் காந்தத்தை நன்கு பரிசோதனை செய்த பின் வயிற்றில் கட்டி இருப்பதாகச் சொல்லுகிறார். அதற்கு அவள், 'இத்தனை பெரிய ரப்பரை வச்சிகிட்டு இப்படியும் அப்படியும் தொட்டுப் பார்த்து விட்டு, வயித்திலே கட்டியிருக்காமே' என்று சொல்வது நினைத்து நினைத்துச் சிரிக்கும்படி இருக்கிறது.

உமா-குருமூர்த்தி,

சோழவந்தான்.

கணவனைப் பிரிந்த சாந்தா தனிக்குடித்தனம் செய்கிறாள். ஒரு நாள் இரவு சங்கர் எழுந்து ராமுவிடம் பேசுகிறான் 'அண்ணா! எங்கே அம்மாவைக் காணோம்? அப்பா அம்



''அப்பா! 'அடல்ட்ஸ் ஒன்லி'ன்னு ஒரு படம் வந்திருக்காம். காசு குடுப்பா போய்ப் பார்த்துட்டு வரேன்!

மாவை விட்டுப் பிரிந்தமாதிரி, நம்மைவிட்டு அம்மா பிரிந்துவிடுவாளோ? என்று கேட்கும்போது, தாயுக்த இது தெரிந்தால் வருந்தப்படுவாள் என்பதற்காக, "சரி சரி அம்மாவருது. பேசாமெ தூங்கு" என்று அவன் கூறும்போது நமக்கு அவர்கள் மேல் இரக்க மேற்படுகிறது.

பி. பால்சாமி,
அய்யம்பாளையம்.

மனிதன்

நாடகத்திற்குக் கிளம்ப ஏற்பாடு செய்த பிரேமா கடைசியில் தலைவலி என்று சொல்லி கணவனிடம் பல காரணங்களைச் சொல்லி ஏமாற்றும்போது வேலைக்காரன் கஜேந்திரன் வேறொரு விஷயத்தைப்பற்றி, 'ஏதுக்காக இப்படிப் பொய்சொல்லி ஏமாத்தணும்?" என்று கூறும் போது தன்னைப்பற்றி குறிப்பிடுவதாக நினைத்து பிரேமா திகைப்பது வேடிக்கையாக இருக்கிறது. ரஸிக்கக்கூடிய ஹாஸ்ய கட்டம் அது.

ரா. கணேசன்,
கோவை.

சுரே சாவித்திரியைக்கொல்ல பிரேமாவிடம் விஷம் கொடுக்கிறான். அதைபாலில் கலந்து சாவித்திரிக்குக் கொடுக்கிறாள் பிரேமா. அந்தப் பாலை பிரண்ட் வேறு இடத்தில் கொண்டு வைத்து விடுகிறான். சுரே அங்கு வர்து இதைக் குடித்து விடுகிறான். முடிவு? சாவுதான். 'தன் வினை தன்னைச் சுடும்' என்பதை விளக்கும் அரிய காட்சி இது.

பி. என். தருமன்,
உலிக்கல்.

சாவித்திரி தற்கொலை முயற்சியிலீடுபடும்போது சரஸா தடுக்கிறாள். "தவறு செய்தாகிவிட்டது. கருவை அழிப்பது இரண்டாவது குற்றம். வாழ்விலே பரம்பரைக்கு என்றும் மாறுக் களங்கத்தை உண்டுபண்ணிவிட்டதுடன் தற்கொலை, சிசுஹத்தியின் மூலம் அது மறைந்து விடாது' என்பதைச் சரஸா வலியுறுத்தும்போது நமது மனம் நெகிழ்கிறது. நெஞ்சடைத்துக் கொள்ளுகிறது.

தி. ரா. கிருஷ்ணன்,
அரக்கோணம்.

சத்தியசோதனை

சாந்தியைக் காப்பாற்றத் துணிந்த ஒரு முனிவர், கரடி உடலில் புகுந்து அவளுக்குத் தேவையானவைகளைச் செய்து வருகிறார். 'சிவா' என்று பெயரிட்டு அழைக்கிறாள் சாந்தி. அவள் ஊருக்குத் திரும்பும்போது முனிவர் கரடியிலிருந்து வெளிவந்து விடுகிறார். ஆனால் அதை அறியாத சாந்தி கரடி இறந்ததாக நினைத்து வருந்துகிறாள். இதெல்லாம் மாயை என்று அவளுக்கு அவர் ஆறுதல் கூறினாலும் சாந்தியின் மனம் சாந்தியடையவில்லை! 'சிவா சிவா' என்று கண்களில் நீர் தளும்ப முணுமுணுக்கிறாள். நம் கண்களிலும் நீர்த் திரையிடுகிறது.

சேகரன்,
தஞ்சாவூர்.

குமாஸ்தா

மனமுடைந்த நிலையில் சிறையிலிருந்து வெளிவருகிறார் குமாஸ்தா. அப்போது காவற்காரன் அவர் விடுதலையைப் பற்றிச் சந்தோஷித்துக் கூறும்போது, மனம் புண்பட்ட அவர் பித்தனைப் போல் நின்றுவிட்டு, சின்ன ஜெயிலிலிருந்து பெரிய ஜெயிலுக்குப் போவதாகக் குறிப்பிடுகிறார். நம்மை உள்ளங்குமுறச் செய்கிறது இக்காட்சி.

பி. பி. சேதுராமன்.

வாழப்பிறந்தவள்

கீதாவைத் தொடரும் தன் கணவனைத் தொடருகிறாள் சுமதி. அங்கே கீதா நேர்மையானவள் என்பதையும் தன் கணவன்தான் அவளை வலிய காதலிக்கிறான் என்பதையும் அறிந்து துடித்தபடி திரும்பி விடுகிறாள். நமக்கு அவளிடம் ஆழ்ந்த அனுதாபம் ஏற்படுகிறது.

ஞானசேகர்,
ரங்கூன்.

தபால் பெட்டி

பாவம், தாய்!

சென்ற இரண்டொரு வருஷங்களில் வெளியான படங்களின் தாய்மையின் சிறப்பு பல வகையிலும் வெளியிடப்பட்டிருக்கிறது. இவைகளில் அனேகமாக எல்லாக் கோணங்களிலும் படமாக்கப் பட்டவை சிலதான். வெறும் தாய்க்கு மட்டும் பிரதானம் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காக அந்தத் தாயின் கணவனைப் பல கதாசிரியர்கள் ஆரம்பத்திலேயோ, இடையிலோ கொன்று விடுகிறார்கள். பாவம், அவனை வாழவிடும்படிக் கதாசிரியர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். கணவன் உயிருடனிருந்தால் மக்களிடம் தாய்மை உணர்ச்சியைக் காட்ட தாயாரால் முடியாதா?

ஆ. மங்களராஜன்,
கொழும்பு.

பாடல் விஷயம்

தமிழ்ப் படங்களின் முன்னேற்றம் குறைந்ததற்கான பல காரணங்களில் பாடல்களும் ஒன்று. கண்டபடி எழுதுவதும் அதை ஹிந்தி மெட்டுகளில் அமைப்பதும் நமக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கின்றன. பல வருஷங்களுக்கு செவிகளில் தேங்கி நிற்கக் கூடிய கர்நாடக சங்கீதத்திற்கு ஒப்பாகுமா இந்த ஹிந்தி மெட்டு? ஏன் படமுதலாளிகள் வட இந்திய மோகம் பிடித்து அலைகிறார்கள்?

ஏ. எல். எம். முஹ்ஸீன்,
அளுத்தகம சிலோன்.

கற்பு படும் பாடு!

நமது சமீபத்திய வெளியீடுகளில் பெண்களின அணிகலனான கற்பு பறிக்கப்பட்டு விடுகிறது. ஒருவன் ஒருத்தியின் வீட்டுக்கு வருகிறான். கண்டதும் காதல் கொள்ளுகிறான். அவள் கருத்தழிகிறாள். பலன், கருத்தரிக்கிறாள். உடனே அதை மறைக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன! முடிவு சாவு அல்லது அவர்களுக்குத் திருமணம், பெற்ற குழந்தை சாட்சியாக!

இந்தக் காட்சிகளால் நாட்டுக்கோ சமூகத்துக்கோ ஏதேனும் நன்மை உண்டா? இந்தக் காலத்தில் பெண்கள் பலவீனப் பிறவிகளாக இருப்பது மறுக்க முடியாத உண்மை. பட உலகம் அவர்களை நல்வழிப் படுத்துவதற்குப் பதிலாக இப்படிப் பட்ட சோரக் காட்சிகளைத் தயாரித்து வருவதின் நோக்கமும் விளைவுகளும் பயங்கரமான முடிவுகளைத் தரக் கூடியவை. சென்ஸாருக்கு இதெல்லாம் ரஸிக்கத் தகுந்த காட்சிகளாகப் படுகிறதா? ஒருத்தி கற்பிழந்த பின் அதற்குக் காரணமானவனையே மணப்பது இயற்கைக்குப் பொருந்துமா? அது நடக்குமா? பினபும் ஒருவர் மேல் ஒருவர் சந்தேகம் கொள்ளாமல் அவர்கள் நல்வாழ்வு வாழ முடியுமா? சிந்தித்துப் பாருங்கள், படமுதலாளிகளே சிந்தித்துப் பாருங்கள்.

ஸ்ரீதர்,
கோயமுத்தூர்.

தவறல்ல

எங்கு திரும்பினாலும், "திரைப் படங்களில் கட்சிப் பிரசாரம், தெய்வ நிந்தனை, அரசியல் எதிர்ப்புப் பிரசங்கங்கள் பெருகி வருகின்றன" என்ற கூச்சல் கேட்கிறது சமீப காலமாக. திரைப்படக் கலை பொழுது போக்குக்காக என்ற நிலைமை தற்போது முற்றிலும் மாறிவிட்டது. திரைப் படங்களில் பயனுள்ள விஷயங்களை,

வாழ்க்கைக்கு உதவும் தத்துவங்களை மக்கள் எதிர் பார்க்கிருர்கள். எனவேதான் அரசியல், சமுதாயம், மதம் ஆகிய துறைகளில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டி மக்களின் சிந்தனையைத் தூண்டும் படங்கள் வெற்றி யடைகின்றன. கலை யுலகில் பொருமை, போட்டி மனப்பான்மை போன்ற குறுகிய உணர்ச்சிகளுக்கு இடமளிக்கக் கூடாது. திரைப்படக் கலை ஒரு பொதுச்சொத்து—சாதனம். இதனைப்பயன்படுத்துபவர்கள் பணந் திரட்டுவதை மட்டும் குறிக்கோளாக கொள்ளாமல் ஓரளவு நாட்டுக்கு நன்மை பயக்கும் கருத்துச் சித்திரங் களை தயாரிகக வேண்டும். எண்ண, எழுத, எடுத்துக்கூற இந்திய அரசியல் சட்டம் இடங் கொடுக்கிறது. சரியென்று தனக்குப் படும் கருத்துக் களை தாராளமாக திரைப் படங்கள் மூலம் சொல்லலாம்.

கருத்துச் சுதந்திரம் அனைவருக்கும் அளிகசப் பட்டிருக்கிறது. கஞ்சி, கஞ்சி என்று கதறி கவனிப்பாரற்று விதிகளிலே பிணங்கள் பெருகுகின்ற வேளையில், அவர்களுக்கு ஒருவேளை உணவளித்து உதவி செய்ய மறுப்ப வன் கோவிலில கும்பாபிஷேகம்' நடத்துவதன் மூலம் 'மோட்சம்' தனக்கு நிச்சயம் என்று நினைக் கிருன. அதேபோல் அரசியல் செப் பிடு வித்தைகள் மூலம் 'குபேரர் களாகும்' பெரிய மனிதர்களை - அவர் கள் மக்களுக்கு செய்யும் துரோ கத்தை—திரைப் படங்களில் எடுத்துக் காட்டி மக்களிடையே 'அரசியல் விழிப்புணர்ச்சியை' ஏற்படுத்துவது தவறல்ல. ஆகவே திரைமூலம், மக்க ளுக்கு பயன்படுபவை எனறு தான் நினைப்பதை ஒருவன் கூறுகிருன். அது சரியா தவரு என்ற தீர்ப்பு வழங்க வேண்டியவர்கள் மக்கள், இடையே உள்ள சிலர் அதைத் திரித் துக் கூறும் 'திருப்பணியை' மேற் கொள்வது விரும்பத்தக்கதல்ல

கே. முத்தையா,
மதுரை.

வாபஸ் பெறுங்கள்

பஞ்சைகளல்ல; பராரிகளுமல்ல; பிச்சைக்காரர்களு மலல; பிழைப்பற் ேறார்களுமல்ல. பெரும் பொரு ளீட்டிப் பதுக்காமல் (அந்த மட்டில் சந்தோஷம்) பணத்தை பணமாகக் கருதாது துச்சமாக நினைத்து கண்ட படி செலவிட்டு வருபவர்கள் தான் நாடக, நடனக் கலைஞர்களில்பலரும். இவர்களுக்கு ரயிலில் அரைக கட் டண சலுகை அளிப்பது அக்ரமம். இது அரசாங்கத்துக்கும் வருமானக் குறைவு. மற்றவர்களுக்கு ஆத்திரப் பெருக்கு! ஏன் இந்தச் சலுகை? இதை வாபஸ் வாங்கிக் கொள்ளுங் கள் என்று சர்க்காரை கேட்டுக் கொள்ளுகிறேன்.

வி. தே. சந்திரசேகரன்.
சென்னை.

[நீர் எண்ணுவது போல அல்ல இச்சலுகை யளித்ததன் நோக்கம். பேலும் கலைகளிடமும் கலைஞர்க ளிடமும் இந்திய அரசாங்கம் கொண் டுள்ள மதிப்பைத் தான் இது விளக்குகிறது. தேசிய அசடமி அமைப்பது; இந்திய கலைஞர்களைக் கௌரவிப்பது ஆகியவைகளைப் போல நாடக,நடனக் கலைஞர்களுக்கு அளிக்கப்பட்ட ரயில்வே அரைக் கட்டணச் சலுகை, கலைகளிடம் அர சாங்கம் வைத்திருக்கும் நல்லெண்ண சமிக்ஞையைத்தான் குறிக்கும்.

—ஆசிரியர்.]

நல்ல கதை தேவை

பிரபல நடிகர்களையும் புகழ் பெற்ற டைரக்டர்களையும் கொண்டு தயாரிக் கப்படும் படங்கள் மகத்தான வெற்றி யடைந்து விடும் என்று பலரும் நினைத் துப் பணத்தைப் பெரும் அளவிலே செலவழித்து விட்டுத் திரும்பப் பெற முடியாமல் தவிக்கின்றனர். கதை யைத் தேர்ந்தெடுக்கும் விஷயமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். நல்ல கதைகளில்லாமல் வேறு என்ன செய்தாலும் பிரயோஜனமில்லை. கருத்துமிக்க கதைகள் பலவற்றைத் தேடிப்பிடித்துப் படங்கள் தயாரித் தால் நல்லது.

எஸ். வி. ராமசாமி
பம்பாய்.

கிருஷ்ணா......

(27-ம் பக்கத் தொடர்ச்சி)

அகலிகை ரிஷிபத்னி. கற்பின் உறைவிடம். புகலிடம். உவமைப் பெண். அவளிடம் வந்தான் இந்திரன். அவள் கணவன் வடிவிலே. இணங்கினுள். உடன் உணர்ந்தாள் உண்மையை. வருந்தினுள்; மணந்தவனிடம் மன்னித்து தன்னை ஏற்கும்படி மன்றாடினுள். மறுத்ததோடு, கல்லாகவும் சபித்தான் மகரிஷி கௌதமன். ஸ்ரீராம பாத ஸ்பர்சத்

பெற்றோருடன்

தாலே பாபம் தீர்ந்து, பதியுடன் சேர்ந்தாள் அகலிகை,

கறைபட்ட காயத்தைச் சுமந்து கொண்டே கணவனோடு வாழ விரும்பினுள் அகலிகை!

கற்பை இழந்து கணவனைக் காணவும் விரும்பவில்லை சாவித்ரி!

இந்த விசித்ரமான குணசித்திர பாத்திரத்திலே தோனறி, அனைவரும் பாராட்டும்படி நடிக்க வேண்டுமானல் கிருஷ்ணாவுக்கு எத்தனை துணிவும் திறமையும் தன்னம்பிக்கையும் இருந்திருக்க வேண்டும்! கே. ராம்நாத் இப்பாத்திரத்துக்கு கிருஷ்ண குமாரியைத் தேர்ந்தெடுத்ததினல், கிருஷ்ணா ராம்நாத்திடம் ஒரு நற்சாட்சி பெற்றவராகிருர்.

மனிதன் படத்திலே மணக்கோலத்தோடு சாவித்ரியை சந்திக்கிரும். பிறகு சயன அறையிலே கணவனுடன் காண்கிரும். அதுவரை சாவித்ரி சந்தோஷமாகத்தான் இருந்தாள். கணவன தான் ஊருக்குப் போவதாக சொன்னதும் வாடிய அவள் வதனத்தில், அவள் மடியுமட்டும் புன்னகை பூக்கவில்லை.

ஆனல் தன்னைத் தனியே கிணற்றடியில் ராஜன் சந்தித்தபோது அவள் அவனது ஹாஸ்ய மொழிகளைக் கேட்டுச் சிரிக்கிருள். எத்தகைய சிரிப்பு? உணர்ச்சியற்ற, உள்ளம் வரண்ட உதட்டுச் சிரிப்பு! செயற்கை சிரிப்பு! அதிலே உயிரில்லை; உண்மையில்லை!

விஸ்ராந்தி

'பிரியுராலு'வில்

ஜெமினியில் தயாரிக்கும் தமிழ், தெலுங்குப் படங்களிலும், ஜூபிடரின் அழகியிலும் அவர் நடிக்கிறார். சாயி கானாமிர்தாவின் புது யுகம், யுனைடெட் டெக்னீஷியன்ஸ் தயாரிக்கும் பள்ளி படுசு, சௌந்தர்யாவின் பாசவலை, கெம்பராஜின் கற்கோட்டை ஆகிய படங்கள் தவிர, ஒரு மலையாளப் படத்திலும், வட இந்தியாவில் ஒரு ஹிந்திப் படத்திலும், நடித்து வருகிறார் கிருஷ்ணகுமாரி.

ராஜமஹேந்திரபுரத்து வெங்காஜிக்கும் குண்டூரைச் சேர்ந்த சசிதேவிக்கும் கிருஷ்ணகுமாரி மூன்றாவது குழந்தையாகப் பிறந்தார் என்று

தற்கொலை செய்து கொள்ள முயற்சிக்கும் கட்டத்திலும், சிற்றன்னையை எதிர்த்துப் பேசும் கட்டத்திலும், கணவன் வந்து விட்டான் என அறிந்து துடிக்கும் கட்டத்திலும் நம் எதிரில், திரையில், சாவித்ரிதான் நிற்கிறாள். கிருஷ்ணகுமாரி என்ற ஒரு நடிகை அந்தப் பாத்திரத்திலே நடிக்கிறார் என்பதை மறந்து விடுகிறோம்.

இத்தகைய அபூர்வத் திறமை வாய்ந்த கிருஷ்ணா சுமார் ஒரு டஜன் படங்களில் நடித்து விட்டு இப்போது அரை டஜன் படங்களில் நடித்து வருகிறார் எனபது ஆச்சர்யம் தரும் செய்தி யல்லவே!

இம்மாதம் வெளிவரவிருக்கும் மாடர்ன் தியேட்டர்ஸ் "திரும்பிப் பார்" என்ற படத்தில் கிருஷ்ணா நடித்திருக்கிறார்.

டி. பிரகாசராவ் டைரக்ட் செய்யும் நேஷனல் ஆர்ட்ஸாரின் 'பிச்சி புல்லையா' என்ற தெலுங்குப் படத்தில் என். டி. ராமராவுடன் நடித்து வருகிறார் கிருஷ்ணகுமாரி. ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பில்ம் கம்பெனியார்

பிரதர் ராமு

குறிப்பிட்டிருந்தேனல்லவா? இந்தத் தம்பதிகளின் ஜேஷ்ட புத்திரன் ராமு என்பவர். இரண்டாவதுதான் ஜானகி விஜயா புரொடக்ஷன்ஸ் தயாரித்த தெலுங்குப்படமான சௌகாரில் நடிதது அமோகப் புகழ் பெற்ருர் இந்த ஜானகி. தென்னிந்திய சினிமா உலகத்திலே ஒன்றுக்கு மேற்பட்ட ஜானகிகள் இருப்பதால் இவரைக் குறிப்பிட சௌகார் ஜானகி என்ற காரணப்பெயர் ஏற்பட்டது. இவர் மாடர்ன் தியேட்டர்ஸ் வளையாபதியில் கதாநாயகியாக நடித்துச் சக்கைப்போடு போட்டிருக்கிருர். ஜெமினியின் மூன்று பிள்ளைகள் தெலுங்குப் படத்திலேயும் நடித்திருக்கிருர். இப்போதும் சௌகார் ஜானகி ரோகிணியின் புதிய ஹாஸ்யப் படமொன்றில் நடித்து வருகிருர்.

கிருஷ்ண குமாரிக்குப் பின் பிறந்தவர்கள் மூன்றுபேர். தேவகி என்ற தங்கை இப்போது நடனம் கற்று வருகிருள். ரகு, பாஸ்கர் என்ற தம்பிகள் பாடசாலைகளிலே படித்துக் கொண்டிருக்கிருர்கள். கிருஷ்ணு தன் தாயாருடனும் தமையனுருடனும் சென்னையிலேயே வசித்து வருகிருர். அவர் தமையன் ராமு தங்கையின் முன்னேற்றத்தையே குறிக்கோளாக கொண்டு, டாக்ஸி டிரைவர் மீடரைக் காப்பதுபோல அவரைக் கண் காணித்து வருகிருர்.

ராமு தன் தங்கையை 'கிருஷ்ணு' என்றுதான் குறிப்பிடுவார். அவரோடு பழகின புதிதில் இது எனக்குப் புதிராக இருந்தது. யாராவது தம்பியைத்தான் அவர் அழைக்கிருர் என்றிருந்தேன். ஆனல் அவர் தங்கை கிருஷ்ண குமாரியைத்தான் அன்பாக அப்படிக் கூப்பிடுகிருர்.



'தமிழ்' படிக்கிருர்

ஏற்கனவே பல ஊர்களிலும் இருந்ததால் கிருஷ்ணகுமாரிக்குப் பல பாஷைகளிலும் பரிச்சயம் ஏற்பட்டிருக்கிறது. தாய் மொழியான தெலுங்கு, தொழில் மொழியாகத் தமிழ், ஹிந்தி, கன்னடம், ஆங்கிலம் ஆகியவற்றுடன் இப்போது மலையாளப் படத்தில் நடிக்க மலையாளத்தையும் அவர் தெரிந்து கொள்ளப் போகிருர்.

கார் ஓட்டத் தெரியும் கிருஷ்ணுவுக்கு என்று நினைக்கிறேன். கார் ஸ்டியரிங்கில் அமர்ந்தபடி போட்டோ பிடித்துக் கொண்டிருக்கிருரே! இல்லாவிட்டாலும் பாதகமில்லை. கிருஷ்ணு தன்னைப் பற்றியிருக்கிருர் என்பதற்காக அந்தக் கார் தானகவே கூட ஓடும்!

பொதுக் காரியங்களில் பங்கு

சந்திரா பிக்சர்ஸ்

ஜெனோவா

திரைக் கதை

காட்சி 1

ஆர்தீன தேசத்து அரசன் சிப்ரஸோவும் அவன் அமைச்சர் கோலோவும் பரிவாரங்களுடன் பிரபந்த தேசத்துக்குக் கிளம்புகிறார்கள். பிரபந்த தேசத்து ராஜகுமாரி ஜெனோவாவை மணக்க சிப்ரஸோ அங்கே செல்லும் வழியில் பரிவாரங்களைப் பிரிந்து குதிரையில் முன்னால் சென்றுவிடுகிறார். மந்திரி கோலோ அதை அரசனுக்கு ஞாபகமூட்டுகிறான்.

கோலோ: அரசே! பரிவாரத்தை விட்டு நாம் வேகமாக வந்து விட்டோம். அவர்களும் வந்து சேரட்டும். இன்னும் ஐந்து நாழிகைக்குள் அரசர் பிரபானந்தரின் அரண்மனைக்குப் போய்ச் சேர்ந்து விடலாம்.

சிப்ரஸோ: அமைச்சரே! நான் பிரபானந்த மகாராஜாவைப் பார்த்ததில்லை. அவர் கீர்த்தியைக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவருடைய குமாரி ஜெனோவா இளவரசி மிகுந்த அழகியாமே?

கோலோ: அழகில் மட்டுமல்ல. குணத்திலும் அப்படித்தான். அரசே! நம் எண்ணப்படி இந்தத் திருமணம் நடந்து விட்டால் நம் ஆர்தீன தேசமும் இளவரசியாரின் பிரபந்த தேசமும் ஒன்றாகி எதிர்காலத்தில் மகோன்னதமாக விளங்கும்.

பாத்திரங்கள் :

எம்.ஜி. ராமச்சந்திரன்	சிப்ரஸோ
பி எஸ் வீரப்பா	கோலோ
எம். ஜி. சக்ரபாணி	அன்னாஸ்
பி. எஸ். சரோஜா	ஜெனோவா

வசனம் :

சுரதா
இளங்கோவன்
நெடுமாறன்

டைரக்ஷன் :

எப். நாகூர்

அப்போது பிரபந்த தேச ராஜகுமாரி ஜெனோவா தன் தோழிகளுடன் ரதத்தில் சென்று கொண்டிருக்கிறாள். அதைக் கோலோ மூலம் அறிந்த சிப்ரஸோ அவர்களது ரதத்தைத் தொடருகிறான். யாரோ எவரோ என்று பயந்து விட்ட அவர்கள் தேரை வேகமாகச் செலுத்தவே அது குடை சாய்ந்து விடும் நிலையிலிருக்கிறது. அப்போது சிப்ரஸோ வந்து அவர்களை காப்பாற்றுகிறான். இதை தோழி ஜெனோவாவிடம் கூறுகிறாள்.

தோழி: அம்மா! இவர்தான் நம்மை ஆபத்திலிருந்து காப்பாற்றியவர். இவர் எங்கள் இளவரசி ஜெனோவா.

சிப்: வணக்கம்! என்ன இது வண்டியின் சக்கரமே கழன்று விட்டதே?

ஜெ: ஆ! ஐயா, உங்களுக்கு என் நன்றி. சமயத்தில் செய்த உதவியை என்றும் மறக்க மாட்டோம்.

சிப்: அப்படி நான் ஒன்றும் விசேஷமாகச் செய்து விடவில்லையே! மனிதன் செய்ய வேண்டிய கடமையைத்தான் செய்தேன்.

ஜெ: ஆனால் அதைச் சரியான சந்தர்ப்பத்தில் செய்ததால் நாங்கள்

மிக உயர்வாக நினைக்கிறோம். எங்கள் ஞாபகமாக இதை வைத்துக் கொள்ளுங்கள்.

முத்துமாலையைக் கொடுக்கிறாள்.

சிப்: உங்கள் அன்புக்கு நன்றி. எங்கள அரசர் சிப்ரஸோ அவர்களின் அனுமதியில்லாமல் நான் எந்தப் பரிசையும் வாங்க மாட்டேன்.

ஜெனோ: என்ன, நீங்கள் அரசர் சிப்ரஸோவின் தூதரா?

சிப்: ஆமாம்!

தோழி: உங்கள் அரசர் நாளைக்கு இங்கே வரப் போகிறாராமே. உங்களுக்குத் தெரியுமா?

சிப்: தெரியும். அவர் எதற்காக இங்கே வரப் போகிறார் என்பதும் எனக்குத் தெரியும். நேரமாகிறது. நான் வருகிறேன்.

முத்து மாலையுடன் போய் விடுகிறான். மந்திரி கோலோவிடம் இதைப் பற்றிச் சொல்லி விட்டு மறுமுறை ஜெனோவாவைச் சந்திக்க அவளுடைய அந்தப்புரம் செல்வதாகவும் அதற்கிடையே கோலோ அங்கு செல்லும்படியும் கூறுகிறான். கோலோ அங்கு சென்று பிரபந்த அரசரின் விருந்தினராகத் தங்குகிறார். அந்நாட்டு அமைச்சருடன் அவர் தோட்டத்தில் பேசிக்கொண்ருக்கிறார்.

பி. நா. அ: இதுதான் அரண்மனைத் தோட்டம். அதோ, இளவரசியார்கூடத் தோழிகளோடு பேசிக் கொண்டிருக்கிறார்கள். தங்களைக் காண்பது அத்தி பூத்தாற்போல் ஆகி விட்டது. வந்தாலும் இரண்டு நாள் கூடச் சரியாகத் தங்குவதில்லையே!



சுரதா

கோலோ: விருந்தாளி வானவில்லைப் போன்றவன்தானே! வானவில் அதிக நேரமா நிலைத்திருக்கிறது?

அமை: இந்தச் சமாதானமெல்லாம் இந்தத் தடவை சொல்லக் கூடாது.

அவர் கோலோவை ஜெனோவாவுக்கு அறிமுகம் செய்து வைக்கிறார்.

அமை: இளவரசி! இவர்தான் கோலோ. சிப்ரஸோவின் பிரதம மந்திரி. அரசரும் இவரும் ஒரே முகத்தின் இரண்டு கண்கள். அரசர் நாளைக்கு வரப்போகிறார். அதைத் தெரியப் படுத்தவே இவர் இங்கு வந்திருக்கிறார்.

ஜெனோ: வணக்கம்! தங்கள் வருகை எனக்குச்சந்தோஷத்தை அளிக்கிறது.

அப்போது அமைச்சரை அரசர் அழைப்பதாக ஆள் வருகிறது.

அமை: மந்திரியவர்களே! இளவரசியவர்களுடன் பேசிக் கொண்டிருங்கள். இதோ வருகிறேன்.

போய் விடுகிறார். ஜெனோவா பேச ஆரம்பிக்கிறாள்.

ஜெனோ: தாங்கள் இன்றுதான் வந்தீர்களா?

கோ: ஆம்...

ஜெனோ: உங்கள் மனைவி மக்களெல்லாம் க்ஷேமந்தானே?

கோலோ: எனக்கு இன்னும் கல்யாணமாகவில்லை. எங்கள் அரசரின் திருமணத்திற்குப் பிறகுதான்

அதைப்பற்றி யோசிக்கத் தீர்மானித்தி ருக்கிறேன்.

ஜெனோ: உங்கள் அரசரே எங்கள் நாட்டை விரும்பும்போது நீங்களும் ஏன் எங்கள் நாட்டிலேயே ஒரு பெண்ணை ஏற்றுக்கொள்ளக் கூடாது?

கோ: தங்களுக்கு அது இஷ்டமானல் எனக்கு அதில் ஒரு ஆக்ஷேபணையுமில்லை.

ஜெ: அதிருக்கட்டும். எங்கள் நாடு உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?

கோ: ஏன், உங்கள்நாடு என்று சொல்லுகிறீர்கள்? இனிமேல் இது எங்களுக்கும் சொந்தந்தான். உங்கள் மீது அரசருக்கு எவ்வளவு பிரியம் தெரியுமா? உங்களை மாலையிடப் போகும் அவர் மகாவீரர்!

ஜெ: ஆம், அறிவேன், நீங்களும் அரசியல் ஞானி, சகல கலாவல்லபர் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

கோ: என்னை அளவுக்கு மீறி வர்ணிக்கிறீர்கள். இவ்வளவு புகழ்ச்சிக்கு நான் பொருத்தமானவனல்ல.

ஜெ: அப்படிச் சொல்லாதிர்கள். எல்லா மழைத்துளிகளும் முத்துக்களாவதில்லை. எல்லோருமே இந்த வயதில் உங்களைப்போல் அறிஞனுக முடியாது.

கோ: இளவரசி யவர்களின் அபிப்பிராயம் இப்படி இருப்பது என் பாக்கியம். மெச்சத்தகுந்த குணமும் கண்களைக் கவரும் அழகும் நிறைந்த உங்களை இளவரசியாக அடையப் போவதை எண்ணிப் பெருமைப் படுகிறேன்.

ஜெ: உங்களைச் சந்திக்கும் பாக்கியம் கிடைத்ததை நான் கௌரவமாகக் கருதுகிறேன். நம் உறவு எப்போதும் நீடித்திருக்க ஆண்டவனை வேண்டுகிறேன்.

ஆனல் அமைச்சர் அழைப்பதாகச் செய்தி வரவே கிளம்புகிருன் கோலோ. இப்போது அவன் மனதிலே ஒரு தடுமாற்றம். ஜெனோவாவின் கபடமற்ற பேச்சு அவனைப் பித்தனுக்கி விடுகிறது.

கோ: இளவரசி சொன்னது சரிதான். இன்னும் என் வாலிபத்தை ஏன் வீணுக்கிக் கொண்டிருக்க வேண்டும்? இளவரசியின் பேச்சும் நடையும் என்னைத் தடுமாற வைக்கினறன. எவ்வளவு நல்ல அழகு? எனக்கு மனைவியாக வரப்போகிறவளும் இவளைப்போன்ற ஒரு ரூபவதியாகத்தான் இருக்கவேண்டும். ஹூம்...

அவளையே அடையத் தீர்மானித்து விடுகிருன் அந்தச் சண்டாளன்.

காட்சி2

ஜெனோவா படுக்கையில் படுத்திருக்கும்போது சுவரேறிக் குதிக்கும் சிப்ரசோவைக்கண்டு யாரோ ஏதோ வென்று திடுக்கிருள்.

ஜெ: யாரது?

சிப்: நான்தான்!

ஜெ: நான்தானு?

சிப்: ஓஹோ! உயர்ந்த அந்தஸ்திலிருப்பவர்களெல்லாம் உதவி செய்பவர்களை உடனே மறந்து விடுவார்கள் போலிருக்கிறதே!

ஜெ: அது அற்பர்களுக்கு வாடிக்கையாகயிருக்கலாம். அதிருக்கட்டும். இந்நேரத்தில் இங்கு கள்வனைப் போல் வரக் காரணம்?

சிப்: இப்படி வராவிட்டால் உங்களை நான் தனியாக சந்தித்திருக்க முடியுமா?

ஜெ: சரி சரி! வந்ததைச் சொல்லும்.

சிப்: ஹூ...ம். உங்களுக்கு நான் உதவி செய்திருக்கிறேனே, அதற்கு...

ஜெ: இன்னும் விலையுயர்ந்த பொருளை ஏதாவது வாங்கிக்கொண்டு போகலாமென்று வந்திரா? அதற்கு இந்த அர்த்த ராத்திரி வேளையில் ஏன் வரவேண்டும்? ஹூம்! காலையில் அரண்மனைக்கு வந்தால் அரசரிடம் சொல்லி உங்களுக்கு வேண்டியதை கொடுக்கச் சொல்கிறேன்.

சிப்: எந்த வாலிபனும் ஒரு பெண்ணிடம் எதிர்பார்ப்பது பணத்தையல்ல!

ஜெ: பிறகு..?

சிப்: காதல்தான்!

ஜெ: என்ன? யாரிடம் இப்படிப் பேசுகிறீர்? ஆபத்தில் உதவி செய்தீர் என்பதற்காக உம்மை நான் மன்னித்து விடுகிறேன். ஹூம்...போய் விடும்!...ஏன் பேசாமலிருக்கிறீர்? மௌனம் சாதிப்பவன், பரிந்து பேசுகிறவன், அதிகம் செல்வாக்கடைந்தவன் இவர்கள் யாரையும் நம்ப முடியாது. உண்மையில் உம்மை நம்புவதற்கில்லை...உம் போய்விடு!

சப்தம் கேட்டுத் தோழி வந்து அழைக்கிறாள்.

தோழி: அம்மா! அம்மா!! என்னமோ சப்தம் கேட்டதே. என்னம்மா?

ஜெ: ஒன்றுமில்லை. கனவு கண்டு பயந்து விட்டேன்.

தோ: அப்படியா! அப்போது துணைக்கு நானு மிருக்கிறேன்.

ஜெ: கனவில் அழுதால் அதற்காக விழித்ததும் கண்ணில் தண்ணீர் இருக்குமென்று துடைக்க வருகிறாயே! பைத்தியக்காரி! நீ போய்த் தூங்கு!

தோழியை அனுப்பிவிட்டு வருகிறாள் ஜெனேவா. சிப்ரஸோ அங்கேயே நிற்கிறான்.

சிப்: பேஷ்! உயர் வகுப்புப் பெண்கள் பிறரை எவ்வளவு தந்திரமாக ஏமாற்றி விடுகிறார்கள்!

ஜெ: நீ இன்னுமா போகவில்லை?

சிப்: போவதா..?

அவளை நெருங்குகிறான்.

ஜெ: ஆ! நெருங்காதே. நான் நெருப்பு.

சிப்: மலருக்கு நெருப்பு என்று கூடப் பெயரிருக்கிறதா?

ஜெ: உன்னிடம் பேசிப் பிரயோஜனமில்லை இதோபார். சேவகனைக் கூப்பிடுகிறேன்.

சிப்: வேண்டாம். உங்களுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுத்து விட்டேன்.

வெளியே போய் விடுகிறான் சிப்ரஸோ.

காட்சி 3

சிப்ரஸோவுக்கும் ஜெனேவாவுக்கும் திருமணம் நடந்தேறியதும் ஜெனேவா கணவனிடம் பொய்க் கோபம் கொள்ளவே. அவன் தாஜா செய்கிறான். ஜெனேவா பிரபானந்தரிடம் விடைபெற்றுக் கொள்கிறாள்,

ஜெ: அப்பா! உங்களைவிட்டுப் பிரிய எனக்கு மனமே வரவில்லை.

பிர: அம்மா! வருந்தாதே. முத்துக்களும் பெண்களும் தாம் பிறந்த இனத்தில் எப்போதும் இருக்க முடியுமா? என்றைக்கோ ஒரு நாள் வேறு இடத்திற்குப் போய்த்தானே ஆகவேண்டும்?

ஜெ: எங்களைப் பார்க்க இனி மேல் எப்போது வருவீர்களப்பா?

பிர: அம்மா! என் ஞாபகமெல்லாம் உன்னிடந்தானே! நான் அடிக்கடி வந்து பார்க்க மாட்டேனா? இனிமேல் உன் எதிர்காலம் மிகவும் பொறுப்பு நிறைந்தது. ஒரு பெண்ணுக்கு அவள் புருஷன்தான் முதல் தெய்வம். உலகத்தில் அவளுக்குச் சகலமும் அவன்தான். அவன் மனது கோணாதபடி மனைவி நடந்து கொள்ள வேண்டும் (கோலோ சிப்ரஸோ வருவதைப் பார்த்து) வாருங்கள், வாருங்கள்! குழந்தை என்னை விட்டுப்பிரிய மிகவும் வருந்துகிறாள்.

கோ: தாய்வீட்டைவிட்டுப் பிரியும்போது எந்தப் பெண்ணுக்கும் கஷ்டமாகத்தானிருக்கும்.

பிர: ஜெனேவா தாயில்லாத பெண். அதிலும் சுயேச்சையாக வளர்ந்த குழந்தை. உலக நியாயம் தெரியாதவள். சந்தர்ப்ப வசத்தால் ஏதேனும் குற்றங்குறைகள் நேர்ந்தால் அதைப் பெரியதாகக் கருதாதீர்கள். என் செல்வத்தை உங்கள் கையில் ஒப்படைக்கிறேன். கண்ணின் மணியைப்போல் பார்த்துக் கொள்ளுங்கள்.

சிப்: நீங்கள் எதற்கும் கவலைப் பட வேண்டாம். நாங்கள் வரு கிறோம்.

ஜெ: அப்பா...!

பிர: அம்மா! கணவன் வீட்டிற் குப் போகும்போது கண்ணீர் விடக் கூடாது...வாம்மா...

காட்சி 4

ஊர் திரும்பிய காதகன் கோலோ வின் மனம் ஒரு நிலையிலில்லை. அவன் நிலையைக்கண்டு தளபதி அன்னுஸ் அதற்குக் காரணம் கேட் கிருன்.

அன்: ஆமாம். கொஞ்சநாட்களாக கவே முகவாட்டத்துடன் காணப் படுகிறீர்களே, ஏன்? என்னிடம் சொல்லக் கூடாதா?

கோ: சொல்லலாம். ஆனல் ரகசி யம் ஆயிற்று என்றுதான்...

அன்: அப்போது இந்த அன்னு ஸிடம் நம்பிக்கையில்லை என்று சொல்லுங்கள்!

கோ: என் ஆத்ம நண்பரை அப் படி நினைப்பேனு? இப்படி வாரும்! ...ஹூம்...வாலிப காலத்தில் ஒரு வன் எதைப்பற்றி அதிகக் கவலைப் படுவான்?

அன்: பணத்தைப்பற்றி!

கோ: ஊஹூம்...

அன்: புகழ்!

கோ: ஊஹூம்.

அன்: ஆயுள்...

கோ: ஊஹூம்...

அன்: அழகில் ரோஜாப் பூவையும் தித்திப்பில் தேனையும் மிஞ்சக்கூடிய மங்கை!

கோ: சபாஷ்! அப்படிச் சொல் லும். அன்னுஸ்! இப்படி உட்காரும். முத்துக்கள் கிடைக்கின்றன; ஆனல் எனக்கு வைரத்தின் மேல்தான் ஆசை! எனக்கு வேண்டிய வைரம் மற்றொருவன் விரலுக்கு மோதிரமாக இருக்கிறது. அந்த அழகு மோஹினி

வீட்டிலே சினிமா புரொஜக்டர்

ஏ. ஸி. அல்லது டி. ஸி. மின்சாரத் தாலோ, டார்ச்சின் உதவியாலோ



இயங்கக் கூடியதும், 35. அல்லது 16 மி. மீ. பில்ம்களை உபயோகிக்கக் கூடியதுமான அழகிய புரொஜக்டர். 4 x 3 அடி அளவு திரையில் உங்கள் வீட்டிலேயே படங்களை (வர்ணங்களோடுகூட) பார்க்கலாம். சிலேடுகளையும் காட்டலாம். 3 அடி இனும். விலை ரூ. 12-8-0. வி.பி.பி. சார்ஜ் 2-8-0. அதிகப்படி பில்ம் ஒரு கெஜம் அணு 8.

தானுகவே இயங்கும் பிஸ்டல்

(ஆறு ரவை கொண்டது)

தானுகவே இயங்கும் குதிரையுடன் கூடிய அமெரிக்கன் மாடல் பிஸ்டல்.



அதன் சப்தமும், ஜ்வாலையும், புகையும் காட்டு மிருகங்களைக் கூட ஓட்டவல்லது. விபத்தில் உதவும் சிறந்த துணை.

விலை ரூ. 8-8-0. வி. பி. பி. செலவு ரூ. 1-12-0 தனி. 12 ரவைகள் இனும். அதிகப்படி ரவைகள் டஜன் ஒன்றுக்கு விலை ரூபாய் 1-4-0. பிஸ் டல் பெட்டி ரூ. 2-8-0.

மலாயாவிலிருந்து வரும் ஆர்டர்களுடன் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் களையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

கடிதப்போக்குவரத்து ஆங்கிலத்தில்தான் இருக்கவேண்டும்.

MILAP TRADING CO., (P. P. M.)
Kanwariganj - Aligarh- U. P. (INDIA)

என்னை அங்கிகரித்தால் தலைக்கு கிரீடம் வரலாம். மறுத்தால் கழுத்துக்குக் கத்தி வரலாம்.

அன் : நீங்கள் பேசுவதைப் பார்த்தால். ஒருவேளை..?

கோ : ஏன் தயங்குகிறீர்?

அன் : இல்லை, நான் நினைப்பது சரியாக இருக்குமோ என்றுதான்...

கோ : எங்கே, சொல்லுமேன் பார்க்கலாம்?

கோ : ஆம், அந்தச் சந்திர பிம்பம் தான்!

அன் : நஞ்சை நாக்கில் தடவிக் கொள்ளும் ஆசையல்லவா இது?

கோ : என்ன செய்வது? ஆசை காரணங்களுக்கா கட்டுப்படுகிறது? அன்னுஸ்! இந்த ரகசியம் நமக்கு மட்டும் தெரிந்ததாக இருக்கட்டும்.

அவர்கள் சிப்ரஸோவிடம் போகிறார்கள். அவன் ஜெனேவாவுடன் சதுரங்கம் ஆடிக் கொண்டிருக்கிறான். படை அணிவகுப்பைப் பார்வையிட அவனை அனுப்பி விட்டு ஜெனேவாவுடன் சதுரங்கமாடும் கோலோவை அவள் பாராட்டுகிறாள். அன்னுஸின் மனமும் வேலை செய்ய ஆரம்பிக்கிறது, கள்ளனுக்குக் கள்ளன் அவன்! அவன் மனச்சாட்சி அவனைத் தூண்டுகிறது.

ம. சா. : இளவரசியைப் பற்றி மந்திரி நினைத்தது சரிதான். ஒருவேளை கோலோவின் நினைப்பு நிறைவேறினால், அரசன் இறப்பான். அதற்குப் பிறகு மந்திரிதான் மன்னன். அவனுக்கு முதல் மந்திரி இந்த அன்னுஸ். நான் ஏன் அவனுக்குத் தலை குனிந்து ஒரு அமைச்சனாக இருக்க வேண்டும்? நானே அரசனானால்?

அன் : ஆம்...அப்படி ஆகவேண்டியதுதான். அதற்கு? இளவரசியை கோலோ அடைவதற்கு முதலில் நான் ஒரு தூண்டு கோலாயிருக்க வேண்டும். பிறகு, அவனைச் சவப் பெட்டிக்கு அனுப்புவதை என் இரண்டாவது வேலையாக வைத்துக் கொள்ள வேண்டும். நெருப்புக்கு முதலில் காற்றாக இருந்து கடைசியில் தண்ணீராக மாறிவிட வேண்டியது தான்.

ஆனந்தத்துடன் வாய்விட்டுச் சிரிக்கிறான், கோலோ அப்போது அங்கு வருகிறான்.

கோ : ஏன் சிரிக்கிறீர்?

அன் : இல்லை, உங்களுக்குச் சந்தோஷம் வரப்போகிறதே என்று நான் சந்தோஷப் பட்டுக் கொண்டேயிருக்கிறேன்.

கோ : அப்படி எனக்கென்ன சந்தோஷம் ஏற்படப் போகிறது?

அன் : ஏன் மகாராணியின் முத்தம் மந்திரி கோலோவுக்குக் கூடிய சீக்கிரத்தில்தான் கிடைக்கப் போகிறதே!

கோ : உண்மையாகவா? அப்படிக் கிடைத்தால் இந்தக் கோலோ, பூமியிலே சுவர்க்கத்தைக் கண்டவன் தான் அன்னுஸ், சதுரங்கம் ஆடும் போது ராணி என்னிடம் நடந்து கொண்ட விதத்தைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

அன் : நினைப்பதென்ன? இளவரசி உங்களை மனப்பூர்வமாகக் காதலிக்கிறார்கள் என்று நான் அழுத்தந் திருத்தமாய்ச் சொல்லுவேன்.

கோ : ஆஹா! அவள் என் வசமாகி விட்டாள்..?

அன் : பிறகு நாம் அடுத்த திட்டத்தை ஆரம்பிக்கவேண்டியதுதான்.

காட்சி 5

கோலோ, அன்னுஸின் திட்டத்திற்கு ஏற்றாற்போல் மூர்நாட்டு மன்னன் ஆர்தின தேசத்தின்மீது போர் தொடுக்கிறான். போருக்குத் தலைமை தாங்கி சிப்ரஸோ கிளம்புகிறான். முதலில் இதையறியாத ஜெனேவா அவனைக் கேலி செய்கிறாள்.

சிப் : ஜெனேவா!

ஜெ : இப்போது உங்களைப் பார்த்தால், முழு உலகத்தையும் ஜெயிக்கப் பார்த்தானே ஜூலியஸ்

ஸீஸர், அவனைப் போலவே இருக்கிறீர்கள் !

சிப் : இப்போது விரோதிகள் என்னிடம் அகப்பட்டால் என்ன செய்வேன் தெரியுமா ?

ஜெ : வெறுங்கையாலே வெட்டி விடுவீர்கள்.

சிப் : ஓ! வாளை மறந்துவிட்டேனு?

ஜெ : இருங்கள்...

வாளைக் கொண்டு வந்து அவன் இடையில் கட்டுகிருள்.

சிப் : ஜெனேவா! ஒரு இமையால் தூங்க முடியுமா? உன் உதவியில்லாமல் நான் எதையும் சரியாகச் செய்து முடிக்க முடியாது.

ரூ. 5க்கு
15 ஜூவெல் கைக்கடிகாரம்

ரூ. 5-க்கு ஒரு பவுண்டன் பேனுவும், 15 ஜூவெல் கைக்கடிகாரமும் அடையலாம். அழகுக்கும், உறுதிக்கும் 15 வருஷ உத்தரவாதம்.

AMERiCAN SWISS WATCH SUPPLIER

Putli Ghar (P.P.M.) Amritsar.

அமெரிக்க விஞ்ஞானி சமீபத்தில் கண்டுபிடித்த ரேடியோ

மின்சாரமோ, பாட்டரியோ இன்றி, ஸ்பஷ்டமாக நீங்கள் செய்திகளையும் சங்கீதத்தையும் தெளிவாகக் கேட்கலாம். விலை நெ. 555 ரூ. 5. ஸ்பெஷல் நெ. 666 ரூ. 7/8. ஸ்பெஷல் டிலக்ஸ் நெ. 777 ரூ. 9/8. பாக்கிங் மற்றும் ரயில்வே கட்டணம் ரூ. 2/8 5 வருஷத்திற்குள் ஏதாவது பழுது ஏற்பட்டால் இலவச ரிப்பேர் செய்ய உத்திரவாதம். உடனே எழுதவும்:

ஸோல் ஏஜண்ட்ஸ் ;

AMERICAN RADIO STORE

Putil Ghar (P. P. M.) AMRITSAR

சேனு : அரசே! படைகள் புறப்படத் தயாராக இருக்கின்றன.

சிப் : இதோ வருவதாகச் சொல்.

ஜெ : என்ன, நீங்களா யுத்தத்துக்குப் போகப் போகிறீர்கள் ?

சிப் : வெகு காலமாகத் தொந்தரவு கொடுத்துக் கொண்டு வரும் நம் விரோதிகளைக் கொன்று, அவர்களின் பிரேதக் கணக்குகளைக் கொண்டு வரத்தான் போகிறேன்.

ஜெ : அப்போது என் கதி? நீங்கள் இல்லாவிட்டால் என் உலகம் இருட்டாகி விடாதா ?

சிப் : இதை நான் உணராமலில்லை ஜெனேவா! இருந்தாலும். ஒரு அரசனுக்குத் தன் சொந்தக் குடும்பத்தை விட, நாட்டின் நலம்தான் மிகவும் முக்கியம்.

ஜெ : அப்போது உங்கள் மனைவி உங்களுக்கு முக்கியமாகப் படவில்லையா ?

சிப் : ஜெனேவா! வருந்தாதே. மன்னன் என்ற முறையில் நாட்டுக்காகப் போராட வேண்டியது என் கடமை. அரசர்களுக் கெல்லாம் இது அடிக்கடி ஏற்படும் வழக்கம்தானே ! நான் சிக்கிரம் வந்து விடுகிறேன்... பார்த்தாயா! இவ்வளவு நேரம் வீரம் பேசிக் கொண்டிருந்த நீ. இப்படிக் கலங்கலாமா? ஒரு மகா வீரனின் மனைவி அழுவதை யாராவது பார்த்தால் என்ன நினைப்பார்கள் ஜெனேவா ?

கோ : அரசே !

சிப் : வாருங்கள் கோலோ, சகோதரருக்குச் சமமான உம்மிடம் சகலத்தையும் ஒப்படைத்துச் செல்கிறேன். உனக்கு உதவியாக அன்னுஸ் இருக்கிருர். இதோ என் உயிர். கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்...கிராதுஸ்! இதற்கு உதவியாக நீயும் இருந்துவா...ஜெனேவா! நான் வருகிறேன்

ஜெ : (தனக்குள்) நான் கர்ப்பவதி என்பதை என் கணவருக்குச் சொல்ல மறந்து விட்டேன். அவரிடம் இப்போது சொன்னுல் ஒரு

வேளை யுத்தத்தை முழு கவனத்தோடு நடத்த முடியாமல் போனாலும் போகலாம்...திரும்பி வரட்டும்.

காட்சி 6

போர்முனையிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திகள் வரவே தென்புடனிருக்கிருள் ஜெனேவா. நயவஞ்சகன் கோலோ அவளிடம் தன் 'வேலை'யைக் காட்ட வந்து விடுகிருன் ஒரு நாள்.

கோ : ஞாபக மறதியில் முன் அறிவிப்பில்லாமல் வந்து விட்டேன். மன்னிக்கவும். ஹூம்! அரசருக்கு உதவியாக இன்று குதிரைப் படைகளையும் அனுப்பி வைத்திருக்கிறேன்

ஜெ : அப்படியா?

கோ : அரசருக்கு இப்போது. கவனமெல்லாம் யுத்தத்தில்தான்!

ஜெ : என் கவலையெல்லாம் அவரைப் பற்றித்தான்.

கோ : என் நினைவெல்லாம் உங்களிடம்தான்! ஹூம்! ..மன்னர் போனதிலிருந்து மிகவும் இளைத்து விட்டீர்களே! உடல் நலத்தை உத்தேசித்தாவது வெளியில் உலாவ வரக்கூடாதா?

ஜெ: அவர் இல்லாத சமயத்திலா? இலைகளுக்குப் பின்னுல் மலர்களும் திரைக்குப் பின்னுல் ஸ்திரீகளும் இருப்பதுதானே கௌரவம்?

கோ : வாஸ்தவந்தான்! இருந்தாலும் இருட்டுக்குள் சித்திரம் இருக்கலாமா என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்.

ஜெ : கூடாதுதான்...

கோ : அப்போது பூந்தோட்டத்துக்கு சற்று போய் வரலாமே!

ஜெ : வரலாம்; ஆனுல் மன்னர் இல்லாத சமயத்தில் அப்படி நடந்து கொள்ள என் மனம் சம்மதிக்கவில்லை.

கோ: பார்த்தீர்களா! சங்கீதம், சம்பாஷணை. இயற்கையழகு இதெல்லாம் மனக் கவலையை மாற்றும். அதற்காக உங்களைக் கூப்பிட்டால் மறுபடியும் மன்னரை நினைத்துக் கண்ணீர் விடப்பார்க்கிறீர்களே! கவலைக்கு இடந்தரலாமா? வாருங்கள். இந்த மாதிரி நேரத்தில் தங்களோடு தனித்திருக்க எவ்வளவு காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் தெரியுமா?

ஜெ : தாங்கள் பேசுவது ஒன்றும் புரியவில்லையே?

கோ : தங்களுக்குப் புரியாமலிருக்கலாம். உங்களிடம் நான் எதிர்பார்ப்பது எனக்கல்லவா தெரியும்?

ஜெ : என்ன வேண்டும்? கேளுங்கள்!

கோ : ம்......!

ஜெ : ஏன் தயக்கம்? தாராளமாய்க் கேளுங்கள்!

கோ : ஆஹா! இப்போதுதான் என் மனம் குளிர்ந்தது! மஹாராணி! அன்று உங்கள் அரணமனைத் தோட்டத்தில் முதன் முதலாக உங்களைச் சந்தித்ததிலிருந்து என் மனம் உங்களையே நாடி விட்டது! என் ஆசையைச் சொல்லி விட்டேன். என் மீது கிருபை வைக்கா விட்டால் என் சாவுக்கு நீங்கள்தான் காரணமாக இருப்பீர்கள்.

ஜெ : நீர் நிலைமை தவறிப் பேசுகிறீர், போகலாம்!

கோ : ஆரம்பத்திலிருந்தே என் ஆசைக்கு ஆதரவு தந்து என்னை உங்கள் பித்தனுக்கிவிட்டு, இப்போது உங்கள் நிலைமையைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமல் நிராகரிக்கிறீர்கள் மகாராணி! நான் இப்போது எதையும் சாதிக்க முடிந்தவன். எனக்கு இந்த அரசாங்கம் கிண்ணத்தில் இருக்கும் தண்ணீர். இதை ஞாபகப் படுத்துகிறேன்.

ஜெ : துரோகி! அக்கிரமங்கள் ஏற்படாமல் தடுக்க வேண்டிய நீ. அதுவும் கௌரவமுள்ள மந்திரி, மன்னன் மனைவியிடம் நடந்து கொள்ளும் விதமா இது?

கோ : தவறுதான்! இருந்தாலும் தங்களை அடைந்தே தீரவேண்டும். இதுதான் என் முடிவு.

ஜெ: ஆ! என்ன துணிச்சல்? பாவி! நெருப்பில் விழப் பிரயத்தனப் படாதே! மறுபடியும் சொல்கிறேன், போய்விடு.

கோ: என்ன, போவதா? நீ மகாராணியாக இருந்து வருகிருயே அதற்காகத்தான் இவ்வளவு நேரம் இந்த மரியாதை! வந்துவிடு. இல்லை, உன்னை விடப்போவதும் இல்லை.

ஜெ: சண்டாளா! என்னை யாரென்று நினைத்தாய்? (கத்தியைக் காட்டி) அற்பப் பதறே! இப்போது என்ன சொல்லுகிருய்?

கோ: மகாராணி! நினைவு மயக்கத்தால் நான் பைத்தியக்காரன் போல் நடந்து கொண்டு விட்டேன். எனக்கு மன்னிப்பே கிடையாதுதான். இருந்தாலும் மன்னித்து விடுங்கள்.

ஜெ: காம உணர்ச்சிக்கு அடிமைப்பட்டு மனித குணத்தை இழந்து மண்டியிட்டுக் கிடக்கும் மிருகமே! பெருந்தன்மை காட்டுகிறேன், பிழைத்துக் கொள். போ! திரும்பிப் பார்க்காமல் ஓடு!

கத்தியைப் போட்டு விடுகிருள். அதைத் தாவி எடுத்துக் கொள்ளுகிருன் கோலோ.

கோ: இப்போது?

ஜெ: வீசி எறிந்த வாளை எடுத்துக் கொண்டு வீரனைப்போல் கொக்கரிக்கிருன் கோழை! அதுவும் 'பிழைத்துப் போ' என்று உயிர்ப்பிச்சை கொடுத்த ஒரு பெண்ணிடத்தில்...

கோ: ஹஹஹ்ஹா! பைத்தியக்காரி! இதோ பார்! உன் வேஷம், வீரம், கற்பு, கண்ணீர், அந்தஸ்து, அது, இது எல்லாம் இனிமேல் இந்தக் கோலோவிடம் நடக்காது. உன் விஷயத்தில் பாபம், புண்ணியம், நரகம், மோக்ஷம் இந்தப் பரலோக ஆராய்ச்சிகளைப் பற்றியெல்லாம் கவலைப்படப் போவதுமில்லை. மரியாதையாக என் ஆசைக்கு அடங்கி விடு. இல்லை, இதோ என்னிடம் மரணமாக்கும் கத்தி இருக்கிறது! கள்ளி யாரிடத்தில் இந்தப் பாசாங்கு?

ஜெ: த்ரோகி! விடு என கையை. சண்டாளா!

அவள் தன் கையைக் இழுத்துக் கொள்ளும்போது அதில் மோதிரம் உருவி கோலோவின் கையில் தங்கி விடுகிறது. இதைக் கண்டு கிராதூஸ் பொருமுகிருன்.

கிரா: என்ன அநியாயம் இது?

கோ: ஓஹோஹோ! இந்தக் கள்ள புருஷனுடன் சல்லாபம் செய்தது மில்லாமல இவனுக்குச் சகாயம் வேறு செய்யவந்து விட்டாயா? சண்டாளி!.... பார்த்தீர்களா இவர்கள் நாடகத்தை? எவ்வளவு காலமாக இந்த அந்தரங்க லீலை? இந்தப் பாதகனை இப்போதே சிறையில் வைக்கிறேன். எல்லாத்தலை முறைக்கும் நீங்காத அவமானத்தை ஏற்படுத்திய இந்த நீலி, இந்த இடத்தைவிட்டு எங்கேயும் அசைய முடியாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஜெனேவாவையும் கிராதூஸையும் சிறைப்படுத்தி விடுகிருன் கோலோ. அவளை யாவரும் விபசாரி என ஏசுகின்றனர். குழந்தை பிறந்து வளருகிறது. அரசன் சிப்ரஸோ போர் முடிந்ததும் ஆவலோடு ஓடி வருகிருன்.

சிப்: ஜெனேவா எங்கே? ஜெனேவா எங்கே?...என்ன, கேட்கிறேன் பேசாமலிருக்கிறீர்களே?

அன்: மகாராஜா! பதற வேண்டாம். சந்தனக் குழம்பு சேற்றோடு கலந்து விட்டது.

சிப்: அன்னுஸ்! என்ன சொல்லுகிறீர்?

கோ: நீங்கள் கொண்டு வந்த பச்சைக்கிளி உங்களை ஏமாற்றி விட்டது மகாராஜா!

சிப்: என்ன உளறல்? யாரிடம் பேசுகிறீர் என்பது தெரிகிறதா?

அன்: அரசே! உங்கள் கோபத்தால் எங்கள் நிலைமை என்ன ஆகும் என்பது எங்களுக்கு நிச்சயமாகத் தெரியும் இருந்தாலும் நம் மகாராணியைப் போல உங்களுக்குத் துரோகம் செய்ய எங்களால் முடியவில்லை.

சிப்: என்ன? துரோகமா? ஜெனேவாவா? என் ஜெனேவாவா?

கோ : ஆம். நம் மதிப்புக்குரிய மகாராணிதான். உயிரைக் காட்டிலும் சிறந்த மானத்தை இழந்து வேலைக்கார கிராதுஸோடு கள்ள நட்பு கொண்டு விட்டார்கள்.

சினத்தால் கோலோவை கன்னத்தி லடிக்கிருன் சிப்ரஸோ. கோலோ வேஷம் போடுகிருன்.

கோ : என்னைக் கொன்று விடுங்கள். எங்களுக்கு ஆபத்து ஏற்படுமே என்பதற்காக உண்மையைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. உலக அபவாதத்திலிருந்து உங்களைக் காப்பாற்றி அவர்களைச் சிறையில் வைத்திருக்கிறேன். இதோ உங்கள் கல்யாண மோதிரம். இது உங்களுக்கு உண்மையைச் சொல்லும்.

சிப் : என்ன? என் மோதிரம்! இது எப்படி உங்களுக்குக் கிடைத்தது!

கோ : நம் மகாராணி காதல் ஞாபகமாகக் கொடுத்தார்களாம் இந்தக் கிராதகனுக்கு.

சிப் : துரோகி!

கிரா : நானு? அரசே! ஒரு பாபமும் அறியாதவன், நிரபராதி என்னை நம்புங்கள்.

சிப் : உன்னையா? சண்டாளா?... என் முன் நிறுத்தி வைக்காதீர்கள். இழுத்துக் கொண்டு போங்கள்.

கிரா : அரசே! இந்த அநியாயக்காரர்களின் பேச்சை நம்பாதீர்கள்! நான் ஒரு குற்றமும் அறியாதவன். இதெல்லாம் இவர்களின் சூழ்ச்சி. மந்திரி ஒரு விஷப்பாம்பு; தளபதி ஓர் சதிகாரன். மகாராணி மகா உத்தமி. நம்புங்கள்! நன்ருக விசாரியுங்கள்

கோ : இவனுல் ராணிக்கு ஒரு குழந்தை வேறு பிறந்திருக்கிறது. விசாரிக்க வேண்டுமாம்.

சிப் : குழந்தையா?

ஜெனேவாவிடம் கோபத்துடன் போகிருன்.

ஜெ : (குழந்தையிடம்) கண்ணே! உன் தந்தை வருகிருர்டா!... பிரபு!

சிப் : சீ.. விபசாரி! என் முகத்தில் விழிக்காதே!... இந்தச் சண்டாளியையும் இவள் குழந்தையையும் காட்டில் கொண்டு போய்க் கண்டதுண்டமாக வெட்டிப் போடுங்கள்.

ஜெ : மகாராஜா! மகாராஜா!!

அவன் போய்விடுகிருன். அவள் மனம் வருந்துகிறது.

ஜெ : பிரபு! அந்த வஞ்சகர்கள் வார்த்தைகளை நீங்கள் கூடவா நம்பிவிட்டீர்கள்? நான் பிறந்த பரம்பரையின் கௌரவமும் என் பரிசுத்தமான நடத்தையும் நீங்கள் அறியாததா? நீங்களே இப்படிச் சந்தேகப்பட்டால இந்தப் பொல்லாத உலகத்துக்குச் சொல்ல வேண்டுமா? தெய்வமே! இதென்ன சோதனை?... கண்ணே! என் விதிதான் இப்படியென்ருல் உனக்குமா இந்த முடிவு ஏற்பட வேண்டும்?...பிரபு! தெய்வத்தின் நீதி தாமதிக்கலாம். ஆனுல் அது உண்மையை மட்டும் வெளிப் படுத்தாமல் போய் விடாது!...நாம் நிரபராதிகள்

ரஸிகன்

அறிக்கை

நமது அச்சகத்தில் ஏற்பட்டிருக்கும் வசதிக் குறைவு காரணமாக ரஸிகன் மாதமிருமுறைப் பத்திரிகையை தாற்காலிகமாக நிறுத்தியிருக்கிருேம். மறுபடியும் ஆரம்பமாகும் தேதி சீக்கிரமே அறிவிக்கப்படும்.

—மானேஜர்

என்பதை இப்போது நம்பாவிட்டாலும் ரத்தத்தால் எழுதும் இந்த எழுத்துக்களாவது ஒரு காலத்தில் உன தந்தையை நம்ப வைத்தே தீரும்.

தன் தலையில் வழியும் ரத்தத்தைக் கொண்டு "நாங்கள் நிரபராதிகள் ஜெனோ" என்று எழுதிவிட்டுக் கீழே விழுந்து விடுகிறாள் கிராதூஸ் உயிரிழக்கிறான். ஜெனோவா காட்டில் விடப்படுகிறாள்.

காட்சி 7

தங்கள் திட்டத்தின் அடுத்த பகுதியை ஆரம்பிக்கிறார்கள் கோலோவும் அன்னாஸும். அரசன் சிப்ரஸோவுக்குப் பைத்தியம் பிடித்திருப்பதாகக் கூறி மக்களை ஏமாற்றுகிறார்கள். சிப்ரஸோ கட்டப்பட்டு மக்களின் பார்வைக்கு நிறுத்தப்படுகிறான். மக்கள் கண்ணீர் சிந்துவதாக அன்னாஸ் கூறுகிறான்.

சிப் : கண்ணீர் சிந்துவார்கள்! நான் கட்டளையிட்ட நேரத்தில் களம் புகுந்து செந்நீரும் சிந்தினார்கள். வேலும் வாளும் உண்டாக்கிய ரத்தக் கடலிலே பயங்கர பாஷை பேசிக் கொண்டு மிதந்து செல்லும் மண்டை ஓடுகளை முத்தமிட்டபடி பயணம் நடத்தினார்கள். முறிந்த எலும்புத் துண்டுகளையும் அறுந்த நரம்புத் துகள்களையும் கண்டு முகாரி பாடாமல முதுகு காட்டாமல் முன்னேறு நீ முன்னேறு நீ என்று முரசு கொட்டினார்கள். எந்த நேரத்தில் எந்தப்பக்கமிருந்து ஈட்டி பாயுமோ, எதிரியின் கணை பாயுமோ என்று, சாவு முகட்டிலே விநாடிகளைக் கணக்கு பார்ப்பதும் வீரர்களுக்கு அழகில்லை என்ற போர்க்களத்து அரிச்சுவடியைத் தவறியும் மறந்து விடாமல், தடை பல கடந்து படை பல வென்றார்கள். மரணம் மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச்செண்டு, மங்கையின் இதழை விடச் சுவையானது என்ற மனோபலத்தோடு படையை நடத்திச் செல்பவன் பராக்கிரமசாலி; பாராட்டுக்குரியவன்; பாசறைக் காவியத்தை

படித்துத் தேறியவன் என்றெல்லாம் சிப்ரஸோவுக்குச் சிறப்புப் பாயிரம் பாடினூர்கள்! அய்யகோ! அவர்கள் தான் இன்று சித்தப்பிரமை கொண்டேன். பைத்தியக்காரன் என்றெல்லாம் சிந்து பாடுகிருர்கள் தீர சக்தியோடு உறவாடிய என் மக்கள் துரோகச் சக்திக்குப் பலியாகி விட்டார்கள், துன்மார்க்கர்கள் சுற்றி விடும் பம்பரங்களாகி விட்டார்கள். பைத்தியங்களாகி விட்டார்கள்!

அவனை மக்களும் பைத்தியக்காரன் என்றே தீர்மானித்து விடவே மனமுடைந்து போய் விடுகிருன். ஜெனேவா ரத்தத்தால் எழுதியதைக் கண்டு மனம் கலங்குகிருன்

காட்டிலே விடப்பட்ட ஜெனேவா பல விதத்தும் கஷ்டப்படுகிருள். கர்த்தாவின் அருளால் அவளது ஆபத்துக்கள் விலகுகின்றன. சீனத்துப் பட்டைத் தவிர வேறெதையும் தொட்டறியாத சிங்கார ஜெனேவா, கன்னெஞ்ச காவலாளிகள் கழற்றி எறிந்த கால் செருப்புக்களைத் தன் கண்ணீரால் நனைத்து பழுது பார்த்துத் தைத்துக் கொடுத்தாள். கோணி உடுத்துக் கூடைகள் முடைந்தாள்; கழுத்தையும் கால்களையும் இரும்புச்சங்கிலி பிணைத்து நிற்க குண்டுக் கற்களைத் துண்டுத் கற்களாக்கிக் குவித்தாள்; சிவந்த கைகள் கொப்பளித்து ரத்தம் சிந்த தண்ணீரையும் தன் கண்ணீரையும் கலந்து செடிகளுக்குப் பாய்ச்சினுள் செக்கின் மாடானுள்; ஆடைப் பொதி சுமக்கும் விலங்குகளுள் பாடும் யந்திரமானுள்; தன் சுத்தம் காக்க ஜெனேவா பிறர் அசுத்தத்தையும் தாங்கி தியாக ஜோதியானுள்; கணவனைத் தெய்வமென நம்பியவள் அவள். அவன் ஆணைப்படி ஆரண்யம் வந்து அவதிப்பட்டாள். அவள் வாழ்வில் மறுமலர்ச்சி. ரோஸி என்னும் எஜமான விசுவாசமுள்ள ஒரு தோழியின்மூலம் விடுவிக்கப்படும். சிப்ரஸோ சதிகாரர்களுக்கு யமனுகிருன். ஜெனேவாவின் வாழ்வில் மலர்ச்சி ஏற்படுகிறது.

கைத்தறி

குடிசைத் தொழில் கண்காட்சி, மதராஸ்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் காங்கிரஸால் நடத்தப்படுகிறது.

சென்னை ஐலண்டு கிரௌண்டில்

15 - 6 - 53-ல் ஆரம்பம்

தினசரி பொருட்காட்சி

கலாமண்டபத்தில் நவாப் ராஜமாணிக்கம் கோஷ்டியார், டி. கே. எஸ். சகோதரர்கள், என். எஸ். கிருஷ்ணன் கோஷ்டியார், கே. ஆர். ராமசாமி கோஷ்டியாரால் நடத்தப்படும் நாடகங்களும், நாதஸ்வரக் கச்சேரிகளும், சங்கீதக் கச்சேரிகளும், இதர முக்கிய புரோகிரும்களும் நடைபெறும்.

இந்திய அரசாங்கமும், ஒரிசா, மேற்கு வங்காளம், ஹைதராபாத், மைசூர், திருவாங்கூர்-கொச்சி, உத்தர பிரதேசம், சென்னை அரசாங்கத்தாரும் முக்கிய பங்கெடுத்துக் கொள்கிருர்கள்.

Dr. K. S. கோபாலசாமி, பொதுக்காரியதரிசி.

N. S. ராமபத்ரன், மானேஜர்.

1954

வருஷத்திய

நக்ஷத்திர காலண்டர்கள்

அதி அற்புதமான மூவர்ண நக்ஷத்திரப் படங்களுடன் பல அளவுகளில் தயாராகின்றன. இன்றே உங்கள் தேவைக்கு எழுதுங்கள். இதன் மூலம் உங்கள் வியாபார விருத்திக்கு அடிகோலுங்கள்.

விபரங்களுக்கு :

ஸ்டார் காலண்டர் கம்பெனி

(ராமநாத் பிரஸ்)

சென்னை-14.

ஒவ்வொரு நகரத்திலும் ஏஜெண்டுகள் தேவை.
விவரங்களுக்கு எழுதுங்கள்.

பெற்றதாய்......

(29-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரு. ஏண்டா அப்படிச் சிரிக்கிறீங்க ஏன் சலபதி! நான சொன்னதிலே தப்பிருக்கா?.. சரி சரி! நமக்கேன் இதத வம்பு? கொடுக்கிறவரு அவரு, வாங்கிக்கிறவன் நீ...

சாம: சலபதி! வாங்கி கிட்டுப் போறதைத் தவிர பணத்தைத் திருப்பிக் குடுக்கற வழக்கமே இலலே போலிருக்கே?

பெரு: அதென்ன சாமய்யா பிள்ளே. அப்பிடிச் சொல்லிட்டிங்க! பத்து காணி நெலம் வச்சிருக்கான் சொந்தமா. கொடுக்காமெ எங்கே ஓடிப் போயிடருன்!

சாம: போதும் போதும்! ஒன் ஓடமை என்ன போச்சு? நீ கரைக்கு மேலே உக்காநதிருக்கே. தலேக்கு மேலே வெள்ளம் போறவனுக்கல்ல தெரியும் வருததம்? இப்பவே வெரலுக்கு மேலே வீக்கம வந்தாச்சு. தெரியுமா உனக்கு?

மனம் வெதும்பிய சலபதி வீட்டுக்குத் திரும்பி வந்து ஈஸிசேரில் உட்கார்ந்து யோசனையிலாழ்கிருன். தாய் அவனே உணவருந்த அழைக்கிருள்.

சீத: வாடா, சாதம் வடிச்சிருகேன் .. உன்னேத்தாண்டா ... உன்னேததாண்டா ..

சல: வர்றேன் போ!

சீத: என்னடா, நேரமாகல்லே?

சல. சும்மா ஏம்மா வதைக்கிறே? போ உள்ளே.

சீத: செய்யறப்போ தலேகால் தெரியல்லே. இப்போ சாப்பாட்டு மேலே எறிஞ்சு விழுந்தா என்னடா வரப்போவுது?

சல; அப்புறம் கோவம் வந்துடிச்சின்னு பாரு...

சாந்தா கூப்பிடுகிருள் அத்தையை.

சாந: அத்தே...

சீத: சரி! நான் வாயைத் தெறக்கல்லேடி அம்மா!

சலபதியின் நல் வாழ்வைக் கெடுப்பதில் ஆனந்தம் கொண்ட நாராயணன், ராமய்யா, பெருமாள் ஆகியோர் ஒரு செம்மறியாட்டுக் கிடா சண்டையில் அவனை புகுத்தி நாராயணனேயும் சலபதியையும் முட்டவிடுகிருர்கள். சலபதி ஐநூறு ரூபாய் பணயம் வைக்கிருன். போட்டியில் சலபதி குறிப்பிட்ட கிடா தோற்றுடிப் போகிறது. நாராயணன் ஐநூறு ரூபாய் கேட்கிருன்.

நாரா: ஐநூறு ரூபா பணம எடு!

சல: இப்பவே எப்படிடா முடியும்?

நாரா; இவ்வளவு தான உன் டமபம்?

பெரு: என்னடா இது, பெரிய குடி முழுகிட்டாப் போல பேசறே? வேணுமான வீட்டுக்குப் போடா! நெல்லே அளந்து தாருன!

நாரா. சரி. இனனும் ரொம்ப நல்லதாப் போச்சு

நாராயணனும் சலபதியும் போகின்றனர்.

ராம: இருக்கிற கொஞ்சநஞ்ச நெலமும் போயிட்டதுன்னு அப்பத் தெரியும் ஐயா ஆட்டம்.

பெரு: என்ன இருக்கஙகே? வெறும் ஓட்டைக் குடம்! தூண்டி விட்டா போதும். எலலாம வாரி தலேமேலே போட்டுக்குவான்.

சலபதி நெல்லே அளப்பதை அறிகிருள் சீதம்மா.

சீத: நெல்லே வித்துடருன் போலிருக்கே?

சாந: நீங்க இருஙக அத்தை. நான் போய் பார்த்துக்கிட்டு வரேன்.

சீத: என்ன காரியம்டா இது? இந்தப் பஞ்சகாலததுலே நெல்லெல்லாம் வித்துட்டா பிற்பாடு என்ன இருக்கப் போவுதுடா?

சல: முன்னே கடன் தொல்லே

திரட்டும். அப்புறம் பேச்சு...அப் புறம்...

சீத: ஏண்டா நாராயணு, நீ எப் படா கடன் குடுத்தே?

நாரா: அதில்லே சித்தி...!

சல: உனக்குத் தெரியாது, சும்மாயிரும்மா...சாமய்யா புள்ளே அனுப்பிச்சாரு! கல்யாண கடனே இன்னும் தீர்க்கல்லேன்னு சும்மா இருப்பாங்களா என்ன?

சீத: என்னமோ, உன் இஷ்டப் பிரகாரம் செய்துக்கோ! (உள்ளே சென்று) என்ன செய்யருனே, ஏது செய்யருனே? யார் கிட்டையாவது கேக்கருணு கொள்ருணு?

சலபதி பெருமாளிடம் கடன் கேட் கிருன்.

சல: பெருமாள்!... பணம் ஏதா வது இருந்தா கொஞ்சம் கொடேன். ரொம்ப மொடையா யிருக்குது.

பெரு: உரலு போயி மத்தளத்து கிட்டே முறையிட்டதாம். அதுபோ லிருக்கு கதை. கயிறுவாங்கக் காசில் லாமே கெணத்தை மூடி வெச்சவன் கதையா நானே தெணறிகிட்டிருக் கேன். எங்கிட்டே கேக்கறியே!

கூலிக்காரன் சலபதியிடம் பணம் கேட்க வருகிருன்.

கூலி: எஜமான்!

சல: என்னடா அது?

கூலி: அதுதானுங்க முந்தாநாள் கூலி.

சல: குடுக்கறேனடா. கண்ட கண்ட இடத்திலேதானு கேக்கணும்?

நாராயணன் முதலியோர் சீட்டா டிக் கொண்டிருக்கையில் அங்கே சென்று நாராயணனிடம் கடன் கேட்டு அவமானப்பட்டுத் திரும்பு கிருன் சலபதி.

காட்சி 5

சீதம்மா கட்டிலில் உட்கார்ந் திருக்கிருள். அவள் கால்களைத் தேய்த்தவாறு கீழே உட்கார்ந்திருக் கிருள் சாந்தா.

சீத: இருந்து இருந்து இத்தனை நாளுக்கப்புறம இப்பதான கர்ப்பமா யிருககா காந்தா. எதாச்சியும அனுப் பலாம்னு அதுக்குக் கூட அதிருஷ்ட மில்லே!

சாந்: இல்லாத சமயத்திலே என்ன செய்ய முடியும்?

சீத: அவ்வளவுதான நாம குடுத்துவச்சது. எப்படியிருந்த குடும் பம்? இந்த நெலமைக்குக் கொண் டாந்துட்டானே.

சாந்: போகட்டும், விடுங்க அத்தே. உங்க புள்ளையும் வர்ற நேர மாயிடுத்து. இப்பப்ப அவரும என் னமோபோல இருககாரு. இன்னும் இந்தமாதிரி வார்ததை காதிலே விழுந்தா...

காட்சி 6

காந்தம்மா படுக்கையில் படுத் திருக்கிருள். டாக்டர் பரிசோதித்த பிறகு நாகய்யாவிடம் கூறுகிருர்.

டாக்: புள்ளேயுமில்லே குட்டியு மில்லே.

நாக: பின்னே...?

டாக்: ஒண்ணுமில்லே, வயித் திலே கட்டி உண்டாயிருக்கு.

காந்: கட்டியா? உனக்கிருக்கோ என்னவோ. இவ்வளவு நீளம் ரப் பரை வைச்சுகிட்டு அப்பிடி இப்பிடி தொட்டுப் பார்ததுட்டு எலலாம் தெரிஞ்சமாதிரி பேசறியே?

டாக்: உடனே ஆபரேஷன் செய்யல்லேன்னு உயிருக்கே ஆபத்து.

நாக: உயிருக்கே ஆபத்தா?

காந்: நீ ஆயிரம் சொல்லு, எனக் கென்ன? நானுவது ஆபரேஷன் பண்ணிக்கிறதாவது?

டாக்: சரி, நான் சொல்ல வேண் டியதைச் சொல்லி விட்டேன். அப் புறம் உங்க இஷ்டம்.

நாக: சரிதானுங்க... (டாக்டர் போனதும்) அந்தப் பெரிய மனுஷன் எதுக்காகச் சொல்ருன்: என்னத் துக்குச் சொல்ருன்னு புரிஞ்சுக்காமெ

இந்த மாதிரி குதிச்சா என்ன அர்த்தம்?

காந்: தெரிஞ்சா வைத்தியம் செய்யணும். இல்லாட்டிப் போனு வந்த வழியைப் பார்த்துட்டுப் போக ணும். அதில்லாமெ வயித்திலே கட்டி யாம், கத்திரிக்காயாம்,

நாக: அட.. ஆயிரம் ஆயிரமாகக் கொட்டிப் படிச்சிருக்காரு அவரு. அவருக்குத் தெரியாதது தனக்குத் தெரியுமாம் கட்டியும் குட்டியும்.

காந்: அப்பிடியானு சாமி குடுத்த வரம் என்ன ஆன மாதிரியாம்!

நாக: வரமோ வாய்க்காலோ. ஆபரேஷன் செய்துகிட்டா தவிர கொழந்தையே பொறக்காதாம்.

காந்: ஆமா. சாமி குடுத்தவரம் இவ்வளவு தூரத்துக்கு வந்தாச்சி, இவர் சொல்றது எவ்வளவு தூரத் துக்கு வரப் போவுதோ?

நாக: காரண்டி குடுக்கருரே டாக்டர்!

காந்: காரண்டியோ கிரண் டியோ! ஆம்புளேங்க மனசு வெச்சா நிக்கவா போவுது?... செய்யற ஆப ரேஷனேச் சிக்கிரமா செய்து முடிங்க.

காட்சி 7

சீதம்மாவிடம் கடன்பாக்கி விஷய மாய்ப்பேச சாமய்யா வருகிருர்.

சீத: தீர்க்கறது தீர்த்துக்கிட்டே இருக்கோம். இன்னும் என்னப்பா தொந்தரவு? சாப்பாட்டுக்கு வச்சி ருந்த நெல்லேக்கூட முந்தாநாள் தானேப்பா அளந்துகிட்டுப்போனே?

சாம: என்னது? நெல்லே அளந்து கிட்டுப் போனேனு?

சீத: அது என்னப்பா, அப்படிச் சொல்றே? முந்தாநாள் நீ நாராய ணனே அனுப்பி அளந்து வாங்கிக் கிட்டுப் போனியே. ஞாபகமில்லே?

சாம: ஆச்சி! பொய் பேசறதுக் குக்கூட எறங்கிட்டானு? இனி தலே யெடுத்த மாதிரிதான்! கோழிப் பந்த யத்துக்கும் கிடாப் பந்தயத்துக்கும் தோற்றபணம்கூட எனக்குக் குடுத்த மாதிரி அர்த்தமா?.. வாங்கிட்டு வாயிலே போட்டுக்கிறதைத் தவிர இதுவரை ஒரு சல்லிகூட வரவு வைக் கலலியே.

சாந்: அதெல்லாம் எதுக்கு அத்தே? அவ்வளவு அவசியமாயி ருந்தா எங்காவது வழி பண்ணிக் குடுக்கலாமே, எவ்வளவுன்னு தெரிஞ்சா...

சாம: எவ்வளவுன்னு கேக்க றீங்க? கல்யாணம் பண்ணிக்கிறேன் னுன். ஆருயிரம் ரூபா குடுத்தேன். உன்னே உங்கம்மா வூட்டுக்கு அனுப் பணும், கையிலே காலணுகூட இல் லேன்னு கையைக் காலேப் புடிச்சிக் கிட்டான். அப்பவும் குடுத்தேன் ஆயிரம் ரூபா. கொழந்தைக்கு நாம கரணம் பண்றேன்னுன். ஐயோ பாவம்னுட்டு ஐநூறு ரூபா குடுத் தேன். கொண்டு வந்து கொட்டிக் கறதுக்குத் தெரியுது. திருப்பிக் கொடுக்கணும்னு நெனேப்புகூட இல் லேயே ..இப்பேர்ப்பட்ட நாடோ டின்னு தெரிஞ்சிருந்தா குடுத்திருக் கவே மாட்டேன்.

சாந்தாவுக்குக் கோபம் வந்து விடுகிறது. நகைகளேக் கழற்று கிருள்.

சாந்: அனுவசியமா அவரெப் பத்தி ஒண்ணும் சொல்ல வேணும், இந்தாங்க. உங்க பாக்கிக்குச் சரிக் கட்டிக்குங்க.

சீதா: சாந்தா!

சாம: என் பணத்தை எனக்குக் கொடுன்னு கேட்டேன், தவிர உன் நகையும் நட்டும்...இன்னும் மீதியிருக் கிறதைச் சிக்கிரம் சரி பார்க்கச் சொல் லுங்க...

சாமய்யா, வேணு, பெருமாள் மூவரும் சாமய்யா வீட்டிற்குச் சற்றுத் தள்ளி பேசிக் கொண்டிருக் கிருர்கள். வேணுவிடம் சாமய்யா கூறுகிருர்.

சாம: நகைக்கென்ன வந்தது? இங்கே பாரு! இருக்கிற கொஞ்ச நஞ்சத்தையும் வித்துக் கடனே அடைச்சுடு. மீதி ஏதாவது இருந்தா உன் தங்கை பேரிலே எழுதி வை. அவனே மாத்திரம் நம்பினியோ கட்

டாயம் கப்பரையைக் கையில் குடுத்திடுவான்.

பெரு: அந்தப் பெரிய மனுஷன் எதுக்குச் சொல்றுங்கிறதைக் கொஞ்சம் புரிஞ்சுக்கோ. இல்லாமெப் போனா நாளைக்கி அந்தக் கொழந்தைங்க உன் கழுத்துக்குத் தாண்டா பாரம்!

சலபதி சாமய்யா வீட்டுக்கு வருகிறான்.

சாம: யாரது?

பெரு: அவனேதான்.

சாம: சலபதி, இங்கே வா! என்னடா?

சல: ஒண்ணுமில்லே. கொஞ்சம் வேலையா வந்தேன்.

சாம: ஏன். பணம் கிணம் வேணுமா?......அது சரி! கிடாப் பந்தயத்திலே தோத்த பணத்துக்கு நெல்லை அளந்து குடுத்துட்டு என் கடனை அடைச்சேன்னு பொய்யா பேசினே. உங்கம்மாகிட்டே?

பெரு: அதென்ன சாமய்யா புள்ளே! நம்ம சலபதி பொய் பேசற வழக்கம் கெடையாதே!

சாம: அப்படி நெனைச்சு நெனைச்சு தான் இவன் கேட்டப்போ எல்லாம் இல்லைன்னு சொல்லாமெ கடன் குடுத்தேன். இப்போப்பட்ட காடோடின்னு தெரிஞ்சிருந்தா நான் ஏன் குடுக்கப் போறேன்?

சல: யாருங்க உங்ககிட்ட சொன்னது?

சாம: வேறே யாராவது சொல்லியிருந்தா நான் நம்பமாட்டேன்தான். உங்கம்மாவும் உன் சம்சாரமும் சொன்னாகூட நம்பவாணும்கிறியா? அப்படியா?...இவனுக்குப் புத்தியில்லாமெப் போனாலும், சாந்தா இருக்காளே ரொம்ப சுயமரியாதையுள்ளவ. தன் புருஷன் செய்த வேலைக்கு வெட்கப்பட்டுக்கிட்டு பேசாமெ நகையைக் குடுத்தனுப்பிச்சுட்டா.

பெரு: அப்படியா? சபாஷ்..!

சல: என்னது, நகையைக் குடுத்தனுப்பிச்சாளா?... யாரு...?

வேணு: போதும், போதும்! இன்னும் தர்க்கம் பண்ண வந்துட்டே! என் தங்கையை உனக்குக் கட்டிக் குடுத்து அவளைப் பாழும் கிணத்திலேயே தள்ளிட்டேன்.

சல: என்னடா ஓளர்றே! உங்கிட்டே சொல்லி அவ அழுதாளா?

வேணு: அழுதா என்ன? மண்டையை ஒடைச்சுக்கிட்டா என்ன? இப்போப்பட்ட புத்தி கெட்ட மனுஷனை வெச்சுகிட்டு ..

சல: வாயை மூடு...

வேணு: சும்மா வாய்க்கு வந்தது பேசாதே, கொஞ்சம் முன்னே பின்னே யோசிச்சுப் பேசு.

சல: மறுபடியும் பேசினே மண்டையைப் பொளந்துடுவேன்.

வேணு: ஆமா...! நீ அடிச்சு அடிச்சுப் போட்டு ஆஸ்பத்திரிகூட நிரம்பிப் போச்சு.

பெரு: அவன் தங்கையோட நகையைக் குடுத்தனுப்பிச்சா தவிர உனக்கு வேறே கதியில்லே. மறுபடியும் அவன் பேரிலே எகிர்றியே தம்பி. பெரிய ஆம்பிளை மாதிரி...

சல: பெருமாளு...!

அங்கிருந்து அடக்க முடியாத ஆத்திரத்துடன் வீட்டுக்கு வந்து சாந்தாவிடம் எரிந்து விழுகிறான்.

சல: இங்கே வா நீ...சாமய்யா புள்ளே இங்கே வந்திருந்தானா?

சாந்: வந்திருந்தாரு.

சல: கழுத்திலேயிருந்து நகையைக் கழட்டிக் குடுத்தியா?...யார் குடுக்கச் சொன்னது?...உன்னைத் தாண்டி, ஏன் பிசாசு மாதிரி பேசாமெ நிக்கிறே?

சாந்: போகட்டுங்க, நகைக்கென்ன வந்தது? அவரு வாய்க்கு வந்தபடி பேச ஆரம்பிச்சாரு.

சல: வாயை மூடு! போகட்டுமாம், போகட்டும்.

சீத: என்னடா அங்கே கூச்சல்?

சல: உன்னிஷ்டமாக் கழட்டிக் கொடுத்துட்டு. கழுத்திலே யிருக்கிறதை யாரோ அறுத்துக் கிட்டாப் போலே எப்பிட்றி போயி அழலாம். உன் அண்ணன் கிட்டே?

சீத: அட, உன் நாக்கு அறுந்து விழ! என்னடா சொல்றே?

சாந்: யாருங்க அண்ணன் கிட்ட சொன்னது?

சல: சே...! போயிடு இங்கேயிருந்து! உன் மொகத்தைப் பார்த்தாக்கூடத் தரித்திரம் புடிச்சுடும்! தலையைத் தூக்க விடாமெச் செய்துட்டே! நல்ல பேரோடெ வாழ்ந்த குடும்பத்தை நடுச் சந்திக்கி இழுத்துட்டே...

சீத: டே சலபதி... சலபதி...

சாந். அத்தே...!

சீத: யார்ரு நடுச் சந்திக்கி இழுத்தது? நீயா, அவளா?... வெக்கமில்லாதே அவமேலே குத்தம் சாட்றே!

சாந்: அத்தே!

சல: அம்மா...!

வெளியே போய் விடுகிருன்.

சாந்: நீங்க சும்மா இருங்க அத்தே!

சீத: நீ இரம்மா! என்னடா உன் தடபுடல்? இந்தக் குடும்பத்தை இந்த நிலைமைக்கு கொண்டு வந்தது யார்ரு? கண்ணுமண்ணு தெரியாமே கடனை வாங்கிட்டு காலணுவுக்குக் கூட வழியில்லாமெச் செய்துகிட்டது யார்ரு? கிடா பந்தயத்துலே ஏற்பட்ட நஷ்டத்துக்கு கைகூசாமெ நெல்லை யளந்து குடுத்துட்டு சாமய்யா புள்ளைக்கு கடனடைச்சேன்னு வாய் கூசாமெ பொய் புளுகினே! நீ நாசமாப்போக. அந்தச் சமயத்துக்கு இவ தன்னுடைய நகையைக் குடுக்காமெ இருந்திருந்தா உன் பொழப்பு காவிரியிலே கலந்திருக்கும்டா.

சாந்: அத்தே, அத்தே! சும்மா யிருங்க அத்தே!

சல: சீ, தரித்திரம் புடிச்ச வீடு!

சீத: ஊட்டைப் பாழாக்கிட்டேடா.

சாந்: சும்மா யிருங்க அத்தே!

சீத: மூதேவிப் பயலே! சந்திக்கிழுத்தாங்களாம் சந்திக்கி!

சலபதி போய்விடுகிருன். வேணு அப்போது அங்கு வருகிருன். ராமுவும் சங்கரும் மாமா வந்திருப்பதாக சாந்தாவிடம் கூறுகிருர்கள்.

வேணு: எதுக்கம்மா கூப்பிட்டனுப்பிச்சே?

சாந்: அத்தானை நீ என்ன சொன்னே?

வேணு: நான் ஒருத்தன்தானு சொன்னேன்? ஊர்மொத்தம் காரி முழிஞ்சுது! சொன்னு என்ன? அவ்வளவு பயம் ஏன்?...இல்லாமெ என்ன? நாளுக்குநாள் இந்தமாதிரி அளவு மீறி போயிகிட்டிருந்தா?

சாந்: போதும் நிறுத்து! எங்க இஷ்டப்பிரகாரம் நாங்க செய்துக்கறோம், உனக்கென்ன, ஊராருக்கென்ன?

வேணு: சரிதான்! அவனுக்கேத்தமாதிரி நீயும் ஆயிட்டே. இஷ்டப்பிரகாரம் நாசம் பண்ணிகிட்டு வந்தா, நாளைக்கி கொழந்தைங்க கையிலே...

சாந்: சீ, வெக்கமில்லாமெ பேச வந்துட்டான்! எங்க விஷயம் உனக்கு அனுவசியம்.

வேணு: இப்ப அனுவசியம்னு சொல்லிட்டா மாத்திரம் போதாது, உள்ள கொஞ்ச நஞ்சத்தையும் ஊதாரித்தனம் பண்ணிட்டு நாளைக்கு யார் தலைமேலே உக்காரலாம்னு நெனேச்சுகிட்டே?

சாந்; ஹூம்.. ஏண்டா நீ மனுஷனுப் பொறந்தே? இந்த வீட்டு ஈ கூட உன் வாசலை மிதிக்காது. தயவு செய்து நீகூட எங்களை மறந்துடு. அது போதும்.

சீதா: சாந்தா, என்னம்மா அது?

சாந்: ஒண்ணுமில்லே அத்தே!... இந்த வார்த்தையைச் சொல்லத்தான் கூப்பிட்டனுப்பிச்சேன்.

வேணு: ஹூம்... .....

போய் விடுகிருன். அப்போது சில சன்னியாசிகளேக் கண்ட சலபதி தானும் பந்தம் நீக்கிக்கொண்டு விடத் தீர்மானிக்கிருன். தாய் கேட்கிகிருள். சரியான பதிலில்லே. மனேவி கேட்கிருள். ஏதாவது பதில் சொல்ல வேண்டுமே! மனம் வெறுத்துப் பேசுகிருன்.

சாந்: இந்தச் சின்ன துகளே என்ன செய்ய நெனேச்சுட்டிங்க?

சல: கொளத்திலே கொண்டு போயி தள்ளு! ஆனலும் என்னுடைபது என்ன இருக்கு? எல்லாத்துக்கும் நீதான் இருக்கியே காப்பாத்தறதுக்கு...பாழும் வீடு, பாழும் குடித்தனம்! இந்தச் சங்கிலியை அறுத்துக்கிட்டு என் வழியைப் பார்த்துப் போயிட்டா எல்லோருடைய பீடையும் தொலேயும்.

சாந்: என்னுங்க, குழந்தைங்க இருக்காங்க, அவங்க மொகத்தைப் பார்த்தாவது......

சல: சீ, பீடைப்பசங்க. பார்த்தா கூட தரித்திரம் புடிச்சுடும்.

சாந்: பாருங்க, கஷ்டகாலத்திலே மனதைக் கொஞ்சம் தைரியப் படுத்திக்கணும். ஆம்பளேங்க, எங்களுக்குத் தைரியம் சொல்ல வேண்டிய நீங்களே கவலேப்பட்டா எப்படி?

சல: வாயை மூடு...(பளீரென்று அறைந்து) கவலேப்பட்டுத்தானே கழுத்திலே இருக்கிறதைக் கழட்டிக் குடுத்தே! வெக்கமில்லாதே பேச வந்துட்டே!

சித: டே சலபதி! சலபதி!! அட உன் கையை உடைக்க...

கீழே விழுந்து விடுகிருள். சலபதியும் சாந்தாவும் ஓடி வருகின்றனர்.

சாந்: அத்தே!..அத்தே...!!

சல: அம்மா!

சித: சீ! நீ மனுஷனல்ல. மிருகம்! அவ வுடம்புமேலே கையவச்சே நீ நாசமாய்ப் போக...அம்மா சாந்தம்மா.

சாந்: அத்தே ...பரவாயில்லே அத்தே! என்னுங்க, பார்க்கறீங்க? போய் டாக்டரை அழைச்சிகிட்டு வாங்க.

டாக்டரை அவன் அழைத்து வருவதற்குள் சீதம்மா மரணமடைகிருள். சாந்தா கதறுகிருள். சலபதி கண்களேப் பொத்திக் கொண்டு அழுகிருன்.

ஒரு நாள் இரவு யாருக்கும் தெரியாமல் சலபதி வீட்டை விட்டு வெளியேறி விடுகிருன். சாந்தா அவனேக் காணுது தவித்து. குழந்தைகளேப் பாடுபட்டு வளர்த்துப் பெரியவர்களாக்குகிருள்.

காட்சி 8

நாகய்யா இப்படியும் அப்படியும் உலாவுகிருன். உள்ளே குழந்தையின் அழுகுரல் கேட்கிறது. சாந்தா வந்து அவனிடம் ஆவலுடன் கூறுகிருள்.

சாந்: பொண் கொழந்தே அண்ணு!

நாக: இன்னும் என்ன? ரொம்ப நல்லதாப் போச்சி. உனக்கு மருமக கெடச்சுட்டாப் போலெதான். சரி, நம்ப சங்கருக்குக் கல்யாணம் பண்ணி வச்சிடலாம், என்ன?...உம் சங்கர்! சங்கருக்குப் பெண்டாட்டி கௌரீ...கௌரி நல்லாருக்கு!..

ஒரு வீட்டில் நோன்பு நூற்கிருர்கள். சாந்தா மூத்தவள் என்பதற்காக தாம்பூலம் எடுக்கச் சொல்கிருள் வீட்டுக்காரி.

வீ. கா.: அம்மா சாந்தா! நீ வாம்மா மூத்தவ. மொதல்லெ நீ எடுத்துக்க.

ஒருத்தி: கேட்டியா முனியம்மா! இவ பெரிய மூத்தவளாம்!

மற்ருெருத்தி: இருடி! நோம்பு கும்பிட்டா மட்டும் போதாது. குடுக்கிற தாம்பூலம் முன்னே பின்னே யோசிச்சு குடு.

விட்டு மருமகள் சாந்தாவுக்கு பழம் கொடுக்க வருகிருள்.

ஒருத்தி: அதென்னம்மா அது?

மற்: அதுவா? வெங்காயம், தாம்பூலம் கொடுக்கிறவங்களுக்குத் தெரீ

யாமெப் போனாலும் வாங்கிக்கிறவளுக்காவது புத்தியிருக்க வேணும்?... அஞ்சு வருஷம ஆச்சு ஆம்படையான் ஊரை விடடுப் போயி! என்ன ஆனானோ ஏது ஆனானே யாருக்குத் தெரியும்? தாலியும தங்க வடமும் இருந்திட்டா போதுமா கட்டுகழுத் தின்னு சொல்லிக்க.

இன்னெருத்தி: அதென்ன வார்த்தை அம்மா அது நல்லதும் கெட்டதும் தெரிஞ்சுக்காமெ.

சாந்: (வருந்தத்துடன்) போவட்டும் அம்மா! வேறே யாருக்காவது குடுங்க.

மௌனமாக வெளியேறி விடுகிருள்.

காட்சி 9

சங்கர் முரளி முதலியோருடன் பொம்மை விளையாட்டில் சண்டை போடும் போது ராமு அவனுக்குப் பரிந்து கொண்டு மற்றவர்களை அடித்து விடுகிறன். முரளியின் தாயார் சங்கரை அறைந்து விடுகிருள். அன்று சாந்தாவிடம் இதைப் பற்றிக் கூறுகிருன் ராமு.

ராமு: பிசாசைப் போல அறைஞ்சிட்டாம்மா தம்பியை, அந்த முரளி அவங்கம்மா.

சாந்: ஹா! ஓடம்பு காயுதே!

சங்: எங்கப்பா இதைவிட நல்ல பொம்மை எடுத்தாருவாரு.

சாந்: பொம்மை என்னடா ராமு?

ராமு: முரளிக்கு அவங்கப்பா நல்ல பொம்மை கொண்டாந்தாரம்மா! எங்கப்பா இதைவிட ஒசத்தி பொம்மை கொண்டாருவாருன்னு சங்கர் சொன்னன்... பசங்கள்ளாம் சிரிக்க ஆரம்பிச்சிட்டாங்க. 'எங்கே இருக்காருடா உங்கப்பா'ன்னு அந்த சத்யம் கேட்டான். எனக்கு கோவம் வந்து எல்லோரையும் அடிச்சிட்டேம்மா. முரளி அம்மா வந்து சங்கரை அடிச்சிப்புட்டா. தம்பி ஒண்ணுமே செய்யலேம்மா... அம்மா! நம்ப அப்பா யாரும்மா?

சாந்: ராமு...!

ராமு: ஆமாம்மா! அப்பா எங்கேம்மா இருக்காரு?.. சொல்லும்மா. ஏம்மா அழறே?

சாந்: ஒண்ணுமில்லேம்மா! நீ போயி ஆடு.

ராமு: இல்லேம்மா.

சாந்: போடா! நான் தம்பியைக் கவனிக்க வேணுமா?

ராமு அந்தப்புறம் சென்றதும் சங்கர் தாயைக் கேள்விமேல் கேள்வி கேட்க ஆரம்பிக்கிருன்.

சங்: அம்மா! நம்ம அப்பா அதை விட நல்ல நல்ல பொம்மை கொண்டாரமாட்டாரு?

சாந்: கொண்டு வருவாரம்மா!

சங்: சிக்கிரம் கொண்டாரச் சொல்லும்மா! அந்த முரளி பையனுக்கு காணபிச்சு அழ வைக்கணும்.

சாந்: ஆகட்டும்.

சங்: இன்னும் எப்பம்மா! அப்பா எப்பவும் வரமாட்டாராமமா?

சாந்: சி! ஏன் வரமாட்டாரு! வருவாரம்மா! நீ சாப்பிடு.

சங்: போகட்டும்! நம்ம போகலாம் வாம்மா அப்பாகிட்டே.

சாந்: அங்கே நாம் போக முடியாது கண்ணு.

சங்: சரி. வேறே யாரையாவது அனுப்பும்மா. அப்பாவைச் சீக்கிரம் அழைச்சிக்கிட்டு வாறதுக்கு...

சாந்: அந்த ஆண்டவனே அழைச்சிகிட்டு வருவாரு.

சங்: அப்பா ஆண்டவன் கிட்டே போயிருக்காராம்மா?

ராமு: (வந்து கொண்டே) அப்பா செத்துப் போயிட்டாராம்மா?

சாந்: சி! தப்புடா கண்ணு! அப்பிடிச் சொல்லக்கூடாது. என்னடா இந்த வார்த்தை?.. நல்லதுக்கும் கெட்டதுக்கும் ஒரு அளவு இருக்கணும். உற்சாகம் கொறைஞ்சு போயி தூக்க முடியாத பளுவை எடுத்து

கிட்டா கழுத்து நொறுங்கிடும் மறை முகமா எல்லாவற்றையும் கேலி செய்யும்படியான இந்த உலகம் பலநாக்க முடியாதவனைப் பார்த்து நேரிலேயே கேலி செய்யுது. அதை ஒரு அவமானமா எடுத்துக்கிட்டா வெளியிலே தலைகாட்டக் கூடாதுன்னு தோணுது. அவ்வளவுதான். நீங்க சின்னக் கொழந்தைங்க. இந்தக் கதை உங்களுக்கு என்ன அர்த்தம் ஆகப் போகுதுன்னு இத்தினி நாளு சொல்லாமெ இருந்தேன். இதுதான் உங்கப்பாவுடைய கதை.

இதைக் கேட்டதும் மூத்தவனான ராமுவின் மனம் உருகுகிறது. அவன் தன் தாய்க்கு உதவத் தீர்மானிக்கிறான். அதிகாலையில் எழுந்து சென்று மந்தாரை இலை கொண்டு வருகிறான்.

சாந்: என்னடா இதெல்லாம்? இந்த எலை எதுக்கு?

ராமு: மந்தாரை எலே! நீ தச்சிக்குடு. நான் வித்துகிட்டு வர்றேன்... ஏம்மா தப்பா?

சாந்: இல்லேடா கண்ணு.

ராமு: அதனாலே தாம்மா கொண்டு வந்தேன.

சாந்: யார்ரா சொன்னது உனக்கு இந்த யோசனை .....ராமு...?

ராமு: யாராவது சொல்லணு மாம்மா? நான்தான் பார்த்தகிட்டிருக்கேனே. நீ எவ்வளவு கஷ்டப்படறேன்னு!

சாந்: ராமு! இதுக்காகவா விடியறதுக்கு முன்னே எழுந்து போனே? எவ்வளவு திகில உண்டாக்கிட்டே தெரியுமா? தப்புடா கண்ணு. நீ நல்லாப் படிச்சிக்கணும். எழுந்திரு. பள்ளிக்கூடம் புறப்படு.

ராமு: இல்லேம்மா. இனிமே நான் பள்ளிக்கூடத்துக்குப் போக மாட்டேன. உனக்கு உதவியா இருக்கப் போறேன்...தம்பி நல்லாப் படிச்சிக்கட்டும்.

சாந் தப்பு! ரெண்டுபேரும் படிக்கணும். அதில்லாமெ உங்கப்பா வந்து பெரியவனைப் படிக்க வெக்காமெ இப்படிப் பாழ்பண்ணியேன்னு என்னைக் கேப்பாருடா!

ராமு: ஆ. எல்லாம் எனக்குத் தெரியும். சின்னவனை ஏமாத்தற மாதிரி என்னேயும் ஏமாத்தப் பாக்கிறியா?

சாந்: உம், சரி எருந்திரு. பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்சு

ராமு: ஊஹூம்! இனிமே நான் பள்ளிக்கூடத்துக்குப் போக மாட்டேன்.

சாந்: என்னடா அது? உனக்கென்ன பைத்தியமா? என்னடா நாயனு. தப்பில்லே?

ராமு: அம்மா! என்பேச்சைக் கொஞ்சம் கேளம்மா என்னைக் கோவிச்சுக்க வேணடாம்மா இந்த விஷயத்திலே மாத்திரம் என்னை ஒண்ணும் சொல்லாதேம்மா.

சாந்: சரிடா கண்ணு. சரி. அழாதே.

அன்று முதல் 'உழைக்க' ஆரம்பிக்கும் ராமு படிப்படியாக முன்னேறி விரைவில் சொந்தத்தில் ஒரு மளிகைக் கடை வைத்து விடுகிறான். பெருமாள் அவனிடம் கணக்கு வைத்துக்கொண்டு சாமான் வாங்கிச் செல்கிறான். ஒரு நாள் சங்கரைக் குமாஸ்தாவாக வைத்துக் கொள்ளும்படி ராமுவிடம் அவன் கூறுகிறான்.

ராமு: பலே பலே பலே! இந்த ஒண்ணரையணு கணக்குக் கோசரம் அவன் படிப்பைக் கெடுத்துக்கச் சொல்றியா? அதுவுமில்லாமெ அவனுக்கெங்கே நேரம இருக்குது. கலெக்டர் படிப்புன்னு விளையாட்டா?

காட்சி 10

கௌரி ஆசை அத்தான் சங்கரைப் பார்க்க சாந்தாவின் வீட்டுக்கு வருகிறாள்.

சங்: கௌரி! கௌரி!!

கௌ. சங்கர்! உனக்காகத்தான் வந்துகிட்டிருக்கேன் இதிலே என்ன எழுதியிருக்கு, சொல்லு? (ஒரு காகிதத்தைக் காட்டுகிறாள்)

சங் : (அவள் தோளைப் பிடித்து) புருஷனும் பெண்ஜாதியும் இப்படி இருக்கணும்னு எழுதியிருக்கு!

கௌ ; போ! எது கேட்டாலும் நீ எப்பவும்...

சங்: ஆ! இப்ப நீ என்ன கேட்டியாம்!

கௌ ; (சங்கர் தோளைப் பிடித்து அழுத்தி) சரி. அது போவட்டும். இப்பிடி உக்காரு! ..எங்கே ஒரு விரலைப் புடி.

சங்கர் இரு விரல்களையும் பிடித்துக் கொள்ளுகிருன்.

கௌ ; அ...ப் ..பா! ஒரு வெரலைப் புடிக்கச் சொன்னு...?

ராமு உள்ளே வரவே சங்கர் நழுவி விடுகிருன். கௌரியின் காதைப் பிடித்துத் திருகுகிருன் ராமு.

ராமு : உனக்கு எத்தனே தடவை சொல்றது. அவன் படிக்கும்போது கிட்டே வராதேன்னு?

கௌ : இப்ப ஒண்ணும் சங்கர் படிக்கலலே.

ராமு ; அதேதான் நானும் சொல்றது. உன்னுலேதான் அவன் படிக்கல்லே. அப்படியில்லே, வா சொல்றேன் உன்னே, வா!

கௌ : பெரிய அத்தான்! பெரிய அத்தான்!

சாந்தாவிடம் ஓடுகிருள் கௌரி.

சாந் : இருடா நீ ஒருத்தன்! சின்ன கொழந்தே அவளுக்கென்னடா தெரியும்?

ராமு: தெரியாது, தெரியாது! முதுகிலே இரண்டு அறைவச்சா அப்பத தெரியும்!

நாகய்யாவும் காந்தம்மாவும் வருகிருர்கள்.

நாக : சரியா சொன்னே ராமு!

ராமு: போதும் போதும்! இவ்வளவு தூரத்துக்கு வந்திருக்கிறது உன்னுலேதான். வேலே வெட்டி இல்லாமெ திரிஞ்சா?

நாக: என் கையிலே என்னடா இருக்கு? எல்லாம் அம்மா குடுக்கற செல்லம்.

காந்: ஆமா! ஐயா பல்லக்கிலே ஏத்திவச்சா அம்மா என்ன செய்வாங்களாம். என்ன இருந்தாலும் அந்த வம்சபுத்தி எங்கே போகும்?... போடி வூட்டுக்கு!

ராமு தன் தம்பியின் ஆங்கிலத் 'தேர்ச்சி'யைக் கண்டு மகிழ்ந்து போகிருன். இதை யாவரிடமும் சொல்லிக் கொள்ளுகிருன். சங்கர் கலெக்டராகி விடுவான் என்பது ராமுவின் எண்ணம். இதைக் காந்தம்மாவிடம் கூறுகிருள் கௌரி.

கௌ : அம்மா, அம்மா! கேட்டியா? கலெக்டரு ஆகப்போருரும்மா!

காந் : யாருடி?

கௌ : சங்கர் தாம்மா!

காந் : அவன் கலெக்டர் ஆயிட்டா உன் மடியிலே என்ன விழப் போகுதடி? உன்னையா திரும்பிப் பார்க்கப் போருன் அவன்? எந்தப் பெரிய தொரைசானி வருவாளோ அப்போ?

கௌ : சீ, போ!

நேரே சங்கரிடம் ஓடி வருகிருள் அவள்.

கௌ : தண்டமுங்க தொரைங்களே! ...உங்களைத்தான்!

சங் : ஏய்!

கௌ : தண்டமுங்க!

சங் : இதெல்லாம் என்ன வேஷம்?

கௌ : சித்தம், சித்தம்! இப்பவே அவ்வளவு கோபம் வந்தா எப்படிங்க?

சங் : என்னடாது, இப்ப ஏதாவது சொல்லப்போறியா இல்லையா?

கௌ : அதே தானுங்க! ஒண்ணும் இல்லாத சமயத்திலேயே இவ்வளவு கோபம் வருதே. அப்புறம் கலெக்டர் தொரையாயிட்டா எப்படியிருக்கப் போவுதோன்னுதான்...

சங் ; ஓ, அதுதானு சங்கதி?

கௌ: அதே தானுங்க தொரைங்களே!

சங்: ஊஹூம்! இவர் தொரையாயிட்டாருன்னு அப்ப நீங்க தொரைசானி ஆயிடுவீங்கல்ல!

கௌ: ஹூம்! அந்தப் பேச்செல்லாம் இப்பத்தான். அப்புறம் எங்கே ஞாபகம் இருக்கப் போவுது. இந்தப் பட்டிக்காட்டு பொண்ணை பத்தி.. எந்தப் பட்டணத்துத் தொரைசானி வேணுமோ?

சங்: சே! அப்பிடியானு எனக்கு கலெக்டர் உத்தியோகமே வேண்டாம்.

கௌ: ஏன்?

சங்: என் தொரைசானியை விட்டுட்டுப் போகணுமே. அதுக்குத்தான்.

கடையிலே பெருமாளும் நாராயணனும் சங்கரைப்பற்றி ராமுவிடம் கூறுகிறார்கள். ராமு சங்கரைத்தேடி வருகிறான். அதை யறியாத கௌரியும் சங்கரும் விளையாடுகின்றனர். ஒரு சிறு மரக்கிளையால் சங்கரை அடிக்க வருகிறாள் கௌரி.

கௌ: என் பேச்சுக்காவரேறு! எங்கே கை நீட்டு. கையை நீட்டு... உம்..

சங்: ஸார்...ஸார். இல்லே ஸார்! .. ஏன் அடிக்காமெ விட்டுட்டே?

கௌ: உன்னை மன்னிச்சுட்டேன், போ! ...ஐயையோ! பெரிய அத்தான்.

ராமு: நல்லாருக்குடா, நல்லாருக்குடா! இததானு உன் படிப்பு? உனக்கு எத்தனை தடவை சொல்றது? அவ ஒருத்தி கெடைச்சா கும்மாளம் அடிக்கிறதுக்கு!

சங்: இல்லேண்ணு! இவ்வளவு நேரம் படிச்சிட்டு இப்பத்தான் வந்தேன்!

ராமு: ஆஹா! தெரியுதே உன் படிப்பு? எனக்கென்ன கண்ணில்லேன்னு நெனைச்சுக்கிட்டியா?

சங்: எப்பவும் புஸ்தகமும் கையுமா இருந்தாதான் படிப்பு! இல்லேன்னு இல்லியா?

ராமு: மூட்ரு வாயை; அதிகப்பிரசங்கி! எதிர்த்துப் பேசக்கூடவா ஆரம்பிச்சுட்டே! வாடா சொல்றேன் உன்னை, வாடா!

சங்கரை ராமு ஒரு அறைக்குள் தள்ளிவிடுகிறான். சங்கர் உட்புறம் கதவைத் தாளிட்டுக் கொண்டு விடுகிறான். ஜன்னல் வழியாக கௌரியை அவன் கூப்பிடுகிறான்.

சங்: பார்த்தியா! அங்கே இருந்து இந்த ரூம்லே அடைச்சி வச்சிட்டாரு.

கௌ: ஒனக்கு வேண்டியதுதான். பின்னெ படிக்காமெ பெண்புள்ளைங்களோடு தோட்டந்தொறவிலே சுத்திகிட்டிருக்கிறியா!

சங்: இல்லே கௌரி! நீ கூட அப்பிடி சொன்னு எப்பிடி! நானு அந்தப் பொண்ணை 'லவ்' பண்ணினேன்.

கௌ: சே...போ!

சங்: பாரு கௌரி! எனக்கு ரொம்ப பசியாயிருக்கு. சாப்பிட ஏதாச்சியும் கொண்டு வந்து கொடுக்கறியா?

கௌரி சென்று நிறைய வாழைப் பழங்களைக் கொண்டு வருகிறாள்.

சங்: அப்பா! இவ்வளவு எதுக்கு?

கௌ: உம் சாப்புடு! அப்புறம் எப்போ விடுதலையோ?

சங்: உஷ்...

ராமு தாயிடம் வருகிறான்.

ராமு: அம்மா சாதம் போடும்மா. சீக்கிரம் போகணும்...

சங்கர் உரக்க படிக்கிறான்.

ராமு: சங்கர் எங்கேம்மா?

சாந்: அவனுக்குத்தான் சாப்பாடு போடாதேன்னு சொன்னியேடா.

ராமு: யாரு, நானு? ஒரு வேளை கோவத்திலே அப்பிடிச் சொன்னேனே என்னவோ. அதுக்காக